யாழ். மாநகர சபை
16 JUN 2023
நூலகப்பகுதி

அமரர்

# திரு. செபமாலை

அவர்களின் நினைவாக வெளியிடப்பட்ட

# நினைவுத் தொகுப்பு மலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**முன் அட்டை:**

அமரர் திரு. செபமாலை அவர்களின் நினைவுக் கல்லறையின் நிழற்படம் அவரது மகன் திரு. ஆசீர்வாதம் என்பவரால் 1991ம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இது தற்சமயம் இல்லை. சில, பல காரணங்களால் செபமாலை மாதா ஆலய நிர்வாகத்தினரால் உடைக்கப்பட்டு பின் அகற்றப்பட்டது.

**பின் அட்டை:**

அமரர். திரு. செபமாலையுடைய முதல் நினைவுக் கல்லறை அகற்றப்பட்ட பின்பு ஜெர்மன் நாட்டில் வாழ்ந்த மகள் திருமதி. எட்வேட் பிலோமினா என்பவரால் 2015ம் ஆண்டு மீண்டும் புதிதாக உருவாக்கப்பட்ட அமரர். திரு. செமமாலை அவர்களுடைய புதிய நினைவுக் கல்லறை.

*பின் அட்டையின் உட்புறம்:*

*கனடா நாட்டில் உள்ள அமரர். திரு. செபமாலையினுடைய மனைவி. திருமதி. மேரி மரியம்மா அவர்களுடைய நினைவுக் கல்லறை*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

யாழ். மாநகர சபை
16 JUN 2023
தாபனப்பகுதி

அமரர்

# திரு. செபமாலை



மண்மகிழ் 24.04.1905

கண்நெகிழ 24.04.1989



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை



அன்பிற்குரிய அன்பான சொந்தங்களே! அமரர் திரு. செபமாலை அவர்களுடைய மரணநாள் நிகழ்வுகள் எந்தவொரு ஜாதி, மத அடையாளங்களோ அல்லது கட்சிகளோ, குழுக்களோ பொது அமைப்புகளோ சார்ந்ததாக இருக்காது. ஏனென்றால் அமரர் திரு. செபமாலையுடைய அனேக சொந்தக்காரர்கள் கத்தோலிக்க மதத்திலும் மற்றும் பலர் சைவசமய மதத்திலும் இருக்கின்றனர். மற்றும் அவருடைய பேரப்பிள்ளைகளில் சிலர் பெந்தக்கோஸ் போன்ற மாற்று மதங்களிலும் சிலர் ஜெகோவாவின் சாட்சிகளாகவும் இன்று மதங்கள் மாறியிருக்கின்றனர். இவற்றைவிட மேலும் செபமாலை மாதா ஆலய பங்கில் முன்பு இருந்தவர்களில் சிலர் இன்று இஸ்லாம் மதத்திற்கும் மதம் மாறி வாழ்ந்து வருகின்றனர். அதனால் எம் அன்பான சொந்தங்களே! நீங்கள் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் விருப்பப்படி தங்களுடைய ஜாதி, மத, கலாச்சார சம்பிரதாயம் மற்றும் கட்சிகள், குழுக்கள், அமைப்புக்கள் என்ற அடையாளங்களோடு வாழ்ந்து வருகின்றீர்கள். அதனால் நாங்கள் உங்கள் அனைவரையும் அன்போடு நேசிப்பதால் அமரர் திரு. செபமாலை அவர்களுடைய நினைவுநாளை எந்தவொரு அடையாளங்களும் இல்லாமல் நாம் அனைவரும் அன்போடு ஒன்றுகூடி நினைவுகூர்ந்து அனுஷ்டிப்போம். அன்பானவர்களே! கடவுள் எங்களில் அன்பாக இருக்கிறார். அதேபோல நாங்களும் ஒருவருக்கொருவர் அன்பாக இருக்க முயற்சி செய்வோம். எனென்றால் அன்பு திரளான பாவங்களை இல்லாமல் ஒளித்துவிடும் என்று என் கடவுள் சொல்லுகிறார். (பைபிள் இருந்தால் தயவு செய்து ஒன்று பேதுரு 4ம் அதிகாரத்தின் 8ம் வசனம் பாருங்கள்).

நன்றி

அன்புடன்

எட்வேட் ஜேசுதாசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை

அன்பானவர்களே! செபமாலை அவர்களுடைய இந்த நினைவு நாள் மலரில் அவருடைய வாழ்க்கையையும் வரலாற்றையும் நான் இங்கு சுருக்கமாக பதிவு செய்கிறேன். அன்பர்களே செபமாலை அப்பு என்பவர் யார்? அவர் இந்த ஊர் மக்களுக்கு என்ன செய்தார்? ஏன் எதற்காகச் செய்தார்? யாருக்காகச் செய்தார்? போன்ற விபரங்களை இந்த நினைவு மலர் மூலம் உங்களுக்கு அறியத் தருகிறேன். அவர் ஒரு சைவசமையக் குடும்பத்திலிருந்து இருந்து ஏன் எப்படி கிறீஸ்தவமதம் மாறினார். மற்றும் அவர் ஒரு பாடசாலை உருவாக்க ஆசைப்பட்டாரா? ஏன் அவர் ஆசைப்பட்டார். அது நிறைவேறியதா? அப்படியானால் அதை உருவாக்க எப்படிக் கஸ்டப்பட்டார். அந்தப் பாடசாலை எது? இப்போது அந்தப் பாடசாலையின் நிலையென்ன? கோவில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம் என்ற ஒரு பழமொழியுண்டு. அதனால் அமரர். செபமாலை ஒரு கோவில் உருவாக்க எண்ணினார். அதன்காரணமாக ஊர் மக்களுடைய ஒத்துழைப்புக்களுடன் ஒரு கோவிலை உருவாக்கினர். அந்தக் கோவில் எது? அதன் இன்றைய நிலையென்ன? அவருடைய குடும்பப் பின்னணி என்ன? அவர் தன் வாழ்நாட்களிற் பட்ட கஸ்ட நஸ்டங்கள் என்ன? ஏன் எதற்காகக் கஸ்டப்பட்டார்? அவருடைய சொந்தபந்தங்கள் யார் யார்? அவருடைய மனைவி பிள்ளைகள் யார் யார்? இப்போது அவர்கள் என்ன செய்கிறார்கள்? போன்ற ஏராளமான பதிவுகளை இந்தப் புத்தகத்தின் வாயிலாக உங்களால் அறியமுடியும். அன்பானவர்களே! செபமாலை அப்பு தானும் தன் முன்னோர்களும் பிறந்து வளர்ந்த ஊராகிய வெள்ளாம் போக்கட்டி என்ற மண்ணை எவ்வளவு தூரம் நேசித்தார். அதற்கு அடையாளமாக அந்த மண்ணிலிருந்த மரம் செடிகொடிகள் பறவை மிருகங்களையும் எப்படியெல்லாம் அறிந்தும் புரிந்தும் வைத்திருந்தார். என்பதற்கு இந்தப் புத்தகம் ஒரு சாட்சியாக அமையும் என்று நினைக்கின்றேன். அதே சமயம் இந்த ஊரையும் ஊர் மக்களையும் அவர் வெறுத்தாரா? அப்படி வெறுத்தால் என்றால் ஏன் வெறுத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் தனது வாழ்நாட்களின் கடைசிக்காலங்களில் எங்கு வாழ்ந்தார்? இதுபோன்ற பல விடயங்கள் இம்மலரில் எழுதப் பட்டுள்ளது. அன்பானவர்களே! மௌனமாக இருந்து செபமாலை அப்பு செய்த பல செயல்கள் பலரும் அறியாத விடயமாக இருக்கிறது. இவற்றை எல்லாம் நான் உங்களுக்கு தெரியப்படுத்தாது விட்டால் செபமாலை அப்பு அவர்கள் வெள்ளாம்போக்கட்டி ஊர் மக்களுக்கு செய்த தியாகங்கள் யாருக்குமே அறிந்திருக்க வாய்ப்பே இருக்காது. அவைகள் அனைத்தும் மறைந்து மண்ணோடு மண்ணாகிவிடும். அப்படி நாம் செய்வோமாக இருந்தால் அவைகள் செபமாலைக்குச் நாம் செய்யும் துரோகம். அதைக் கடவுள்கூடப் பொறுக்க மாட்டார். இப்படி நீங்கள் செபமாலை அப்பு அவர்களைப்பற்றி அறிந்திராத நல்ல பல செய்திகள் இந்த நினைவு மலரில் எழுதியிருக்கிறேன். இந்த நினைவு மலரில் எழுதியிருக்கும் விடயங்கள் அத்தனையும் செபமாலை அவர்களிடமும் அவருடன் சமகாலத்தில் வாழ்ந்த அந்த ஊர் மக்கள் பலரிடமும் பல ஆண்டுகளாகச் சேகரிக்கப்பட்டு எழுதப்பட்டவை. இவைகளில் ஒன்றுகூட திரிபுபடுத்தபட்டு எழுதப்பட்டவை கிடையாது. இந்த செபமாலை அப்பு அவர்களுடைய நினைவு நாள் மலரில் எழுதப்பட்ட அத்தனை விடயங்களும் உண்மையான செய்திகள் என்பதனை செபமாலை அப்பு அவர்களுடன் வாழ்ந்த வெள்ளாம் போக்கட்டிவாழ் மக்கள் அனைவரும் அறிந்திருப்பார்கள் என்று நான் நம்புகிறேன்.

"நன்றி மறப்பது நன்றன்று
நன்றன்று அன்றே மறப்பது நன்று"

(திருக்குறள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைவன் தந்த இயற்கையின் கொடைகள்

## வெள்ளாம்போக்கட்டி

இலங்கைத்தீவின் வடமாகாணத்தின் யாழ் மாவட்டத்திற்குட்பட்ட தென்மராட்சிப் பகுதியில் கொடிகாமம் என்ற ஒரு நகரம் இருக்கிறது. அந்த நகரத்தில் இருந்து தெற்குத் திசை நோக்கி சுமார் இரண்டு கிலோமீற்றர் பயணம் மேற்கொண்டால் கிராம அலுவலர் பிரிவு 323 எண் இலக்கப் பிரிவில் வெள்ளாம்போக்கட்டி என்கின்ற சின்னஞ் சிறிய அழகிய கிராமம் இருக்கிருக்கிறது. அந்த ஊரில் வல்லிபுரம் சின்னாச்சி தம்பதியினருக்கு முதல் மகனாக 24.04.1905ம் ஆண்டு சின்னத்தம்பி பிறந்தார். இவர் பின்நாட்களில் தன் பெயரை செபமாலை என்று மாற்றிக்கொண்டார். இவர்கள் தங்களுடைய ஊர் உறவுகளுடன் வெள்ளாம்போக்கட்டி மண்ணில் பரம்பரையாக பலநூறு ஆண்டுகளாக வாழ்ந்து வந்தனர். இவர்களிடம் மிகப் பெரிய நிலபுலன்கள், நீண்ட நெடிய விவசாய நிலங்கள், தென்னந் தோப்புக்கள் மற்றும் எண்ணற்ற பல கால்நடைகள் இருந்தன. இப்படி இவர்களுடைய அன்றையகால வாழ்க்கை மிகவும் சீரும் சிறப்புமாக சந்தோசமாக இருந்தது. பிற்காலத்தில் வந்த சமூதாய மாற்றத்தினால் அவ்வூர் மக்கள் பலதரப்பட்ட பல்வேறு ஒடுக்கு முறைகளுக்கு ஆளாக்கப்பட்டனர். ஆனாலும் செபமபலை என்பவர் அவற்றை ஒரு பொருட்டாகவே கருதியது கிடையாது. காரணம் யார் என்ன செய்தாலும் எந்த ஒரு பிரச்சனையையும் அவர் அன்போடு அணுகி எதிரியுடைய உள்ளத்திலும் இடம்பிடிப்பார். கடவுளுக்கு உண்மை மனதோடு அடிபணிந்து நடந்தார். கடவுளைக் காணமுடியாது என்று செபமாலை அவர்களுக்கு நன்றாகவே தெரியும். ஆனால் கடவுளால் உண்டாக்கப்பட்ட இயற்கையினூடாக அவர் கடவுளைப் பார்த்தார். இயற்கை அவருக்கு மிகவும் பிடித்திருந்தது. அதனால் அவர் இயற்கையை அன்புகொண்டு நேசித்தார். தான் பிறந்த மண்ணுடைய அனைத்து இயற்கை வளங்களை கடவுள் எப்படி உருவாக்கி எங்களுக்குத் தந்தார் என்பதை தினமும் பார்த்துப் பார்த்து அவரது நேரத்தை செலவு செய்ததால் அவருடைய காலமும், நேரமும் வாழ்நாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுவதும் இனிமையாகவே நிறைவு பெற்றது என்று சொல்ல முடியும். அதனால் அவருடைய இந்த நினைவுநாள் மலரில் “வெள்ளாம்போக்கட்டி மண்ணில் இறைவன் தந்திருக்கும் இயற்கையின் கொடைகள்” என்ற தலையங்கத்தில் என்னைத் எழுதத் தூண்டியது. அதனால் எனக்குத் தெரிந்த வெள்ளாம் போக்கட்டி மண்ணிலுள்ள சில இயற்கை வளங்களை இந்த நினைவு மலரூடாக எழுத ஆசைப்படுகிறேன்.

## காட்டு மரங்கள்


நாவல்


வேம்பு


வாகை


விடத்தல்


பனிக்கை

நாவல்: இந்த மரம் மீன் பிடிப்பவர்கள் கட்டுமரம் செய்யப் பயன்படுத்துவார்கள். காரணம் இது எவ்வளவு காலம் கடல்நீரல் மிதந்தாலும் பழுதுபடாது. புளி: இதனுடைய பழங்கள் சமையலுக்குப் பயன்படுத்துவார்கள். மற்றும் இந்த மரத்தடியில் இரவு நோரங்களில் இருக்கக் கூடாது என்று சொல்வார்கள். காரணம் மற்ற மரங்களைப் போல் அல்லாது இந்த மரம் இரவு நேரங்களில் தனது சுவாசத்தை மாற்றி கரியமிலை வாயுவாக வெளியிடுகின்றது. அதனால் நமது சுவாசத்திற்கு எதிர்மாறாக இருப்பதால் அது நமக்கு மூச்சுத் திணறலை உண்டு பண்ணும். வேம்பு: வலிமையானது. கசப்புத் தன்மை கொண்டது. வாகை: தமிழர்களுடைய வெற்றிக்கு இந்த மரம் ஒரு அடையாளமாகக் கருதப்படும் ஒரு தேசிய மரம். விடத்தல்: முட்கள் நிறைந்த ஒரு மரம். பனிக்கை: பனிக்கை காய்களில் இருந்து வரும் பிசின்போன்ற திரவத்தை நோவுபட்ட இடங்களில் போட்டால் இரண்டு மூன்று நாட்களில் அந்த நோவு மாறிவிடும். பூவரசு: இதனுடைய இலைகள் பலவற்றைச் ஒன்று சேர்த்து இங்குள்ள மக்கள் உணவுப் பாசல் கட்டுவார்கள். கிளுவை:, முட்கிளுவை:, கிளிசறியா: இவற்றைப் பயன்படுத்தி வேலி அடைப்பார்கள். இலுப்பை: இதனுடைய விதையிலிருந்து எண்ணை எடுப்பார்கள். மூங்கில்: இதைப் பயன்படுத்தி புட்டுக்குழல் மற்றும் புல்லாங்குழல் இசைக் கருவியும் செய்ய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியும். கறிவேப்பு: இதனுடைய இலைகள் சமையல் வாசனைக்காகப் பயன்படுத்துவார்கள். புன்னை: இதனுடைய காய்களை உரசினால் தீப்பெறி உண்டாகும். வெள்ளெருக்கு: இது ஒரு பயனற்ற மரம். இலை, மரம் எல்லாமே வெள்ளையாக இருக்கும். முள்முருக்கு: எங்கள் ஊர்களில் உள்ள சைவசமைய நண்பர்களுக்கு திருமணம் நடைபெற்றால் திருமணநாள் நினைவாக இந்த மரத்தை வீட்டு வளவில் நாட்டுவார்கள். இது அவர்களுடைய ஐதீகமாக இருந்தது. ஆனால் இப்போது அந்த நடைமுறை கிடையாது.


நறுவிலி


கருங்காலி

பெருபெருக்கை: இதனுடைய இலையில் தான் பீடி சுற்றுவார்கள். இதனுடைய இலை மிகவும் பெறுமதி வாய்ந்தது. நறுவிலி:, பன்னை:, முட்கரும்பு:, காரை: இதனுடைய பழங்கள் சாப்பிடக் கூடியவை. ருசியாகவும் இருக்கும். பாலை:, முதிரை:, தேக்கு: ஓங்கிவளரும் வலிமையான மரங்கள். இவை வீட்டு தளபாடப் பவனைகளுக்காகப் பயன் படுத்து வார்கள்.



காரைச்செடி

மரமுந்திரி: இதனுடைய விதை பழங்களின் வெளிப்புறத்தில் இருக்கும். நொச்சி: குழந்தை பெற்ற பெண்களுடைய உடல் நோவைப் போக்குவதற்காக இதனுடைய இலைகளை சுடுநீரில் கலந்து நீராட்டுவார்கள்:


நொச்சி


மஞ்சலுனா

றம்மரம்: இதனுடைய காய்கள் மிகவும் பெரிதாக இருக்கும். முன்னோர்கள் இந்தக் காயைப் பயன்படுத்தி மதுபானம் தயாரிப்பார்கள். ஆனால் இப்போது இது ஒரு பயனற்றமரம். மஞ்சலுனா: இந்த மரம் மஞ்சள் நிறமாகவே இருக்கும். கருங்காலி: இந்த மரம் வலிமையானது மிகவும் கறுப்பாகவே இருக்கும். பெறுமதிமிக்கது. கொக்கட்டி: இது ஒரு பயனற்ற காட்டு மரம். கமுகு:


கமுகு
(பாக்கு மரம்)

இவை பனைமரம் போன்று நீண்டு வளரும். இவற்றிலிருந்து வீட்டுக்கூரை அமைப்பதற்கு சிலாகை செய்யமுடியும். பனை: இதற்கு விளக்கம் தேவைப்படாது. அனைவரும் அறிந்ததே. இது ஒரு கற்பகதரு. கூளா: இதனுடைய பழங்கள் புளித்தன்மை கொண்ட மிகவும் ருசியான பழம். பொட்டுப்புளி: அனேகமானோர் இதனை பட்டுப்புளி என்றும் சொல்வார்கள். இதனுடைய பழங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெற்றியில் வைக்கும் பொட்டுப் போலவே இருக்கும். புளித்தன்மை கொண்டது. இந்தப்பழம் சிறுவர்களுக்கு மிகவும் பிடிக்கும். கொய்யா: இந்த மரத்தையும் எல்லோரும் அறிவார்கள். இதனுடைய பழங்கள் எல்லோருக்கும் பிடிக்கும். மேலே எழுதப்பட்டுள்ள அனைத்து காட்டு மரங்களும் என்னும் பலவகை காட்டு மரங்கள் என்னுடைய காலத்தில் தென்மராட்சிப் பகுதிகளில் இருந்தன இவைகளில் பலவகை இப்போது அழிந்துவிட்டன. மற்றவைகள் அழிவின் விழும்பில் இருக்கின்றன.




## காட்டுச் செடி கொடிகள்

நறுவிலி:, பன்னை:, காரை:, முட்கரும்பு: இவை எல்லாமே செடி வகைகள். இதனுடைய பழங்கள் எல்லாமே இனிப்பு, விழுவிழுப்பு, கசப்பு, புளிப்பு என ஒவ்வொன்றும் தனித்தனிச் சுவை கொண்டவை. எல்லாமே சாப்பிடக் கூடியவைகள். பற்றை: இது அடர்த்தியாக வளரும் ஒரு செடிவகை. வேலிகள் அடைப்பதற்கு பயன்படுத்துவார்கள். இதனுடைய பூக்கள் நீலநிறம். அழகானவை. காண்டை: வெள்ளை நிறம். சூரை: கறுப்பு நிறம். இவை சிறியவகை முட்கள் நிறைந்த ஒரு கொடிவகை. இவற்றைப் பயன்படுத்தி கோழிக்கரப்புச் செய்வதற்குப் பயன்படுத்துவார்கள். குண்டுமணிச்செடி: இதனுடைய விதைகள் கறுப்பு, சிவப்பு நிறம் உடையது. எல்லாம் ஒரே அளவு, நிறை கொண்டது. பெரும்பாலும் தங்கத்தை நிறை போட இதனுடைய விதைகளைப் பயன்படுத்துவார்கள். கார்த்திகைப்பூ: இதுவும் படரும் ஒரு கொடிவகை இனம் கார்த்திகை மாதத்தில் மட்டும்தான் பூக்கள் பூக்கும். சிவப்பு மற்றும் மஞ்சள் நிறம் கலந்த அழகான நம் தேசிய மலர். கொடிச்செடி: இது தரையில் மிக மிக நீண்டதூரம் படரும் ஒரு கொடி. இந்தக் கொடியைப் பயன்படுத்தி வேலி அடைப்பதற்கும் வீடு வெய்வதற்கும் ஏன் பல கொடிகளை ஒன்றுசேர்த்து திரிவு செய்து கால்நடைகள்கூடக் கட்டிவைக்க முடியும்.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூத்துமான் கொத்தன்: இதற்கு இலைகள் இருக்காது. தும்புதும்பாக இருக்கும். படரும் ஒரு கொடிவகை. நெருஞ்சி: இதனுடைப பூக்கள் உதிர்ந்தால் முட்களாக மாறிவிடும். இவை இரண்டையும் பயன்படுத்தி தலை முழுக்குச் செய்வார்கள். சாத்தாவாரி: இலைகள் இருக்காது. படரும் கொடி இனம். முசுட்டை: இதனுடைய இலைகள், காய்கள் எல்லாமே சமையலுக்குப் பயன்படுத்துவார்கள். மிகவும் சத்துக்கள் நிறைந்த சுசீகரமான உணவு. நன்னாரி: இதனுடைய வேர்களை உலரவைத்து பொடியாகச் செய்து, அந்தப் பொடியை தேனீரில் கலந்து குடித்தால் அது ஒருவகைச் சுவையைத்தரும். கோரோசனை: இதனுடைய வேர்ப்பகுதியில் சிறு கிழங்குகள் காணப்படும். இந்தத் கிழங்கும் வாசனை தரக்கூடியது. சிலர் இதனையும் தேனீரில் கலந்து குடிப்பார்கள். அடம்பன்: இது ஒரு வலிமை இல்லாத கொடியினம் இந்தக் கொடிக்கு "அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு" என்று ஒரு பழமொழி இருக்கிறது. முல்லை, தூதுவளை: இவை இரண்டும் மிகவும் மருத்துவக் குணம் செறிந்த கொடிவகை. இதனுடைய இலைகளை சமையலுக்காகப் பயன்படுத்துவார்கள். குமிழ்: இதனுடைய பழங்களுடன் விதைகள் ஒட்டாமல் இருக்கும். இந்த விதையை நீக்கிவிட்டு அதனுடைய பழத்தை கால், கை, நகங்களில் வருகின்ற வலிகளுக்குப் போட்டால் அவை ஒரே நாளில் மாறிவிடும். நாகதாழி: இதனுடைய இலைகளில் மிகவும் விஷத்தன்மை கொண்ட முட்கள் இருக்கும். இதனுடைய பழங்கள் ருசியானவை. தோல்பகுதி பச்சையாகவும் உள்பகுதி சிவப்பாகவும் இருக்கும். அனேகமாக இது விஷப் பாம்புகளின் சரணாலையமாகவும் இருக்கும். பிள்ளைக்கற்றாளை: இதனுடைய இலைகள் தடிமனாக இருக்கும். இது பல நோய்களுக்கு மருந்தாகும். முக்கியமாக மூல நோய்களுக்கு அருமருந்தாகும். வரியிலைக் கற்றாளை: இதனுடைய இலைகளில் மேல் அடர்த்தியாக வெள்ளைநிற வரிகள் காணப்படும். நாயுண்ணி: இந்தச் செடியின் பூக்கள் பார்வைக்கு அழகானவை. பழங்கள் நாயிலிருக்கும் உண்ணி போல இருக்கும். நாயுருவி: இந்தச்












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செடியின் தண்டுப்பகுதிகள் முழுவதும் இலகுவில் உதிரக்கூடிய சிறியவகை முட்கள் காணப்படும். யாராவது இந்தச் செடிக்கு அருகில் சென்றால் உடலில் ஒட்டிக்கொண்டு வலிகளை உண்டு பண்ணும். ஈஞ்சு: இது பேரீஞ்சு மரம் போன்று உயரமாக வளராது. இதனுடைய பழங்களும் பேரீச்சம்பழத்தைப் போன்ற சுவை தரும். ஆனால் சிறியவகை. தேத்தாவாரி: இதனுடைய விதைகள் அசுத்தமான நீரைச் சுத்தம் செய்யக்கூடியது. பெரும்பாலும் இதனைக் கிணற்று நீரைச் சுத்தம் செய்வதற்காகக் கிணற்றுக்குள் போடுவார்கள். தேங்காப்புக்கீரை: இதனுடைய பூக்கள் தேங்காப்பூவைப்போல இருக்கும். இந்தப் பூக்களை நீரில் கலந்து சுடாக்கிக் குடித்தால் சலக்கடுப்பு என்ற நோய் மாறிவிடும்.




கீழ்க்காய்நெல்லி: இது மிகச்சிறிய ஒரு செடி. இதனுடைய இலைகளின் கீழ்ப்பகுதியில் வரிசையான காய்கள் காணப்படும். இந்தச் செடியை அரைத்து மழைக்காலங்களில் வருகிற நீர்ச்சிரங்குப் புண்களுக்குப் போட்டால் அவை மாறிவிடும். பொருத்துமான்: இது ஒரு படரும் செடி. இதனுடைய பலன்கள் ஏராளம். குறிப்பாக எந்த வெட்டுப்பட்ட காயங்கள் என்றாலும் இதன் இலைகளை அரைத்து வெட்டுப்பட்ட காயத்தில் வைத்துக் கட்டிவிட்டால் அந்தக்காயம் ஓரிரு நாட்களில் மாறிவிடும். மற்றும் இதனுடைய இலைகளை கீரைப்பிட்டு போலவே அவித்தும் சாப்பிடுவார்கள். பெரும்பாலும் குழந்தை பெற்றவர்களுக்குக் கொடுப்பார்கள். கொவ்வை: இது ஒரு படரும் கொடி. இதனுடைய பழங்கள் சிவப்பு நிறம். கவிஞர்கள் அழகான பெண்களுடைய உதட்டிற்கு இதனுடைய பழத்தை ஒப்பிட்டு கவிதை மற்றும் பாடல் பல பாடியிருக்கிறார்கள். இந்தப் பழம் பார்ப்பதற்கு அழகாகவும் உண்பதற்குச் சுவையாகவும் இருக்கும். பூனைக்கிழாஞ்சி: இதுவும் ஒரு படரும் செடி. இதனுடைய பழங்கள் தோலோடு ஒட்டிக்கொள்ளாது. தோலைப் பித்தவுடன் இதனுடைய பழங்கள் பல சிறிய விதைகள் கொண்ட சுசியான வெள்ளைநிறப் பழம். ஆடாதோடை, குப்பைமேனி: இவை இரண்டும் பல வியாதிகளுக்கு மருந்தாகும். அற்புத மூலிகைச் செடிகள். பிரண்டைத்தண்டு: இது தண்டுதண்டாகப் படரும் வித்தியாசமான செடி. இதனுடைய தண்டுப்பகுதியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்களது தாத்தா பாட்டிகள் சமையலுக்குப் பயன் படுத்தியவர்கள். அனேகமாக இதனை இன்று பயன்படுத்துவது கிடையாது. கிலுகிலுப்பை: இது தனது தண்டுபகுதி முழுவதும் பூப்பதாகும். இதனுடைய பூக்கள் உதிர்ந்த பின்னர் சிறுவர்கள் விளையாடும் கிலுகிலுப்பை போன்று காணப்படும். இங்குள்ள சிறுவர்கள் இதனை வைத்து விளையாடுவார்கள். சொட்டி: இது ஒரு படரும் கொடி. இதனுடைய காய்களை சிறுவர்கள் நெற்றிகளில் அடித்து விளையாடுவார்கள். அப்போது ஒருவகைச் சத்தம் வரும். அதனால் அவர்கள் சந்தோசம் அடைவார்கள். தேமா, மகிழ்பூ: இந்தனுடைய பூக்கள் வாசனை தரக்கூடிய அழகான பூக்கள். இந்த இரு பூக்களையும் கவிஞர்கள் விட்டு வைக்கவில்லை. இப்பூக்களை வைத்து பல பாடல்கள் பாடியிருக்கின்றனர்.


தேமா

குமுட்டில்: இது ஒரு காட்டுக் கீரை. இதில் பலவகைச் சத்துக்கள் நிறைந்து காணப்படுகிறது. மிகவும் சுசீகரமான உணவு. பருத்தி: இதிலிருந்து பஞ்சு எடுக்க முடியும். இலவு: இதிலிருந்தும் பஞ்சு எடுக்கமுடியும். இதனுடைய பழத்தை யாரும் எழுதில் கண்டுபிடிக்க முடியாது. ஏனென்றால் காய்களும் பழங்களும் பச்சை நிறமாகவே இருக்கும். அதனால் ஒரு கிளிப்பறவை இது காயா? அல்லது பழமா? என்று தெரியாமல் காவல் காத்து ஏமாந்து போனது என்று சொல்வார்கள். ஏமாறும் மனிதர்களைப் பார்த்து “இலவுகாத்த கிளி” என்று ஏளனமும் செய்வார்கள். கவலைக்கிழங்கு: இந்த கொடியை ஒரு சிலரைத்தவிர அனேகமான மக்கள் அறிந்திருக்க வாய்ப்பில்லை. ஆனால் இன்றும் இது வெள்ளாம்போக்கட்டி மண்ணில் எராளமாக நிறைந்து காணப்படுகிறது. இதனுடைய வேர்ப்பகுதியில் சிறு சிறு கிழங்குகள் காணப்படும். இதனை வேட்டைக்குப் போகிறவர்கள் அங்கு இதனுடைய கிழங்குகளைச் சேகரித்து சுட்டுச் சாப்பிடுவார்கள். சற்று விழுவிழுப்பாக இருக்கும். நீர்க்கொடிமரம்: இதனையும் பலர் அறிந்திருக்க வாய்ப்பில்லை. இது ஒரு தடித்த கொடிவகையைச் சேர்ந்தது. இதனுடைய கொடியை வெட்டும்போது நீர் சுரந்து வரும். வேட்டைக்குப் போகிறவர்களுக்குத் தாகம் ஏற்பட்டால் இதனுடைய கொடியை வெட்டி நீர் எடுத்துக் குடிப்பார்கள். குருவிச்சை:


பருத்தி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது ஒரு ஒட்டுண்ணித் தாவரம். மரங்களில் பறவைகளின் எச்சத்தினால் இது உருவாகும். பனங்கத்தாழை: இதுவும் ஒரு ஒட்டுண்ணித் தாவரம். இது அனேகமாக பனை மரங்களில் வளரும். இதனுடைய இலைகள் மெல்லிய தடிமனாக இருக்கும். இதனை முறுக்கித் திருகும்போது சாறுவரும். அதனை காதுவலி ஏற்படும்போது காதுக்குள் விட்டால், அந்தவலி நீங்கிவிடும். நெல்லி: இதன் காய் கசக்கும். இதனிலிருந்துதான் நெல்லிரசம் தயாரிப்பார்கள். அரிநெல்லி: இதன்காய் புளிக்கும். தொட்டாவாடி: இதனுடைய இலைகளைத் தொட்டவுடன் உடனே சுருங்கிவிடும். காஞ்சோண்டி: இந்தச் செடியின் இலைகள் எங்கு பட்டாலும் உடனே வலி எற்பட்டு கடிக்கத் தொடங்கிவிடும். அத்தர், அறுகு, மந்து, காவிளாய், கோரை: போன்ற எண்ணற்ற இன்னும் பல புற்களிளின் வகைகள் எமது வெள்ளாம் போக்கட்டி மண்ணில் நிறைந்து காணப்படுகின்றது. கடற்கரை அண்டி வாழும். பட்டி: இது நட்சத்திரம் போன்ற அழகான சிவப்பு மற்றும் வெள்ளைநிறப்பூக்களைப் பூக்கும். இராவணன்மீசை: இதுவும் கடற்கரை அண்டிவாழும் ஒரு வலிமையான இதழிதலாக வளரும் ஒருவகைச் செடி. இதனுடைய இதழ்களின் நுனிப்பகுதியில் முட்கள் காணப்படும். இனி நீர் நிலைகளை அண்டிய பகுதிகளில் வளரும் தாமரை, அல்லித்தாமரை, நாணல், கோரை, கிடைச்சி, சூடன், கோழிச்சூடன்: இவற்றோடு புல்லாந்தி: இது ஒரு பலனற்ற வளையும் தன்மைகொண்ட பயனற்ற ஒரு கொடி மரம். நீர்த்தாழை: இந்தத்தாழைமரம் தாமரையைப் போலவே தண்ணீருக்குள்தான் வளர்ந்து நிற்கும். தெர்ப்பை: இது முக்கியமான ஒருவகை புல் இனம். சைவ சமைய நண்பர்களுடைய இன்ப, துன்பகரமான நிகழ்சிகளில் அவர்களுடைய குருக்கள் இந்தத் தெர்ப்பைப் புல்லினால் மோதிரம் செய்து சம்பந்தப்பட்டவர்களுடைய கைவிரல் களில் அணிவித்து அவர்களுடைய கடமைகளை செய்வது அவர்களுடைய ஐதீக மரபாக இருக்கிறது. மஞ்சள்அலரி: இந்தச் செடியிலுள்ள


கோரை


இராவணன் மீசை


நாணல்


தெர்ப்பைப்புல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூக்கள் அழகான மஞ்சள் நிறப்பூ. மாலைகட்ட இதனைப் பயன்படுத்துவார்கள். அலரி: இதனுடைய பூக்கள் சிவப்புநிற அழகான பூக்கள். ஆனால் இதனுடைய விதைகள் மிகவும் விஷத்தன்மை கொண்டது. காஞ்சூரை: இந்தச் செடியிலுள்ள விதைகளும் மிகவும் விஷத்தன்மை கொண்டது. ஆனால் இதனுடைய விதையை மிகவும் சிறிது சிறிதாக அன்றாடம் பாக்கு, வெற்றிலையுடன் சேர்த்து சாப்பிட்டு வந்தால் இதனுடைய விஷத்தன்மை மனிதர்களுடைய உடம்பில் சேர்ந்தால் அந்த மனிதர்களுக்கு எதுவும் நடக்காது. அதைவிட எந்தவகை விஷஜந்துக்கள் இவர்களைத் தீண்டினாலும் இவர்களுக்கு மரணம் வராது. இதற்கு சாட்சியாக இங்குள்ள ஒரு மனிதர் இருந்தார். அவரை இந்த ஊரில் இருக்கும் வயதான மக்கள் இன்றும் அறிவார்கள். அவருடைய பெயர் இன்று எனக்கு ஞாபகம் வரவில்லை. அன்பானவர்களே! நான் மேலே குறிப்பிட்டிருக்கும் செடி, கொடி இனங்களைவிட என்னும் அனேக செடி, கொடி இனங்கள் நமது தென்மராட்சிப் பகுதிகளில் மட்டும் காணப்படுகின்றன. இவைகளை நான் இங்கு குறிப்பிடக் காரணம், இவைகளில் அனேகமான கொடி, செடிகள் மருத்துவக்குணம் கொண்டவைகள். அன்பானவர்களே! அனைத்தும் ஒரு முப்பது வருடத்திற்கு முன்பு அன்றாடம் நம் கண்களின் முன்னால் காணப்பட்டவை. ஆனால் கவலைக் குரிய விடயம் என்னவென்றால், இவைகள் பெரும்பாலும் இன்றுள்ள இளைய சமுதாயத்தினர்களுக்குத் தெரியாது. காரணம் இவற்றில் பலவகைச் செடி, கொடிகள் இன்று அழிந்துவிட்டது. மற்றவை அழிவின் விழும்பில் இருக்கிறது. இவற்றை அழியவிடாமல் காப்பாற்ற முடியுமா? அப்படியானால் அவற்றை யார் காப்பாற்றுவார்கள்?


மஞ்சள் அலரி


அலரி


காஞ்சுரை


பட்டிப்பூ


தாமரைப்பூ


அறுகம்புல்


அல்லி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காட்டுப் பறவைகள்


காகம்

அன்பானவர்களே! ஒரு கிராமத்தில் மரம் செடிகொடிகள் இருந்தால் அங்கு கண்டிப்பாக பறவைகள் இருக்கத்தான் செய்யும். காரணம் அம்மரங்களில் தங்களுடைய கூடுகளைக்கட்டி வாழ்ந்து அவற்றிலிருந்துவரும் பழங்களைச் சாப்பிட்டு உயிர் வாழும் என்ற நம்பிக்கையுடன் தேடிவரும். அந்த வகையில் நமது வெள்ளாம்போக்கட்டி மண்ணில் வாழக்கூடிய பறவைகள் மிருகங்களைப் பார்ப்போம். முதலில் காட்டுப் பறவைகள் என்ன என்று பார்ப்போம், காகம்: இவைகளில் பல இனங்கள் இருக்கின்றன. முக்கியமாக சைவசமைய நண்பர்கள் தங்களுடைய விரத நாட்களில் தாங்கள் உணவு உண்ண முன்பு காகத்துக்கு முதலில் உணவைக் கொடுத்து பின்புதான் அவர்கள் உண்பார்கள். இது அவர்களுடைய ஐதீகம். அதைவிட கூடிவாழ்ந்து ஒற்றுமையையும் இது பழக்கமாகக் கொண்டுள்ள பறவை. புலுனி: இந்தப் பறவை இராமர் இலங்கை வருவதற்காக பாலம் கட்டும்போது அதற்கு இடஞ்சலாக இடையூறு விளைவித்ததாக ஒரு கதை இருக்கிறது. இந்தக் குருவி தத்தித் தத்தித்தான் நடக்கும். விரலி: இதுவும் புலுனிபோல உருவ ஒற்றுமை கொண்டது. ஆனால் இது தத்தித் தத்தி நடக்காது. புறா: இந்தப் பறவைகள் அனேகமாக எல்லா நாடுகளிலும் காணப்படும். இந்தப் பறவை அதிக ஞாபகசத்திகொண்டது. கிளி: இவைகளும் பலவகையுண்டு. பச்சைக்கிளி, பஞ்சவர்ணக்கிளி, வரிக்கிளி போன்றவை. இந்தப் பறவைகள் பயிற்றுவிக்கப்பட்டால் மனிதர்களைப் போல பேசவைக்க முடியும். மைனா: இந்தப் பறவை கறுப்பு நிறம். இதனையும் பயிற்றுவிக்கப்பட்டால் மனிதர்களைப்போல பேசவைக்க முடியும். குயில்: இது மிகவும் அழகாகக் கூவும். குயிலின் குரலைவைத்து கவிஞர்கள் பல பாடல்கள் எழுதியிருக்கின்றனர். ஆனால் இந்தக் குருவிக்கு கூடுகட்டத் தெரியாது. அதனால் இது காகத்தின் கூட்டில் தன் முட்டைகளை இட்டு குஞ்சு பொரிக்கச் செய்யும்.


புலுனி


மைனா


குயில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு புத்திசாலிக் குருவி. செண்பகம்: இந்தப் பறவையின் கண்கள் சிவப்பு மற்றும் கறுப்பு நிறமாக இருக்கும். அதேபோலத்தான் அதன் உடலமைப்பும் கறுப்பு, சிவப்பாக இருக்கும். அதன் தலைப் பகுதியும் வால் பகுதியும் கறுப்பு நிறமாகவும் இறக்கைகளும் அதன் உடல் பகுதிகளும் சிவப்பு நிறமாகவும் இருக்கும். இது ஒரு அழகான தேசியப் பறவை. பருந்து: வெள்ளை நிறம். வல்லூறு: சாம்பல் நிறம் இவையிரண்டிற்கும் பெரிய வேறுபாடு கிடையாது. இந்த இரண்டு பறவைகளும் எங்களால் வளர்க்கப்படும் கோழிகளுடைய குஞ்சுகளைத் திருடிச்சென்று தங்களுக்கு உணவாக்கிக் கொள்ளும். கரிக்குருவி: இது மிக மிகக் கறுப்பாக இருக்கும். யாராவது கறுப்பாக இருந்தால் இந்தக் குருவியின் பேயரைச் சொல்லிக் கேலி செய்வார்கள். இரட்டைவால் குருவி: இந்தக் குருவியின் வால் இரண்டு பகுதியாகப் பிரிந்திருக்கும். வெடிவால்குருவி: இதனுடைய வால்பகுதி பல பகுதிகளாகப் பிரிந்திருக்கும். மஞ்சள்குருவி: மிகச் சிறியகுருவி. உடல் முழுதும் மஞ்சள் நிறமாகவே காணப்படும். ஒரு அழகான குருவி. கறுப்புக்குருவி: இதுவும் ஒரு சிறிய குருவி. மிகவும் கறுப்பாக இருக்கும். பஞ்சவர்ணக்குருவி: இந்தக்குருவி பல வர்ண நிறங்களைக் கொண்டது. இதுவும் ஒரு சிறிய குருவி. பலாக்கொட்டைக் குருவி: இது பலாக்கொட்டைபோல மிக மிகச் சிறிய சாம்பல்நிறக் குருவி. கரும்சிறுகுருவி: இதுவும் மிக மிகச் சிறிய கறுப்புநிறக் குருவி. வெள்ளைவால்க்குருவி: இந்தக் குருவி வெள்ளை நிறம். ஆனால் இதனுடைய வால்பகுதி அதிக வெண்மைநிறம் கொண்டது. சுடலைக்குருவி: இந்தக்குருவி எல்லா நேரமும் கத்தாது. ஆனால் கத்தும்போது இங்குள்ள மக்கள் அச்சப்படுவார்கள். காரணம் அந்த ஊரில் ஏதாவது அசம்பாவீதம் நடக்கும் என்பது அந்த மக்களுடைய ஐதீகம். ஆனால் அதில் உண்மை ஏதும் இல்லை என்பது எனது கருத்து. கீழ்சொண்டுக்குருவி: இந்தக் குருவி அதிவேகமாகப் பறக்கும். அதேபோல அதிவேகமாக நடக்கவும் செய்யும். தூக்கணாங்குருவி: இந்தக்












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருவியினுடையகூடு மிகவும் அழகாக இருக்கும். மற்றைய குருவிகளைப்போல் அல்லாது ஊஞ்சல் போல ஆடக்கூடியவை. அதனால் அதனுடைய குஞ்சுகளை எதிரிகளால் எழிதிற்தாக்க முடியாது.




ஆந்தை: இதனுடைய கண்கள் மிகப்பெரிதாக இருக்கும். அதனால் பெரிய கண்கள் உள்ள மனிதர்களைப் பார்க்கும் போது ஆந்தைக்கண் என்று கேலி செய்வார்கள். காட்டுக்கோழி: இது வீட்டுக்கோழி போன்றது தான் ஆனால் அதிவேகமாக பறக்கும். நடக்கும். வெளவால்: இந்தப் பறவை மட்டும்தான் பாலூட்டும். ஒரு பறவையினமாக இருக்கிறது.




அன்றிற்பறவை: இவையும் ஒரு ஒற்றுமையான பறவை. இவை அநேகமாக நூற்றுக்கணக்கான பறவைகள் ஒன்று சேர்ந்து வானத்தை நோக்கி ஒரேமாதிரிப் பறப்பதைப் உங்களில் அனேகமானோர் பார்த்திருப்பீர்கள். சிட்டுக்குருவி: இந்தப் பறவையையும் அனேகமானோர் அறிந்திருப்பீர்கள். பெரும்பாலும் இவைகள் கூடுதலாக தந்திக்கம்பம் மற்றும் கரண்ட் கம்பங்களில் உள்ள வயர்களில் பல குருவிகள் ஒன்றாகக் கூடி இருக்கும். அன்பானவர்களே! இப்படி என்னும் எண்ணற்றபல பறவை இனங்கள் இங்கு காணப்படுகின்றன. இவைகளும் இப்போது பலது அழிந்துவிட்டது. மற்றவைகளும் அழிவின் விழிம்பில் இருக்கிறது என்பது கவலையான விடயம்தான்.

## காட்டு மிருகங்கள்

இவ்வளவு பறவை இனங்கள் இருந்தால் கண்டிப்பாக காடுகளை உருவாக்கி இருக்கும். அன்பானவர்களே! உதாரணமாக சாதாரண ஒரு காகம், தன் வாழ்நாட்களில் சுமார் இருபதாயிரம் மரம் செடி கொடிகளை உருவாக்கும் என்று ஒரு ஆய்வு சொல்லுகிறது. இங்கு எண்ணற்ற பலவகைப் பறவைகள் இருக்கிறது என்றால் கண்டிப்பாக காடுகள் இருக்கத்தான் செய்யும். அந்தக் காடுகளில் மிருகங்கள் காணப்படும் அல்லவா. அதனால் தென்மராட்சி உள்ளிட்ட பகுதிகளான அல்லாரை, கொடிகாமம், சாவகச்சேரி, வரணி, தாவளையற்றாலை, குடமியன்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவற்காடு, இடைக்குறிச்சி, மந்துவில், எழுதுமட்டுவாள், பளை, கச்சாய், சந்திரபுரம், கல்வயல், கரம்பன், கெற்பேலி, கோகிலாக்கண்டி, மீசாலை, மட்டுவில், நுணாவில், மறவன்புலவு, மிருசுவில், பாலாவி, ராமாவில், சங்கத்தானை, சரசாலை, தனங்கிளப்பு, உசன், விடத்தல்பளை மற்றும் வெள்ளாம்போக்கட்டி உட்பட சுமார் அறுபது கிராமங்களில் பறட்டைக் காடுகள் என்று சொல்லப்படும் சிறியவகைக் காடுகள் அங்காங்கே காணப்படுகின்றது. இந்தக்காடுகளில் சிறிய, பெரிய மரங்கள், செடி, கொடிகளும் புல், பூண்டுகளும் மற்றும் நீர் நிலைகளான கேணிகள், குளங்கள், குட்டைகளும் இருக்கின்றது. இங்கு சிறியவகை மிருகங்களும் பூச்சி, புழுக்களும் விஷயந்துக்களும் நிறைந்து காணப்படும். இங்கு சிறிய இன மிருகங்கள் மட்டும்தான் காணப்படுகின்றன. அவற்றில் எனக்குத் தெரிந்த சிலவகை விலங்குகளைத் தரலாமென நினைக் கின்றேன். அவையாவன: தேவாங்கு: இந்த ஒரு மிக மிகச்சிறிய ஒரு விலங்கு. இந்த மிருகத்தின் முகம் அசிங்கமாக இருக்கும். அதனால் சிலரை இந்த விலங்கின் பெயரைச் சொல்லி கேலிசெய்வார்கள். மூஞ்சூறு: இது ஒருவகை எலியினுடைய குடும்பத்தை சேர்ந்தது. இதனுடைய மூக்கு எலியைவிடப் பெரிதாக இருக்கும். காட்டுப்பூனை: இது சாதாரண பூனையை விடவும் பெரிதாக இருக்கும். மற்றும் பலவிதமான தேனீக்களும் இங்கு காணப்படுகின்றன. அவற்றில் சில கொப்புத்தேனி இவை மரங்களிலுள்ள கிளைகளில் கூடு அமைத்து தேனைச் சேகரிக்கும். பொந்துத்தேனி: இவை மரப்பொந்துகளில் கூடு அமைத்து தேனைச் சேகரித்து வைக்கும். கொசுத்தேனி: தேனீக்களிலே இவை மிகமிகச் சிறியவை. இவை மண்புற்றுக்களில் கூடுகள் அமைத்து தங்களது தேனைச் சேகரித்து வைக்கும். கருங்குளவித்தேனி: இவை மிகமிக உயர்ந்த இடங்களில் கூடுகட்டி தனது தேன்களைச் சேமிக்கும். பெரும்பாலும் பனைமர ஓலைகளில் தான்கூடுகளைக் கட்டும். இதனுடைய தேனை எடுப்பது மிகவும் கடினம். அப்படி எடுப்பதென்றால் நீண்ட ஒரு தடியினை அதனுடைய கூட்டின் நடுப்பக்கத்தில் குத்தி அதிலிருந்து வழியும் தேனைத்தான் எடுக்கமுடியும். இது மிகவும் விலைமதிப்புள்ள தேன். அன்பானவர்களே!


தேவாங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்குள்ள மிருகங்களான மான், மரை, பன்றி, முள்ளம்பன்றி, முயல், உடும்பு, கீரி, ஓந்தில், அணில், மரநாய், காட்டுஎலி, அகிளான், கறுப்பு ஆமை, வெள்ளை ஆமை: இவையனைத்தும் இங்குள்ள மக்களில் சிலர் இவற்றை வேட்டையாடி உணவாக உண்பார்கள். இவைகள்தான் நம் சிறிய காடுகளில் வாழக்கூடிய சிறிய பெரியவகை விலங்கினங்கள். இவற்றை விடவும் நம்காடுகளில் பூச்சியினங்களும் வண்டினங்களும் எண்ணற்ற பல விஷ ஜந்துக்களும் காணப்படுகின்றன.


வெள்ளாமை


கீரி


உடும்பு

## பூச்சிகளும் வண்டுகளும்

சில்வண்டு: இந்த வண்டு சிறிதாக இருந்தாலும் இது எழுப்பும் ஒலி மிகவும் சத்தமாக இருக்கும். பொன்வண்டு: இது மிகவும் அழகான பச்சைநிற வண்டு. கருவண்டு: இது சுறுசுறுப்பானது. அதைவிட மழைக்காலம் வருவதற்கு முன்பு தன்னுடைய உணவை தன் இருப்பிடத்தில் செமித்து வைக்கும். சிறுசிறு வண்டுகள் பலப்பல இனங்களில் பலப்பல வர்ணங்களில் பலப்பல அளவுகளில் இங்கு எல்லா இடங்களிலும் காணப்படும். இவற்றைத தவிர பல பூச்சி இனங்களும் இங்கு காணப்படும். அவற்றில் சிலவகை தத்துவெட்டியன்: இது தத்தி, தத்தி நடக்கும் தன்மை கொண்ட ஒரு பூச்சி இனம் புற்கள் அடர்த்தியாக உள்ள இடங்களில் இது இருக்கும். கும்புடுபூச்சி: இது எட்டுக்கால் உள்ள பூச்சி. இந்தப்பூச்சியை யாராவது சீண்டிப் பார்த்தால் தன்னுடைய முன்னிரண்டு கால்களையும் மனிதர்கள் கும்பிடுவதுபோல கும்பிட்டு மனித மனங்களை இளகவைத்துச் தப்பிச் செல்லும். சக்கரைப்பாண்டி: இந்தப் பூச்சியினை தெரியாமல் யாராவது தொட்டுவிட்டால் தொட்டஇடம் எல்லாமே துருநாற்றம் வீசும். மின்மினிப்பூச்சி: இவை பெரும்பாலும் மரங்களில் கூட்டம் கூட்டமாகவே இருக்கும். இவை இரவு நேரங்களில் மின்விளக்குகள் போலவே தங்களுடைய உடலிலிருந்து


சில்வண்டு


பொன்வண்டு


கும்புடுபூச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒளியை மிளிரச் செய்யக் கூடியவை. வெட்டுக்கிழி: இதைப் பார்த்தால் ஒரு பௌவியமான பூச்சியாகத்தான் தெரியும். ஆனால் இவை தன்னுடைய உடல் நிறையைவிட கூடுதலான உணவை உண்ணும். இவை கூட்டமாக சென்றால் ஒரு நெல்வயலையே நாசம் செய்து விடும். இவை பச்சை மற்றும் பிறவுண் நிறங்களில் காணப்படும். இன்னும் பலவர்ணங்களில் தும்பி: இனங்கள் மற்றும் வண்ணத்துப்பூச்சி இனங்கள் இங்கு காணப்படுகின்றன. கறையான்: இது பெரும்பாலும் மண் புற்றுக்களில்தான் இருக்கும். இவைகள் மழைக் காலங்களில் இறக்கைகளை உருவாக்கிக் கொண்டு பறந்துவிடும். அப்போது இதனை ஈசல் என்ற பெயரைச் சொல்லி அழைப்பார்கள். மயிர்க்கொட்டி: இது பெரும்பாலும் முருங்கை மரங்களில் கூட்டம் கூட்டமாக இருக்கும். இதனுடைய உடல் முழுவதும் அடர்த்தியாக மயிர்கள் காணப்படும். இதனுடைய மயிர் எங்களுடைய உடல்களில் பட்டால் உடனே வலியை உண்டாக்கி வேதனையைத்தரும். விஷத்தன்மை கொண்டது. ஆனால் இதனுடைய மயிர்கள் உதிர்ந்த பின்பு இறக்கைகளை உருவாக்கி கொண்டு பறந்து சென்றுவிடும். அப்போது இவைகள் தேனீக்களாக மாறிவிடும். இப்படி என்னும் பல வர்ணங்களில் பல வடிவங்களில் சிறிய பெரிய பூச்சி இனங்கள் எம் கண் முன் அன்றாடம் வந்துபோகும் அல்லவா? அன்பானவர்களே! இவைகள் எல்லாம் இப்போது உங்களுக்கு இப்போது ஞாபகத்தில் வந்து போகும். ஆனால் இவையெல்லாம் உங்கள் வருங்காலப் பிள்ளைகள் பார்க்க வாய்பே இருக்காது. எல்லாம் அழிந்துவிடும். இவற்றை எல்லாம் இனி மீளுருவாக்கம் செய்வதற்கு இயற்கையால் மட்டும்தான் முடியும். அந்த இயற்கையைக் காப்பாற்ற மனிதனால் மட்டும்தான் முடியும். ஆம் சுயநலமில்லாத மனிதர்களால் மட்டும்தான் முடியும். அன்பர்களே! மனிதன் இல்லாமல் இயற்கையால் இந்தப் பூமியில் மிகவும் செழிப்பாக வாழமுடியும். ஆனால் இயற்கை இல்லாமல் மனிதனால் இங்கு வாழவே முடியாது.


தும்பி


வண்ணத்துப்பூச்சி



தேனீ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊர்ந்துதிரியும் ஊர்வனவும் விஷஜந்துக்களும்

ஓணான், கறடிஓணான், அறனை, பச்சொந்தி, பல்லி இவைகள் எல்லாமே ஒரே குடும்ப இனத்தைச் சேர்ந்தவைகள். ஆனால் எல்லாம் தனித் தனித் தன்மை கொண்டது. ஓணான், கடித்தால் உயிராபத்தை ஏற்படுத்தாது. விஷசத்தன்மை கொண்டது. ஓணான் போலவே கறடிஓணான்: இதற்கும் ஓணானுக்கும் பெரிய அழவில் வித்தியாசம் இல்லை. ஆனால் இதனுடைய கழுத்துப்பகுதி எங்கும் அடர்த்தியாக முட்கள் போன்று வளையம் காணப்படும். அறணை, இதுவும் ஓணான் போலவே உருவ ஒற்றுமை கொண்டது. இதனுடைய உடல் முழுவதும் பளபளப்பக இருக்கும். இது தன்னுடைய நகங்களினால் உடம்பில் காயங்களை ஏற்படுத்தி தனது எச்சியால் அந்தக் காயங்களில் நக்கினால் மனிதர்களுக்கு மரணம்கூட நிகழலாம். ஆனால் அது அப்படி பெரும்பாலும் செய்வதில்லை. காரணம் அது உடனே நக்குவதை மறந்துவிடும். அதனால்தான் மறதிக்கார மனிதர்களைப் பார்த்து நீ என்ன அறணையோ? என்று கேலி செய்வார்கள். பல்லி: இதை அனேகமான மக்களுக்குத் தெரியும். காரணம் இது அனேகமாக இன்றும் எல்லோருடைய வீடுகளிலும் காணப்படும். இது ஒருவிதமான ஒலியை அடிக்கடி எழுப்பும். இதனுடைய எச்சில் எங்களுடைய உடலில் பட்டால் அனேகமாக அந்த இடத்தில் கடிக்க நேரிடும். பச்சோந்தி, இது அனேகமாக பச்சை நிறத்தில்தான் காணப்படும். ஆனால் தன் எதிரியிடமிருந்து தன்னைக் காப்பாற்ற தன்னுடைய நிறத்தை பலப்பல வர்ணங்களில் மாற்றும் தன்மை கொண்டது. அதனால் ஏமாற்றுக்காரர்களை இதனுடைய பெயர் சொல்லிக் கேலிசெய்வார்கள். நட்டுவக்காலி: இதற்குப் பத்துக் கால்கள் உண்டு. இதனுடைய முன்னுள்ள இரண்டு கால்களும் நண்டுக்கு இருக்கும் கால்களைப்போல இருக்கும். இதனால் கடித்து காயங்களை உண்டாக்கும் விஷத்தன்மை கொண்டதுதான். ஆனால் உயிராபத்தை ஏற்படுத்தாது. பூரான்பூச்சி: இது நீள மற்றும் வட்ட வடிவங்களில் இங்கு இருக்கின்றன. இதற்குப் பல கால்கள் காணப்படும். இது


பச்சோந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடித்தால் விஷத்தன்மை கொண்டது. உயிராபத்தை ஏற்படுத்தாது. சிலந்தி: இதனையும் அனேகமானோருக்குத் தெரிந்திருக்கும். இது தனது உடம்பிலிருந்து வரும் ஒருவகை சுரப்பியைச் சுருந்து அதிலிருந்து வரும் சுரப்பியினால் வலைகளை உருவாக்கி அந்த வலையில் விழும் பூச்சி, புழுக்களைத் தன் உணவாக்கிக் கொள்ளும். அட்டை: இவை சிவப்பு, கறுப்பு மற்றும் சிறிய பெரிய அளவுகளில் இங்கு காணப்படும். இவைகள் பெரும்பாலும் மழைக் காலங்களில்தான் உற்பத்தியாகும். இந்தக் காலங்களில் வட்டவடிவம் கொண்ட சிவப்புநிற தம்பளப்பூச்சி: என்று ஒருவகைப் பூச்சி இனமும் உருவாகும். இன்னும் எண்ணற்ற எறும்பு: இனங்கள் மற்றும் முசுறு: இது ஒரு எறும்பு வகையைச் சேர்ந்தது. ஆனால் இது எறும்பைப்போல் அல்லாது இது மர இலைகளில் கூடுகட்டி வாழக்கூடியவை. இன்னும் எண்ணற்ற தவளைகள், தேரைகள், நத்தைகள், மற்றும் அதி விஷத்தன்மைகள் கொண்ட விதம்விதமான சுமார் முப்பதுக்கும் மேற்பட்ட இனவகைப் பாம்புகள் தென்மராட்சி அண்டியுள்ள நம் சிறு காடுகளில் இருக்கின்றன. அன்பானவர்களே! நான் ஏன் இந்த விஷ ஜந்துகளைப்பற்றி இங்கு குறிப்பிடுகிறேன் என்றால் இங்குள்ள அனேகமான மக்கள் அதி விஷத்தன்மை கொண்ட பாம்புகளும் மற்றும் மற்றய உயிர்ச்சேதத்தை ஏற்படுத்த முடியாத விஷ ஜந்துக்கலால் கண்டிப்பாக தீண்டப்பட்டிருப்பார்கள். இவை அனைத்தும் அவர்களுக்கு சில சமையங்களில் நல்லதாகவே இருந்தது என்றுதான் கூறவேண்டும். அதனால்தான் அன்றைய காலத்தில் இங்கு வாழ்ந்த பெரும்பாலான மக்கள் நோய்களில் இருந்து பாதுகாப்பாக வாழ்ந்தார்கள் என்று நமது முன்னோர்கள் சொல்வதை நான் கேட்டிருக்கிறேன். இது உண்மையா? என்று தெரிந்துகொள்வதற்க்காக நான் (Google) வலையமைப்பில் தேடிப்பார்த்போது பலவிடயங்களை உண்மையென்று தெரிந்துகொண்டேன். உதாரணமாக நட்டுவக்காலி என்று விஷஜந்தினால் பலமுறை தீண்டப்பட்ட ஒரு மனிதனுக்கு இருதயம் சம்மந்தமான மாரடைப்புப்போன்ற நோய்கள் வராது என்ற உண்மையை நான் தெரிந்து கொண்டேன். அதனால் முன்னோர்கள் சொல்லிவைத்த பல விடயங்கள் உண்மை என்று நான் புரிந்துகொண்டுள்ளேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பானவர்களே! இங்கு எவ்வளவு கொடிய விஷம் நிறைந்த விஷ ஜந்துக்கள் இருந்தாலும் இவற்றால் தீண்டப்பட்டு இறந்தவர்கள் மிகமிகக் குறைவு என்றுதான் சொல்லமுடியும். அப்படி யாராவது விஷஜந்துக்களால் தீண்டப்பட்டாலும் அதனை மாற்றுவதற்காக நம் ஊர்களில் பல விஷகடி பார்க்கும் நாட்டு வைத்தியர்கள் இருந்திருந்தார்கள். துரதிஸ்டவசமாக அப்படிப்பட்டவர்கள் யாருமே இன்று நம்முடன் இல்லை. ஏனென்றால் அவற்றை இன்றைய இளைய சமுதாயத்தினர் நாகரீகம்கருதி கற்றுக்கொள்ள விரும்ப வில்லை.அன்பாவர்களே! இன்னும் நீர் நிலைகள் உள்ள இடங்களில் சுற்றி இருக்கக்கூடிய காடை, கௌதாரி, கொக்கு, நாரை, ஊரியான், வான்கோழி போன்ற பறவைகளோடு ஆழ்காட்டி என்ற பறவையும் இங்கு காணப்படுகின்றது. அன்பர்களே! ஆழ்காட்டி என்ற பறவையைப் பற்றிய காலத்தால் அழியாத ஒரு மிகச் சிறந்த நாட்டுப் பாடல் இருக்கிறது. அந்தப்பாடல் ஒரு மனிதனுடைய கேள்விக்கு அந்தப் பறவைகூறும் சோகமான பதிலாக அமையும். அதாவது தன்னுடை குஞ்சுகளை வளர்ப்பதற்காக தான் படும் கஸ்டங்களை எடுத்துரைக்கும் பாடலாக அமைந்திருக்கும். அதேவேளை இங்குள்ள சில தாய்மார்கள் தங்களுடைய பிள்ளைக்கு தாலாட்டுப் பாடலாகவும் பாடுவார்கள். அதாவது அந்தப் பாடலின் தொடக்கம் "ஆழ்க்காட்டி ஆழ்க்காட்டி எங்கை எங்கை முட்டையிட்டாய்? கல்லை கிளறி அதனுள்ளே முட்டை இட்டேன்" என்று தொடந்து இந்தப் பாட்டு வரும். அது ஒரு மிக நீண்ட பாடலாக அமையும். அனேகமாக இங்கு வாழுகின்ற பெரும்பாலான மக்களுக்கு இந்தப் பாடல் தெரிந்திருக்கும் என்று நினைக்கின்றேன். அன்பானவர்களே! மனிதர்கள் இல்லாது இயற்கையால் உருவான அனைத்தும் இங்கு நிலைநிற்கும். ஆனால் இயற்கை இல்லாது மனிதனால் ஒருபோதும் வாழவே முடியாது என்ற உண்மையைப் புரிந்துகொண்டு சுயநல மில்லாது இயற்கையையும் அதன்வளங்களையும் அதன் அழிவிலிருந்து காப்பாற்றி உங்கள் வருங்கால சந்ததிகளைக் நோய்நொடிகளிலிருந்து பாதுகாத்துக் காப்பாற்றுங்கள்.


ஆட்காட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பானவர்களே! செபமாலை அப்புவுடைய இந்த நினைவுநாள் மலரில் நான் ஏன் இயற்கையைப்பற்றி இவ்வளவு தூரம் முக்கியம் கொடுத்து எழுதுகிறேன் என்றால் காரணம் செபாலைஅப்பு இயற்கையின்மேல் வைத்திருந்த அளவற்ற பற்றின் காரணமாக மட்டும் அல்ல என்னுடைய சுயநலமும் இதற்குள் அடங்கியிருப்பது என்பதும் ஒரு காரணம் ஏனென்றால், செபமாலை அப்பு அவர்களுடைய நினைவு நாளை ஒரு மலராக மட்டும் எழுதி நான் இங்கு வெளியிட்டால் இந்த நினைவு மலரும் பத்தோடு பதினொன்றாக உடனே குப்பைத் தொட்டிக்குள்தான் போய்விடும் என்பது மறக்கமுடியாத உண்மை. ஆதனால் இம்மலர் என்போன்றவர் களுடைய கைகளில் கிடைக்கப்பெற்றால் எங்களுடைய வெள்ளாம்போக்கட்டி என்கின்ற கிராமத்தில் இவ்வளவு அற்புதமான இயற்கை வளங்கள் இருந்ததா? என்று தேடிப்பார்ப்பார்கள். அதனால் அவர்கள் இந்த மலரையும் பாதுகாப்பார்கள். அத்தோடு செபமாலை அப்பு யார்? ஏன் இவருக்கு இந்தளவு முக்கியம் கொடுத்து எழுதியிருக் கிறார்கள் என்பதைனையும் தேடிப்பார்ப்பார்கள். அப்போது அவர்கள், இந்தச் செபமாலை அப்பு அவர்களுடைய குணங்களை அறிந்து கொள்வார்கள். வெள்ளாம் போக்கட்டியில் வாழும் மக்கள் காலப்போக்கில் சில சமையம் இவரை மறக்க நேரிட்டாலும் இந்த நினைவு மலரின் வாயிலாக மற்றவர்கள் செபமலை அப்புவுடைய பெயரையும் அவருடைய செயல்களையும் பார்த்து இப்படியும் ஒருவர் சுயநலமில்லாது இங்கு வாழ்ந்தாரா? என்று அவர் பெயரையும் நிலைக்கச் செய்வார்கள் என்ற நம்பிக்கையுடன் "**இயற்கை தந்த இறைவனின் கொடைகள்**" என்ற தலையங்கத்தை நான் தேர்வு செய்து இங்கே எழுதக் காரணமாக அமைந்தது.

அன்பானவர்களே! பைபிளில் ஒரு உண்மைக் கதை இருக்கிறது. அது என்னவென்றால் ஒரு ஆலயத்தில் மிகப் பெரும் பணக்காரர்கள் தங்களுடைய காணிக்கைகளைப் போடுவதற்காகத் மிக விலை உயர்ந்த ஆடை, அணிகலன் களுடன் வரிசையாக வந்து தங்களது காணிக்கைகளைப் போட்டார்கள். ஆனால் அதே வரிசையில் ஒரு வயதான ஏழைப்பாட்டி தன்னுடைய சேலை முடிப்பிலிருந்து இரண்டு சிறிய வெள்ளிக் காசுகளை அந்தக் கோவிலுக்கு காணிக்கையாகச் செலுத்தினார். இதைப் பார்த்துக் கொண்டிருந்த அந்தச் செல்வந்தர்கள் இரண்டு வெள்ளிக் காசுகள் போட்ட அந்த ஏழை பாட்டியைப் பார்த்து ஏளனம் செய்தார்கள். இவற்றை எல்லாம் அவதானித்துப் பார்த்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யேசுக்கிறீஸ்து அந்தச் செல்வந்தர்களைப் பார்த்து அவர்களிடம் உண்மையாக உங்களுக்குச் சொல்லுகிறேன். உங்கள் எல்லோருடைய காணிக்கைகளையும்விட அந்த ஏழைத்தாய் போட்ட காணிக்கை அதிகம் என்று சொன்னார். காரணம் அந்தச் செல்வந்தர்கள் தங்களிடம் அளவுக்கு அதிகமாக பணம் இருக்கிறது. அதனால் காணிக்கை போடுகிறார்கள். ஆனால் அந்த ஏழைத்தாய் தன் நாளைய உணவுத் தேவைக்கு வைத்திருந்த பணத்தைக் கடவுளுக்கு காணிக்கையாகக் கொடுத்தார். காரணம் நாளைய நம் தேவையும் கடவுள் போக்குவார் என்று நம்பினாரே. அதனால் அந்த நம்பிக்கையின் காரணமாக அவர் கடவுளின் பார்வையில் செல்வந்தரானார். அவரையும் கடவுள் ஆசீர்வதித்துக் காப்பாற்றினார். அப்போது அந்தச் செல்வந்தர்கள் நாணிக் கோணி நின்றனர். நான் இவற்றை ஏன் சொல்லுகிறேன் என்றால் இருப்பவர்கள் எவ்வளவும் வேண்டுமானாலும் கொடுக்கலாம். அது பிரச்சனை அல்ல. ஆனால் செபமாலை அப்பு தன்னிடம் இருந்த அனைத்தையும் கடவுளுக் கொடுத்துவிட்டு, தன்னிடம் கடைசியாக இருந்த தான் குடியிருந்த நிலத்தையும் கடவுளுக்கு கோவில் கட்டுவதற்காக கொடுத்துவிட்டு ஒன்றுமே இல்லாமல் தான் திருமணம் செய்த புதிய மனைவியுடனும் தன்னுடைய சின்னஞ் சிறிய பிள்ளைகளுடனும் எந்தவித சலனமும் இல்லாமல் யாரோ ஒருவருடைய இரவல் காணியில் சிறிய கொட்டில் வீடுகட்டி சந்தோசமாக வாழ்ந்து வந்தார். அதன் பின்பு அந்த இரவல் நிலத்தை வாங்கிச் சொந்தமாக்கிவிட்டார். ஆனாலும் இதனால் அவருடைய பிள்ளைகள் வளர்ந்துவரும் நாட்களில் அவர்களால் எவ்வளவு கஸ்டங்களையும் கவலைகளையும் செபமாலைஅப்பு அவர்கள் பெற்றிருப்பார் என்பதை கற்பனை செய்து பாருங்கள். ஆனால் செபமாலை அப்பு கடவுளுக்குச் செய்த எல்லாச் செயல்களுக்கும் வட்டியும் முதலுமாக அவர்களுடைய மனைவி மேரிமரியம்மாவிலிருந்து அத்தனை பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் அவைகளையும் தாண்டியும் அன்பைக் கடவுள் வாரிஅள்ளி இறைக்கிறார் என்பதை அவர்கள் இன்று உணர்ந்துவிட்டனர் என்றால் செபமாலைஅப்பு கடவுளில் வைத்திருந்த மாறாத அன்பும் அசைக்கமுடியாத உண்மையான நம்பிக்கையும் வேண்டுதலும் அவருடைய நல்ல உள்ளமும்தான் எங்களை இப்படி வாழ வைக்கிறது என்பது என்னுடைய அசைக்க முடியாத நம்பிக்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளாம்போக்கட்டி என்ற ஊரில் வாழ்ந்து வந்த வல்லிபுரம் சின்னாச்சி தம்பதியினருக்கு தலைமகனாக 24.04.1905ம் ஆண்டு திங்கள்கிழமை சின்னத்தம்பி பிறந்தார். இந்தப் பெயரைத்தான் பின்நாட்களில் அதாவது கிட்டத்தட்ட தன்னுடைய பதினைந்தாவது வயதில் 1920ம் ஆண்டு செபமாலை என்று மாற்றிக் கொண்டார். இவர்கள் பரம்பரை பரம்பரையாக இந்த ஊரில் மிகப்பெரிய நில புலன்களோடும் பனை தென்னந் தோப்புக்கள் விவசாய விளைநிலங்கள் எண்ணற்ற பல கால்நடைகள் என பலப் பல வசதிகளைாடு சீரும் சிறப்புமாக வாழ்ந்து வந்தனர். இவர்களுடைய இந்த வாழ்க்கைக்கு இந்த வெள்ளாம்போக்கட்டி கிராமத்திலுள்ள இயற்கை வளங்களும் ஒரு காரணமாக இருந்தது. இந்த ஊரின் இயற்கை தந்த வளங்கள் என்பதனையும் செபமாலை அப்புவுடைய இந்த நினைவு நாள் மலரில் எனக்குத் தெரிந்த சில குறிப்புகளை குறிப்பிட விரும்புகிறேன். **(இயற்கை தந்த இறைவனின் கொடைகள்** என்ற தலைப்பின் கீழ் தயவு செய்து பார்க்கவும்) இந்த செபமாலையின் அப்பா ஒரு சைவசமையத்தில் பிறந்து வளர்ந்ததனால் தங்களை வசதியாக வாழவைப்பதற்கு கடவுள் ஒருவர் இருக்கிறார் என நம்பினார்கள். ஆனால் அந்தக் கடவுள் யாரென்று தெரியாத பட்சத்தில் தங்கள் எண்ணத்தில் தோன்றியுள்ள எண்ணத்தை தங்களது தெருமுனைக் காணியில் ஒரு கோவில் உருவாக்கி அதில் ஒர் கல்லை வைத்து கடவுள் என உருவாக்கினார்கள். அந்தக் கடவுள் இது தான் என்றும், அதற்கு வைரவர் என்று பெயர்வைத்து வணங்கி வந்தனர். இவற்றையெல்லாம் அன்றைய குழந்தையாக இருந்த செபமாலைக்குப் புரியவே இல்லை. இவருடைய பாடசாலைப் பருவம் வந்தது. பாடசாலை சென்றார். அன்றைய காலகட்டம் ஏட்டில் எழுதிப் படிக்கும் காலமாக இருந்தது. அதைவிட அந்தக்காலத்தில் எழுதப்படாத ஒரு சட்டம் இருந்தது. அது செபமாலையுடைய சமூகத்தினர் மூன்றாம் வகுப்புக்குமேல் கல்விகற்க முடியாது. சிறுவனாக இருந்த அவருக்கு பாடசாலையில் நன்கு படித்துக் கல்வி புகட்டும் ஆசிரியர்களால் தானும் தன்னைச் சாந்தவர்களும் புறக்கணிக்கப்பட்டதை நினைத்தபோது கவலைப்பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடவுள் மீது அவருக்குக் கோபம் வந்தது. கடவுள் நல்லவராக இருந்தால் இவற்றையெல்லாம் அனுமதிக்கமாட்டார். அதனால் தாங்கள் வணங்கி வருவது உண்மையான தெய்வமில்லை. அப்படியென்றால் உண்மையான தெய்வம் இருக்கிறதா? அப்படினென்றால் அது யார்? இதற்கு முன்னர் அவர் அன்பு வைத்திருந்த தாய் சின்னாச்சி அவர்களுடைய மரணம் அவரது ஆறு வயதில் தாயை இழந்த தான்பட்ட துயரம் எல்லாவற்றையும் நினைத்து கடவுளை வணங்குவதை செபமாலை அவர்கள் நிறுத்திவிட்டார். ஆனாலும் அவர் மனதில் கடவுள் ஒருவர் இருக்கிறார் அவர் யார்? என்று தன்னைத் தானே தினமும் கேட்ட வண்ணமே இருந்தார். செபமாலை பாடசாலையில் படித்த அந்த மூன்று ஆண்டுகளில் தன்னாலான முயற்சியின் காரணமாக அனைத்து மாணவர்களையும் விட அதிக சிறந்தமுறையில் தமிழ் எழுதவும் வாசிக்கக் கற்றுக் கொண்டார். அதன் காரணத்தால் (பின் நாட்களில் கத்தோலிக்க மதத்தின் பாஸ்க்கா பண்டிகையின் போது பாடும் யேசுவின் பாடல்களை பசாம் என்று சொல்வார்கள் அந்த விருத்தப் பாடலை மிகச் சிறந்த முறையில் செபமாலை அவர்கள் பாடவல்லவராக இருந்தார். அந்தப் பாடலைக் கேட்பதற்காக பலர் வருகை தருவார்கள். வருகை தரும் அனைவரும் அவருடைய விருத்தப் பாடலைக் ஆர்வமாகக் கேட்பார்கள். கேட்கும் அனைவரும் கண்ணீர் விடாமல் சென்றதே கிடையாது. அவ்வளவு உருக்கமாகப் அந்த பசாம் என்கின்ற பாடலைப் பாடுவார். இதனை இங்குள்ள அனைத்து கிறீஸ்தவ மக்களும் தெரிந்து வைத்திருப்பார்கள் என்று நான் நம்புகிறேன்.)

## சுவாமி ஞானப்பிரகாசமும் செபமாலையும்

நாட்கள் மெதுவாக நகர்ந்தது. தந்தையின் பாசமான அன்பின் காரணமாக அவர் தந்தயை விட்டுப் பிரிவதே இல்லை. எப்போதுமே தந்தை எங்குசென்றாலும் இவரும் கூடவே செல்வது வழக்கமாகவே இருந்து வந்தது. இப்படி இருந்து வரும் ஒரு நாளில் இருசக்கர மோட்டார் வண்டியுடன் இருவர் வருகின்றனர். அதில் ஒருவர் நீண்டதாடி, நீளமான வெள்ளை நிற உடை, அந்த வெள்ளை அங்கியின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுப்பகுதியில் கறுப்புநிறப் பட்டி, கழுத்தில் ஒரு சிலுவை மாலை இப்படித் தோற்றமுடைய ஒருவர் வருகிறார். இப்படிப்பட்ட தோற்றம் கொண்ட நபர்களை அந்த ஊர் மக்களில் பலர் பார்த்ததே கிடையாது. இவரைப் பார்த்ததும் அந்த ஊர் மக்கள் தங்கள் தங்கள் வீடுகளுக்கு ஓடோடி கூட்டம் கூடம்மாக நின்று இவர்கள் யார்? ஏன் இங்கு வந்தனர் என்று முணு முணுக்கத் தொடங்கினர். அவர்தான் அருட்திரு சுவாமி ஞானப்பிரகாசம் அவர்கள். இந்த நேரத்தில் சிறுவன் செபமாலையும் அவரது தந்தையும் இவர்களை நோக்கி வருகின்றனர். வந்த இவர்களைப் பார்த்த சுவாமி ஞானப்பிரகாசம் ஒரு சிறிய புன்னகையோடு அவர்களை வரவேற்று வணக்கம் சொன்னார். அதன் பின்னர் இவர்கள் சுவாமி ஞானப்பிரகாசம் அவர்களைப் பார்த்து ஐயா நீங்கள் யார்? ஏன் இங்கு வந்திருக்கிறீர்கள்? போன்ற பல விடயங்களைக் கேட்டனர். அவற்றிக்கு எல்லாம் சுவாமி ஞானப்பிரகாசம் பொறுமையாகப் பதிலளித்தார். தான் ஒரு மதகுரு உங்களுக்கு ஏதாவது உதவிகள் தேவைப்பட்டால் என்னாலான உதவிகள் முடிந்தால் உங்களுக்கு செய்து தருவேன். அதனால் நீங்கள் என்னிடம் தயங்காமல் உதவிகளை கேட்கலாம் என்று சென்னார். அதன்பின்பு இன்னொரு நாள் வருகிறேன் என்று செல்லிவிட்டு அவர் சென்றுவிட்டார். இந்த நாள் தான் சுவாமி ஞானப்பிரகாசம் முதல் முதலாக வெள்ளாம்போக்கட்டி ஊருக்கு வந்த நாள். இவருடைய இந்த சந்திப்பினால் இவர்கள் சுவாமி ஞானப்பிரகாசம் அவர்களை நல்ல மனிதர் என்று முழுமையாக நம்பினர். அதனால் அவரின் வருகையை எதிர்பார்த்து மீண்டும் காத்திருந்தனர்.

இவர்கள் எதிர்பார்த்தபடி சுவாமி ஞானப்பிரகாசம் மீண்டும் ஒரு நாள் வந்தார். பின்பு மறுபடியும் மறுபடியும் வந்து வெள்ளாம்போக்கட்டி மக்களின் அன்பைப் பெற்றார். அவர் இங்கு வரும்போதெல்லாம் சிறுவர்களுக்கு சுவைமிகுந்த இனிப்புவகைகள் பண்டிகை நாட்களில் அது எந்தமதப் பண்டிகையாக இருந்தாலும் பரவாயில்லை அந்த ஊர் மக்களுக்கு துணிமணிகள் மற்றும் அன்பளிப்புப் பொருட்கள் கொண்டுவருவார். எல்லா வசதி வாய்ப்புக்களுடன் இருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த ஊர் மக்கள் இவரிடம் எந்த உதவிகளையும் அதுவரை கேட்கவில்லை. சிறுவனாக இருந்த செபமாலை தன் தந்தையிடம் இங்குள்ள மக்கள் கல்விகற்க முடியாத நிலையில் இருக்கின்றனர். அதனால் தமிழ் மொழி மற்றும் கணித பாடங்கள் கற்றுத் தருவதற்கு அந்தப் பாதிரியாரிடம் ஏப்பாடு செய்து தரும்படி ஆலோசனை கேட்கும்படி சொன்னார். அதன்படி தந்தை செபமாலை சுவாமி ஞானப்பரகாசம் அவர்களிடம் சொன்னார்கள். அவர் உடனே சம்மதித்து ஏர்ப்பாடுகளைச் செய்தார். அதன் பின்னர் செபமாலையின் தந்தைக்குச் சொந்தமான காணியில் ஒரு கொட்டில் அமைத்து ஒரு கல்விக்கூடம் ஆரம்பிக்கப்பட்டது. அதற்கு ஒரு ஆசிரியராக உபதேசியாராக இருந்த திரு. சந்தியாப்பிள்ளை என்பவர் சுவாமி ஞானப்பிரகாசதால் ஆசிரியராக நியமிக்கப்பட்டர். அன்றிலிருந்துதான் வெள்ளாம்போகட்டி ஊருக்கு கல்வி என்ற வெளிச்சம வர ஆரம்பித்தது. அதன் பின்னராகத்தான் இங்கு உள்ள பல பிள்ளைகள் எழுதப் படிக்கக் கற்றுக்கொண்டனர். ஆர்வமுள்ள பிள்ளைகளின் வரவால் மாதம் ஒருமுறை நடைபெற்ற கல்விக் கூடத்தில் பின்னர் மாதம் இரண்டுமுறை நடைபெறத் தொடங்கியது.

சுவாமி ஞானப்பிரகாசம் தங்களிடம் காட்டிய அன்பினால் ஈர்க்கப்பட்ட செபமாலை குடும்பத்தினர் தாங்கள் உருவாக்கிய வைரவர் என்று கல்லுவைத்துக் கும்பிட்டு வந்த கோவிலை அகற்றிவிட்டு கிறீஸ்தவ மதம்மாற ஆயத்தமானர்கள். அதன் முதற்படியாக தங்களுடைய பெயர்களை கிறீஸ்தவப் பெயராக மாற்றிக்கொண்டனர். வல்லிபுரம் என்ற செபமாலையின் தந்தை **வ** என்ற எழுத்தில் வரவேண்டும் என்பதற்காக வரப்பிரகாசம் என்றும் அதேபோல் முருகேசு என்ற செபமாலையின் தம்பி **மு** என்ற எழுத்தில் வரவேண்டும் என்பதற்காக முடியப்பு என பெயர்களை மாற்றிக் கொண்டனர். ஆனால் செபமாலையுடைய பெயருக்கு அப்படி நடக்கவில்லை. காரணம் சிறுவனாக இருந்த செபமாலை சுவாமி ஞானப்பிரகாசம் அவர்களிடம் இருந்து அன்பளிப்பாக கழுத்தில் போடும் ஒரு செபமாலையை அன்பளிப்பாகப் பெற்றார். அன்றிலிருந்து அதைச் சிறுவன் செபமாலை ஒரு பொக்கிசமாகப் பாதுகாத்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இற்றையெல்லாம் அவதானித்து வந்த சுவாமி ஞானப்பிரகாசம் அவனுக்குச் செபமாலை என்று அதேயே பெயராகச் சூட்டினார். அன்பானவர்களே! செபமாலையுடைய தந்தைக்கு வரப்பிரகாசம் என்று பெயர் மாற்றப்பட்ட விடயம் இங்குள்ள பல மக்களுக்குத் தெரியாது. அதனால் செபமாலை அவர்களுடைய மனைவி மேரி மரியம்மா கனடா நாட்டில் மரணமான போது (2006ம் ஆண்டு) அவர் மகன் திரு. மரியநாயகம் என்பவரால் அச்சிடப்பட்ட மரண அறிவித்தல் பிரசுரத்தில் வரப்பிரகாசம் செமாலை என்று எழுதப்பட்டிருக்கிறது அதை உங்களுடைய பார்வைக்கு இங்கு பிரசுரம் செய்கின்றேன்.

## செபமாலை ஆலயம் 2020





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



# திருமதி மரியம்மா-செபமாலை

கோப்பாயைப் பிறப்பிடமாகவும், கனடாவை வதிவிடமாகவும் கொண்ட திருமதி. மரியம்மா-செபமாலை அவர்கள் 26.03.2006 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ராமன்-சின்னத்தங்கம் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற செபமாலை-வரப்பிரகாசம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ் சென்றவர்களான சின்னா (மலேசியா), செல்லையா (சிறிலங்கா ஆகியோரின் அன்புச் சகோதரியும்,

காலஞ்சென்றவர்களான ஞானப்பிரகாசம், ஆசீர்வாதம், மற்றும் பிலோமினா(ஜேர்மனி), மரியநாயகம் (Century 21-Toronto), பூரணம்(ஜேர்மனி), அருளானந்தம்(வர்த்தகர்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், பிலோமினா, மரியம்மா, எட்வேட், ஜெயசீலி (ஜெயா - Heritage), நவரட்ணம், லூசியா ஆகியோரின் அன்பு மாமியாரும், நவம், ராசா, பூபதி, வில்லியம், பவா, தோமஸ், லூர்துநாயகம், மேரி, சுபம்பதி, பிரான்சிஸ் சேவியர், இருதயநேசன், அருள்நேசன், ஜெயநேசன், ஜேசுதாசன், றீற்றம்மா, மரியதாசன், கிறிஸ்ரன் விம்சி, கிறிஸ்ரல் குவின்சி, ஜேன் ஜெமினா, ஜெபநேசன், ஜோனாஸ், அலெக்ஸ்னா, கிளொடியா, மரியானா அகியோரின் பாசமிகு பேத்தியும், அன்புச் செல்வங்களின் கொள்ளுப்பேத்தியுமாவார்.

அன்னாரின் புதவுடல் 29.03.2006 புதன்கிழமையும், 31.03.2006 ஞாயிற்றுக்கிழமையும். மாலை 5.00 மணிமுதல் 9.00 மணிவரை Midland & Sheppard சந்திப்பில் இல. 4164 Sheppard Ave East ல் அமைந்துள்ள Ogden Funeral Home ல் பார்வைக்காக வைக்கப்பட்டு 01.04.2006 சனிக்கிழமை காலை 8.00 மணிமுதல் 10.00 மணிவரை அதே மண்டபத்தில் மீண்டும் பார்வைக்காக வைக்கப்பட்டு, பின்னர் Birchmount & Dennison சந்திப்பில் இல. 14 High Gate Drive மார்க்கத்தில் அமைந்துள்ள St. Thomas The Appostal தேவாலயத்தில் நல்லடக்க ஆராதனைகள் நடைபெற்று பின்னர் இல. 7770 Steeles Ave East Pickaring ல் அமைந்துள்ள Christ The King மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பானவர்களே! வல்லிபுரமும் மகன்களும் 1920ம் ஆண்டு கிறீஸ்தவப் பெயர்களை மாற்றிக் கொண்டு வாழ்ந்து வந்த போதும் அவர்கள் 1924ம் ஆண்டுதான் கத்தோலிக்க மத முறைமையின் படி திருமுழுக்கு ஞானஸ்தானம் பெற்றுக் கொண்டு முழுமையாகக் கத்தோலிக்கர்கள் ஆனார்கள். இவர்கள் வெள்ளாம்போக்கட்டி என்கின்ற ஊரில் முதல்முதலாக கிறீஸ்தவர்கள் ஆனார்கள். அதன் பின்னர் செபமாலையுடைய உயிர் நண்பர்களான திரு. பத்தினாதர் என்பவரும் அல்லாரை ஊரைச் சேர்ந்த திரு (சின்னப்பு) சின்னப்பொடி அப்பா என்பவரும் கிறீஸ்தவ மதத்தை தழுவிக் கொண்டனர். (இவர்கள் இருவரைப் பற்றி பத்திநாதர் மற்றும் சின்னப்பு என்று தலையங்கத்துடன் எனக்குத் தெரிந்த சில சிறு குறிப்புக்களை செபமாலை அவர்களுடைய இந்த நினைவு நாள் மலரில் நான் பிரசுரம் செய்கின்றேன். தயவு செய்து பார்க்கவும். இதுவரை இவர்களால் நடத்தப்பட்ட கல்விக் கூடத்தில் பாடங்கள் தொடங்கு முன்னர் கிறீஸ்தவ ஜெபத்துடன் பாடசாலை ஆரம்பிப்பது வழக்கம். ஆனால் செபமாலை குடும்பம் திருமுழுக்குப் பெற்ற பின்னர் அங்கு ஒரு மாதா சிலை வைக்கப்பட்டு கல்விக் கூடத்தில் கிறீஸ்தவ மதம் கல்வியை ஒரு பாடமாகக் கற்றுக் கொடுக்கத் தொடங்கினார்கள். அதற்காக பிரான்சீஸ்க்கா என்றொரு சகோதரியை நியமித்தார்கள். உபதேசியார் சந்தியாப் பிள்ளையும் பிரான்சீஸ்கா என்ற சகோதரியும் பல ஆண்டுகளாக இங்குள்ள மக்களுக்கு கல்வி கற்றுக் கொடுத்து வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த நாட்களில்தான் சுவாமிஞானப்பிரகாசம் அருட்திரு பிரான்சீஸ் சேவியர் என்ற மதகுருவானவரை இந்த ஊர் மக்களுக்கு அறிமுகம் செய்துவிட்டு தன்னுடைய அனைத்துப் பெறுப்புக்களையும் அவர்களிடம் ஒப்படைத்து விட்டு தானும் பிரியாவிடை பெற்று வேறு இடங்களுக்கு மற்றம் பெற்று அந்த ஊர் மக்களுக்காக சேவைகள் செய்வதற்காகச் சென்று விட்டார். அதற்கு முன் அவரால் உருவாக்கப்பட்ட கல்விக் கூடத்தில் வைக்கப் பட்டிருந்த மாதா சிலைக்கு செபமாலை மாதா என்று பெயர் சூட்டினார். காரணம் செபமாலை சிறு வயதில் தன் தாயை இழந்து தாய் அன்புக்காக ஏங்கிய மகன் என்பதை சுவாமிஞானப்பிரகாசம் நன்றாக அறிந்து வைத்திருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதைவிட செபமாலை சுவாமி ஞானப்பிரகாசத்தில் நல்ல மரியாதையும் மிகுந்த தெய்வபக்தியுள்ள ஒரு மனிதராகவும் இருந்தார். அதன் காரணமாக அந்த மாதா சிலைக்கு செபமாலைத் தாய் என்று பெயரை சூட்டினார். இது முற்று முழுதாக சுவாமி ஞானப்பிரகாசத்தடைய விருப்பத்தால் மட்டுமே செய்யப்பட்டது. ஆனால் இந்த மாதா சிலைக்கு முதலில் கச்சாய் மாதா என்ற பெயர் சூட்டப் பரிந்துரைக்கப் பட்டது குறிப்பிடத்தக்கது. அதன் பின்னர் அருட்திரு. பிரான்சீஸ்செவியர் கல்விக் கூடத்தில் இருந்த மாதாவுக்கு கோவில் கட்டும் பணிகள் எப்படிச் செய்யலாம் எனத் திட்டங்கள் போடத் தொடங்கினர். அதன் காரணமாக 1924ம் ஆண்டு ஐப்பசி மாதம் ஏழாம் திகதி ஒரு செவ்வாய்கிழமை அந்த ஊர் மக்களின் உதவியுடன் செபமாலை மாதாவுக்கு கோவில் கட்டுவதற்காக மரத்தூண்களால் ஒரு கோவில் அமைத்தனர். அந்த நாளைத்தான் இன்று செபமாலை மாதாவுக்கு திருநாளாக கொண்டாடப்படுகிறது.

## திருமணங்களும் கோவில் கட்டும் பணிகளும் செபமாலை

செபமாலையின் தந்தையுடைய மறைவுக்குப் பின்னர் 1927ம் ஆண்டு தனது இருபத்திஇரண்டாவது வயதில் தனது உறவுக்காரப் பெண்ணான சின்னத்தங்கம் என்ற பெண்ணை மேரி என்று பெயர் மாற்றம் செய்து கத்தோலிக்க முறைப்படி திருமணம் செய்து கொண்டார். அதனால் சின்னத்தங்கம் அவரது சொந்தக்காரர்களால் புறக்கணிகப்பட்டார். ஆனால் செபமாலை அப்பு காட்டிய அன்பு அவருக்கு அப்போது அறுதலாக இருந்தது இவர்கள் இருவரும் ஞானப்பிரகாசம், ஆசீர்வாதம் என்று இரண்டு ஆண் பிள்ளைகளைப் பெற்றெடுத்தனர். செபமாலை அப்பு, சுவாமி ஞானப்பிரகாசம் அவர்கள் மேல் வைத்துள்ள மாறாத அன்பின் காரணமாகத் தனக்கு பிறந்த மூத்த மகனுக்கு அவர் பெயரான ஞானப்பிரகாசம் என்ற பெயரைச் சூட்டினார். ஆனால் இவர்களுடைய சந்தோசம் நீண்ட நாட்கள் நீடிக்கவில்லை. மேரி தனது இரண்டு பிள்ளைகளையும் பெற்று தன் கணவரிடம் கொடுத்துவிட்டு மிகக்குறுகிய காலத்தில் 1932ம் ஆண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமணம் முடித்து சுமார் ஐந்து ஆண்டுகளில் இந்த உலகை விட்டு அவர் மறைந்துவிட்டார். (செபமாலையுடைய முதல் மனைவியுடைய பெயர் மேரி என்று இங்குள்ள மக்கள் பலருக்குத் தெரியாது. செபமாலை தான் இறப்பதற்கு முன்பு ஒரு கடிதத்தில் தன்னுடைய மனைவி பெயர் மேரி என்று எழுதி வைத்திருந்தார். அதனையும் இங்கு பிரசுரம் செய்கின்றேன்.) அதன் பின்னர் செபமாலை தன் மனைவியை இழந்து சின்னஞ் சிறு குழந்தைகளுடன் கஸ்டப்படுவதைப் பார்த்த அவரது உறவினர்கள் அவருக்கு கோப்பாய் ஊரைச் சேர்ந்த மரியம்மா என்ற பெண்ணைத் திருமணம் செய்து வைத்தனர். செபமாலை முதல் மனைவியில் இருந்த அதீத பற்றின் காரணமாக மரியம்மா என்ற பெண்ணை மேரி மரியம்மா எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டு அவரைத் திருமணம் செய்து கொண்டார். (மரியம்மாவுக்கு மேரி மரியம்மா என்று பெயர் மாற்றம் செய்யப் பட்டதையும் செபமாலை எழுதி வைத்துள்ள கடிதத்தில் நீங்கள் பார்க்கலாம். செபமாலைக்கும் மேரி மரியம்மாவுக்கும் ஐந்து பிள்ளைகள் பிறந்தனர்.



**செபமாலை அவர்களால் கோவில் முகப்பில் மாதா சுருவம் வைக்கப்பட்ட போது அருகில் நிற்பவர் அவரின் தொட்டமகன் லூர்த்துநாயகம்...**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

J.M.J

Kandy Road
Chavakachcheri
11-03-89.

1905ம் ஆண்டு சித்திரை மாதம் பி.ப 24ம் திகதி வல்லி. சின்னத்தம்பி ஆகிய நான் மண்ணில் உதித்தேன். எனது ஆறாவது வயதில் தாயாரை இழந்து தந்தையாருடன் எனது குழந்தைப் பருவத்தை கழித்தேன். தந்தையாரின் அரவணைப்பில் வளர்ந்து வரும் போது எனக்கு அவர்கள் வ. செபமாலை என்னும் நாமப் பெயரை இட்டார்கள். 20ம் ஆண்டு இப் பெயர் சூட்டப்பட்டது. ஞானப்பிரகாசம் சுவாமியால் எனக்கு இப் பெயர் சூட்டப்பட்டது. 24ம் ஆண்டு நான் இந்து மதத்தை விட்டு கத்தோலிக்க மதத்தை தழுவிக் கொண்டேன். 27ம் ஆண்டு மேரி என்பவரை எனது வாழ்க்கை துணைவியாக ஏற்றுக் கொண்டேன். எங்களுக்கு 2 புதல்வர்கள் பிறந்தார்கள். 1932ம் ஆண்டு என்னை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறாத்துயரில் ஆழ்த்தி விட்டு மரியாயா
இறைவனடி சேர்ந்து விட்டார்.
பின் ~~[illegible]~~மாக 30ம் ஆண்டு
மூத்த புதல்வனை ஞானப்பிரகாசம்
உற்பவித்தார். அந்த புதல்வனின்
பெயர் ஆசீர்வாதம் என்பவராவர்.
பிரசித்தமான
என்றும் [illegible] போக்கடியில்
34ம் ஆண்டு பிரான்சின் ஆசியா
என்றும் தேவால ஜெபமாலை மாதா'
கோவில் கட்டப்பட்டது.
இதன் பிறகு 2வது துணைவியாக
ஒரு தனிமையை போக்க மேரி.
மரியம்மாவை ஏற்றுக் கொண்டேன்
இவர்களுக்கு 2 ஆணும் 3 பெண்களும்
மண்ணில் வந்து தவழ்ந்தார்கள்
3 புத்திரியில் ஒரு பெண் சிறு வயதில்
இறந்து விட்டார்.
54ம் ஆண்டு ஒரு
அறிவுத்திறனில் ஆக்கத்தால்
மூப்பர், சங்கிலித்தான் என்ற
பட்டம் தேவால வழங்கப்பட்டு
இப் பதவியை கண்ணும் கருத்துமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணியத்துடனும் கடமையுடனும்
ஆற்றி 74ம் ஆண்டு எனது
தள்ளாடும் வயதில் இளைப்பு.
அறிவிப்பிற்கு கைச்சாத்திடப்பட்டு
பின் சிறிது காலம் ஓய்வெடுத்து
அதன்பின்
தற்பொழுது நோய் வாய்ப்பட்டு
சாவகச்சேரி [illegible] உசனில்
வசிக்கிறேன். இப்பொழுது எனது
துணைவியார் மேரியுடனும் மகள்
பிலோமினாவுடனும் இறுதிக்
காலத்தை கழித்துக் கொண்டிருக்
கிறேன். மற்றபடி [illegible]
இறைவனின் திட்டம்தான்.

நன்றி

இப்படிக்கு.
வ. சீ. ஜெபமாலை

R. Shantha
குறிப்பு எழுதியவர்.

இதுதான் அப்பு சாகுமுதல் எழுதிவைத்த தனது வாழ்க்கை வரலாற்றுக் கடிதம். இதை உங்கள் எல்லோருக்கும் காட்டும்படி சொன்னார். அப்படியே நான் உங்களுக்கு அனுப்புகிறேன். நீங்கள் எல்லோருக்கும் காட்டுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பானவர்களே! சில வருடங்களுக்குப் பின்பு செபமாலை மாதாவுக்கு கோவில் கட்ட அடிக்கல் நாட்ட ஆயத்தமானார்கள். அப்போது செபமாலை அவர்களுக்கும் அவருடைய சொந்தத் தம்பியாரான முடியப்பு அவர்களுக்கும் இருந்த தங்களது சொந்தமான காணியில் மரங்களினால் கட்டப்பட்டு ஓலையால் வேயப்பட்ட அந்தக் கோவில் இருந்த சுமார் நாற்பதுக்கும் மேற்பட்ட நிலப்பரப்பில் பெரும்பகுதியை செபமாலையும் மிகுதியாக இருந்த முடியப்பு வுக்குச் சொந்தமான நிலப் பரப்பபையும் கோவில் கட்டும் பணிக்காக செபமாலை மற்றும் முடியப்பு இருவரும் மனமுவந்து அன்பளிப்பாகக் கொடுத்து விட்டனர். அந்தக் கோவில்தான் இன்று உங்கள் முன் அழகாகக் காட்சியளிக்கும் செபமாலை மாதா ஆலயமாக இருக்கிறது. அன்பானவர்களே! செபமாலை அப்புவின் மனஉறுதியையும் அவருடைய தெய்வ நம்பிக்கையும் பாருங்கள் அவருக்குச் சொந்தமாக இருந்த காணியை கோவில் கட்டும் பணிக்கு அன்பளிப்பாகக் கொடுத்து விட்டு, தான் குடியிருக்க வீடு இல்லாமல் தன் மனைவியுடனும் இரண்டு பிள்ளைகளுடனும் அருணாசலம் என்பவருக்கு சொந்தமான காணியில் அவருடைய அனுமதியுடன் இரவலாக ஒரு ஓலைக் குடிசை அமைத்து வாழ்ந்து வந்தார். பின் நாட்களில் செபமாலை மற்றும் அவரது இரண்டாவது மனைவி மேரி மரியம்மா இருவரும் சேர்ந்து திரு. அருணாசலம் அவர்களிடம் அந்தக் காணியினை தங்களுக்குச் சொந்தமாகவாங்கிக் கொண்டனர். அன்பானவர்களே! செபமாலையுடைய பெற்றோருக்கும் மற்றும் அவர்களுடைய மூதாதையினருடைய அறியாமையைப் பயன் படுத்தி அன்றைய படித்த ஒரு அறிவுக்கூட்டம் அவர்களுடைய நிலபுலன்களை அவர்களுக்கே தெரியாமல் அபகரித்துக் கொண்டனர். கல்வி அறிவு இல்லாதால் தாங்கள் பட்டதுயரம் தன் சந்ததிக்கு வரக்கூடாதென்ற காரணத்தால் தான் செபமாலைக்கு பாடசாலை ஒன்று உருவாக்கும் எண்ணம் அப்போதே தோன்றியுள்ளது.

வெள்ளாம்போக்கட்டி ஊரில் கோவில் கட்டும் பணிதொடங்க ஆயத்தமானர்கள். அதனால் செபமாலை முடியப்பு, பத்திநாதர், சின்னப்பொடியப்பா ஆகிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களுடன் ஊரிலுள்ள அனைத்துச் சமுதாயத்தையும் சேர்ந்த மக்களும் பாகுபாடு இல்லாமல் பணம் பொருள் முதல் கொண்டு மற்றும் அனைத்து உதவிகளையும் தங்களால் முடிந்தவரை செய்தார்கள். இதில் குறிப்பாக அல்லாரை ஊரைச் சேர்ந்த அண்ணன், தம்பிகளான திரு. வல்லிபுரம், திரு. மாணிக்கம் ஆகிய இருவரும் கிறிஸ்தவ மதத்தில் பற்றுக்கொண்டு தங்கள் தங்கள் பிள்ளைகளையும் வளர்த்து வந்தனர். பின்பு அவர்களுடைய அனைத்துப் பிள்ளைகளும் இன்றுவரை கிறிஸ்தவ முறைப்படி வாழ்கின்றார்கள். இதுமட்டுமல்ல பலர் கிறிஸ்தவர்களாக மதம் மாறவும் முயற்சித்தார்கள். அப்படி அந்த ஊர் மக்கள் மிகவும் ஆர்வமாக இருந்தார்கள். அதனால் சந்தோசமடைந்த செபமாலை தன்னுடைய புது மனைவியுடைய தங்கநகைகள் சிலவற்றையும் தான் காதில் அணிந்திருந்த தோட்டுக் கம்மலையும் (செபமாலை அந்தக் காலத்தில் பெண்கள் போல நீண்ட தலை முடியும் காதுகளில் கம்மலும் அவர் பெற்றோர்களின் விருப்பப்படி அணிந்திருந்தார். அன்றைய காலத்தில் சற்று வசதியுள்ள பெற்றோர்கள் இப்படிச் தங்கள் பிள்ளைகளுக்குச் செய்வது வழக்கமாக இருந்து வந்தது குறிப்பிடத்தக்கது. அவர் மட்டுமல்ல அவருடைய நண்பன் அல்லாரை ஊர் சின்னப்பொடி அப்பாவும் (சின்னப்பு) செபமாலையைப் போலவே காதில் கம்மலும் தலையில் கொண்டையும் அணிந்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது) கோவில் கட்டும் பணிக்காகக் கொடுத்து உதவினார். இதுவரை காலமும் அமைதியாக இருந்த மேட்டுக் குடியினர் கோவில் வளரவளர கிறீஸ்தவமதம் வளர்ந்துவிடும் அச்சத்தால் பயந்த அவர்கள் அதை இல்லாதொழிக்கப் படாது பாடுபட்டனர். பல சூட்சிகளும் செய்து பார்த்தார்கள். முடியவில்லை. அதனால் கோபமடைந்த அவர்கள் கிறீஸ்தவம் மாறியிருந்த செபமாலை, முடியப்பு, பத்திநாதர், சின்னப்பொடிஅப்பா மற்றும் கிறீஸ்தவ சமையம் மாறவிருந்த வேறும் சில இளைஞர்கள்மீது ஒரு பொய் வழக்குப் போட்டார்கள். அந்த வழக்கு கொடிகாமம் தொடரூர்ந்து (புகைவண்டி) ஒடு பாதையிலுள்ள (தண்டவாத்திலுள்ள) மரக்கட்டையை கழட்டிவிட முற்பட்டார்கள் என்பதுதான் அந்த பொய் வழக்கு. அதனால் காவல்துறை (பொலிஸ்) இவர்களைத்தேடி சம்மன் கொண்டுவந்தார்கள். இதனால் பயந்த இவர்கள் பல நாட்களாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடுகளுக்கு வராமல் காடுகளில் மறைந்து வாழ்ந்தார்கள் இந்த அப்பாவி மக்கள். இதைக் கேள்விப்பட்ட மதகுருமார்கள் வெள்ளாம்போக்கட்டி ஊருக்கு வந்து காட்டில் மறைந்திருந்த இளைஞர்கள் எல்லோரையும் வரவழைத்து அவர்களுக்கு இருக்கிற பயங்களைப் போக்கி அவர்கள் எல்லோரையும் காவல் நிலையத்துக்கு அழைத்துக் கொண்டு சென்று அங்குள்ள காவலர்களுக்கு இவர்களுடைய பிரச்சனைகளை எல்லாம் எடுத்துச் சொல்லி இவர்கள் இப்படிப்பட்ட காரியங்களை என்றுமே செய்யமாட்டார்கள் இவர்களை விடுதலை செய்யுங்கள் என்றும் எனிமேல் இப்படியான சம்பவங்கள் இவர்களுக்கு நடக்கக் கூடாது அப்படி ஏதும் இவர்களுக்கு நடந்தால் முதலில் தங்களிடம் அதாவது மதகுருமாரிடம் முறையிடும்படி சொல்லி விட்டு இவர்கள் எல்லோரையும் அழைத்துக் கொண்டு வந்து அவரவர் குடும்பத்தினரிடம் ஒப்படைத்து விட்டனர். இதனால் மதம்மாற இருந்த சிலர் அவர்களுடைய பயத்தின் காரணமாக மதமாற்ற யோசனையைக் கைவிட்டனர். அதன் பின்னர் விழித்துக் கொண்ட மேட்டுக்குடியினர் செபமாலையுடைய சைவசமைய உறவினர்கள் சிலபேரை தங்களுடன் அழைத்து அவர்களுக்கு ஒரு சைவக் கோவிலை உருவாக்கும்படி ஆலோசனை சொல்லி உருவாக்கவும் செய்தனர். அதன் காரணமாக <u>அண்ணமார்</u> என்ற ஒரு சைவக் கோவில் உருவானது. இதில் அவர்கள் செய்த சூட்சி என்னவென்றால் கோவில் உங்களுடையது தான் என்று சொல்லிவிட்டு அவர்களை கோவிலுக்குள் செல்வதையோ, சாமிக்கு பூஜை, பிராத்தனை செய்வதையோ, சாமிக்குப் பக்கம் செல்வதையோ, அன்னதானம் சமைக்கவோ, கொடுக்கவோ அவர்கள் அனுமதிக்கவில்லை. பணத்தை மட்டும் கொடுத்துவிட்டு அவர்கள் வெறும் பார்வையாளராகவும் சாமி வந்து உரு ஆடுகிறவர்களாகவும் மட்டுமே இருந்தார்கள். இது பல பத்தாண்டுகளாக நடை முறையில் இருந்து வந்தது. இப்போது எல்லோரும் படித்து, அறிவிலிகளாகி விழித்துக் கொண்டனர். அதனால் இப்போது அந்தக் கோவிலை அவர்களே தனித்து நின்று நிர்வகித்து வருகின்றார்கள். அன்பானவர்களே! இவர்கள் தங்களுக்கு ஒரு சைவக் கோவில் உருவாக்கி வணங்கி வந்ததன் விளைவாக கிறீஸ்தவ மதம் மாறும் அவர்களுடைய யோசனையை அடியோடு தகர்த்தெறியப்பட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் வெற்றியும் கண்டனர். அதன் பின்னர் இன்றுவரை வெள்ளாம்போக்கட்டி என்ற கிராமத்தில் யாருமே கத்தோலிக்கர்களாக மதம் மாறவில்லை. மாறாக மதம் மாறியிருந்த கிறீஸ்தவர்கள் தங்கள், தங்கள் உறவினர்களை கிறீஸ்தவ மதம் மாறும்படி அவர்களை வருந்தி அழைத்ததும் கிடையாது. அன்பானவர்களே! வெள்ளாம்போக்கட்டி என்கின்ற எமது சொந்தக் கிராமத்தில் 1924ம் ஆண்டு ஐப்பசி மாதம் ஏழாம்திகதி தொடங்கப்பட்ட செபமாலை மாதா ஆலயம் இன்று அதாவது 2021ம் ஆண்டு தனது 97 வயதில் காலடி எடுத்து வைக்கிறது. இந்தக் கோவிலின் கட்டுமானப் பணிகள் நடைபெற ஆரம்பகாலத்தில் செபமாலை முடியப்பு, பத்தினாதர், சின்னப்பு ஆகிய இந்த நால்வரும் மிகவும் கஸ்டப்பட்டு உழைத்தார்கள். அதன் பின்பு இந்தக் கோவிலின் வளர்ச்சிக்காக அனேக நல்ல உள்ளம் கொண்ட அன்பானவர்கள் இன்றுவரை உழைத்துக் கொண்டு இருக்கின்றனர். இந்தக் கோவில் ஆரம்பிக்கப்பட்டு சுமார் 97 ஆண்டுகளில் அனேக மத குருமார்கள் இந்தக் கோவிலில் பங்குத்தந்தையர்களாக பணிபுரிந்திருக்கின்றனர். அவர்களில் அருட்திரு. பிறான்சீஸ் சேவியர், அருட்திரு. பொன்னையா, அருட்திரு. ஜெலாம் இவர் இத்தாலி நாட்டை சேர்ந்தவர். தமிழ் நன்றாகப் பேசக் கூடியவர். அருட்திரு. சுவம்பதி, அருட்திரு. குலாஸ், அருட்திரு. கருணாகரன், அருட்திரு. வில்வரசிங்கம் அருட்திரு பற்றிக், அருட்திரு. சேதிநாதர், அருட்திரு. பத்திநாதர், அருட்திரு. ஜெயறஞ்சன், அருட்திரு. ஜேம்ஸ் 2020ம் ஆண்டு இந்தப் புத்தகம் எழுதும் காலகட்டத்தில் அருட்திரு. இருதயதாஸ் என எண்ணற்ற பலர் செபமாலை மாதா ஆலையத்தில் பங்குத் தந்தையர்களாகக் பணிபுரிந்தனர். இவர்களைத் தவிர என்னும் பல மதகுருமார்கள் பணிபுரிந்தனர். அவர்களுடைய பெயர் விபரங்கள் எனக்குக் கிடைக்கப் பெறவில்லை. இந்த பங்குத் தந்தைகளுடைய பெயர் விபரங்களை எனக்கு தந்து உதவிய டெனிஸ் மற்றும் மரியநாயகம் ஆகிய இருவருக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றிகள்.



திரு. டெனிஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வெள்ளாம்போக்கட்டி தமிழ்ப்பாடசாலை 2008

## வெள்ளாம்போக்கட்டி பாடசாலையும் செபமாலையும்

வெள்ளாம்போக்கட்டியில் செபமாலை மாதா ஆலயம் அடிக்கல் நாட்டப்பட்டு மிகவேகமாக வளர்ந்து கொண்டிருந்தது. அப்போது கோவில் இருந்த அந்த நிலத்தை புனிதப் பூமியாக அவ்வூர் மக்கள் நினைத்துக் கொண்டனர். அதனால் அங்கிருந்த சிறுவர்கள் பல ஆண்டுகளாகப் கல்வி கற்று வந்த கல்விக்கூடம் வேறு இடத்திற்கு மாற்றம் செய்யப்பட வேண்டும் என்று அந்த ஊர் மக்களால் கோரிக்கை விடுக்கப்பட்டது. அப்போது செபமாலை அவர்களால் கோவில் வளவின் கச்சாய் பிரதான வீதியை அண்டியுள்ள நிலப்பரப்பில் அந்தப் பாடசாலையை அமைக்கும் படி யோசனையை முன்வைத்தார். அதை விரும்பாத மேட்டுக்குடியினர் ஊர் மக்களுடன் உறவாடி நாங்களும் உங்களுடன் கைகோர்த்துச் செல்ல விரும்புகிறோம் என்று நட்பு நாடி வந்து அந்தப் பாடசாலை அமைக்க நாங்களும் உங்களுடன் சேர்ந்து உழைக்கிறோம் என்று சொன்னார்கள். அதனால் அந்தப் பாடசாலை ஊருக்கு நடுவே அமைக்கும்படி யோசனை சொல்லப்பட்டு, அதை இன்று பாடசாலை அமைந்துள்ள


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடத்தில் நிறைவேற்றியும் வைத்தனர். இந்தப் பாடசாலை அமைக்க ஜாதி, மதம் பாராமல் எல்லோரும் பாடுபட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால் ஏன் இந்தப் பாடசாலையை ஊருக்குள் அமைக்கும்படி சிலர் கட்டாயப்படுத்தினார்கள் என்றால் செபமாலை சொன்ன ஆலோசனைப்படி அந்தப் பாடசாலை கச்சாய் பிதான வீதியோரமாக அமைத்திருந்தால் பிரதான வீதியோரமாகப் அனுதினமும் செல்லும் மக்களின் பார்வைபட்டு பிற்காலத்தில் அது வளர்சியடைந்துவிடும் என்று முன்கூட்டியே அவர்கள் போட்ட சதித் திட்டத்தின் பயனாகவே அப்படிச் செய்தார்கள். இவர்களின் சூழ்ச்சியை அறியாத மக்கள் எங்கிருந்தாலும் எங்களுக்கு ஒரு பாடசாலை இருந்தால் சரியென நினைத்து சந்தோசப்பட்டனர். அந்தப் பாடசாலை நிலம் குறித்து பலர் பல்வேறு கருத்துக்களை பலர் என்னிடம் சொன்னார்கள். அதனால் அவர்களுடைய நம்பகத்தன்மை குறித்து எனக்குத் தெளிவான புரிதல் இல்லாத காரணத்தால் அந்த நிலம் குறித்த விடயங்களை என்னால் எல்லாவற்றையும் இங்கு உறுதியாக எழுத முடியவில்லை. ஆனாலும் பெரும்பாலான மக்கள் சொல்லும் கருத்து, இந்தக் காணிவளவும் செபமாலை, முடியப்பு இவர்களுடைய தகப்பனுக்குச் சொந்தமான காணியாக இருந்தது என்று.

இந்தப்பாடசாலையை உருவாக்க ஊர் மக்கள் அனைவரும் ஜாதி, மதம் பாராமல் <u>அருட்திரு. பொன்னையா</u> என்ற கத்தோலிக்க மதகுருவுடன் ஒன்று சேர்ந்து பெரிய சீமேந்தால் செய்யப்பட்ட கொங்கிறீற் தூண்கள் கொண்டு வரப்பட்டு இரவோடு இரவாக பாடசாலை அமைக்கப்பட்டது. பாடசாலை அமைக்கப்பட்டு ஒரிரு ஆண்டுகளின் பிள்ளைகளுடைய வரவு மிகவும் கூடியதால் அந்தப் பாடசாலையை அரசாங்கப் பாடசாலையாக மாற்றினால் நல்ல பலன் கிடைக்கும் என்ற காரணத்தால் அன்றைய மதகுருவாக இருந்த <u>அருட்திரு. பொன்னையா</u> அவர்களால் யோசனை முன்வைக்கப்பட்டு அப்பாடசாலை அரசாங்கப் பாடசாலையாக மாற்றம் செய்ய அறிவிக்கப்பட்டு, பின்னர் அரசாங்கத்துக்கு சொந்த மாற்றப்பட்டது. இதுவரை காலமும் கத்தோலிக்க மெஷினெறிகளாலும் மதகுருமார்களாலும் இலவசமாக நிர்வகிக்கப்பட்டுவந்த கல்விக்கூடம் <u>1953ம் ஆண்டு</u> அரசாங்கப் பாடசாலையாக மாற்றப்பட்டு அரசுக்குச் சொந்தமாக்கப்பட்டது என நினைக்கிறேன். அதன் பின்னர் முதல் வகுப்பிலிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்தாம் வகுப்புவரை இப்பாடசாலையில் நடைபெறுமென அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டு அதன்பின்பு அது நடைமுறைப்படுத்தப்பட்டது. அப்போது பிள்ளைகளின் வரவு கூடியதால் இப்போது இருக்கும் நீள அகலமுடைய மூன்று கட்டடங்களை அமைத்து ஓலையால் வேயப்பட்டு பாடசாலை உருவாக்கப்பட்டது. வெள்ளாம்போக்கட்டி அரசினர் பாடசாலை யாக அறிவிக்கப்பட்ட போது அப்போது அங்கு ஆசிரியர்கள் தேடும் பணியை ஆரம்பித்தனர். அதில் செபமாலையுடைய விருப்பத்தின்படி அவரது மனைவியின் சொந்தக்காரப் பெண்ணான கோப்பாய் ஊரைச் சேர்ந்த விக்றோறியாராணி என்ற படித்த பெண் பிள்ளையையும் செபமாலையுடைய சொந்தக்காரர்களான சரசாலை என்ற ஊரைச் சேர்ந்த தவராசா என்கின்ற படித்த ஆண்பிள்ளையும் பாடசாலையின் முதலாவது ஆசிரியர்களாக நியமித்தார்கள். இந்தப் பாடசாலையின் முதல் அரசாங்க ஆசிரியர்கள் இவர்களே ஆவார்கள். இதில் விக்றோறியாராணி ஆறு ஆண்டுகள் செபமாலையுடைய வீட்டில் தங்கியிருந்து கொண்டு பிள்ளைகளுக்கு கல்வி கற்பித்துக் கொடுத்தார் என்பது இந்த ஊர் மக்கள் பலரும் அறிந்த விடயமென நான் கருதுகிறேன்.


திருமதி. விக்றோறியாராணி

இந்த வெள்ளாம்போக்கட்டி பாடசாலை அரசாங்கப் பாடசாலையாக மாற்றப்பட்ட பின்னர் வெள்ளாம்போக்கட்டி கொடிகாமம், அல்லாரை, கச்சாய் ஆகிய ஊர்களிலிருந்து ஜாதி, மதம் பார்க்காமல் அனைவரும் தங்கள் தங்கள் பிள்ளைகளை இந்தப் பாடசாலைக்கு கல்வி கற்க அனுப்பிவைத்தார்கள். குறிப்பாகச் சொல்லவேண்டுமென்றால் அந்த ஊரைச் சேர்ந்த மதிப்புக்குரிய சேர்மன் செல்லையா அவர்கள் கூட தன் பிள்ளைகளை இந்தப் பாடசாலையில் படிக்கும்படி அனுப்பிவைத்தார் என்பது இங்கு குறிப்பிடத் தக்கது. ஆனால் சிலகாரணங்களால் செபமாலையுடைய பேரப்பிள்ளைகள் மற்றும் சில நெருங்கிய சொந்தங்களின் பிள்ளைகள் சிலர் இந்தப் பாடசாலையில் கல்வி கற்க அவர்கள் பெற்றோர்களால் அனுமதி மறுக்கப்பட்டு வேறு பாடசாலைக்கு கல்வி கற்க அனுப்பிவைக்கப்பட்டனர். ஆனால் அப்போது இந்தப் பாடசாலையில் ஐம்பது, அறுபது பிள்ளைகளுக்கு மேல் கல்விகற்றனர். ஐந்து ஆசிரியர்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்குள்ள பிள்ளைகளுக்கு கல்வி கற்பித்தனர். கிட்டத்தட்ட சுமார் இருபது வருடங்களுக்கு மேலாகப் பிள்ளைகளுடைய வரவு இப்படியே தான் இருந்து வந்தது. இந்தப் பாடசாலையில் புகழ்பெற்ற பல ஆசிரியர்கள் கல்வி கற்ப்பித்தனர். அவர்களில் எனக்கு ஞாபகம் இருக்கும் ஒரு சில ஆசிரியர்களுடைய பெயர்களை குறிப்பிட விரும்புகிறேன். திரு. தவராசா, திருமதி. விக்றேறியாஇராணி, திரு. சிதம்பரநாதன், திரு. வல்லிபுரம், திருமதி. அருந்தவநாயகி, திருமதி. கமலாம்பிகை, திரு. பூபாலசிங்கம், திருமதி. பூபாலசிங்கம் திரு. இரத்தினபூபதி, திரு. வினாயகமூர்த்தி, திரு. சிவசம்பர் என்று என்னும் பல ஆசிரியர்கள் இந்தப் பாடசாலையில் ஆசிரியர்களாகப் பணிபுரிந்தனர். ஆனால் இந்தப் பாடசாலை 1973ம் ஆண்டுக்குப் பின்னர் பிள்ளைகளுடைய வரவு குறைந்து குறைந்து இந்தப்பாடசாலையில் பிள்ளைகள் யாருமே படிக்க வருகைதராத காரணத்தால் 1983ம் ஆண்டுக்கு முன்னர் இப்பாடசாலை முற்றாகவே மூடிவிட்டனர். இங்கு கவலைப்பட வேண்டிய விடயம் என்னவென்றால் இந்த ஊர்களில் பிள்ளைகளின் பிறப்பு வீதம் குறைந்ததனால் பாடசாலைக்கு பிள்ளைகளின் வரவு குறையவில்லை மாறாக தங்களுடைய பிள்ளைகள் மிக உயர்ந்த பாடசாலைகளில் படிப்பிக்க வேண்டும் என்று எற்பட்ட பெற்றோர்களின் எண்ண மாற்றத்தின் காரணமாகவே இப்படிச் செய்தார்கள். அன்பானவர்களே செபமாலை தனது பதினைந்தாவது வயதில் வெள்ளாம்போக்கட்டி ஊருக்கு ஒரு பாடசாலை அமைக்க வேண்டும் தன் மக்கள் மற்றவர்கள் முன் தலை நிமிர்ந்து நிற்கவேண்டும் அதற்கு படிப்பும் அதனால் வருகிற அதிகாரமும் தான் நிறைவேற்றும் என்று விரும்பி ஆசைப்பட்டார். ஆனால் இந்த ஊர் மக்கள் செபமாலையுடை மனதிலுள்ள ஆசைகளை இன்றுவரை நிறைவேற்றவில்லை. இவற்றிற்குக் கூட செபமாலை என்றுமே கவலைப்பட்டது கிடையாது. ஆனால் இவ்வளவு கஸ்டப்பட்டுக் கட்டிய பாடசாலை மூடப்பட்டு விட்டது அதனால்கூட அவர் கவலைப் பட்டது கிடையாது. ஆனால் அந்தப்பாடசாலையை காட்டுப் பூனைப் பாடசாலை என்று பலர் கூறுகின்றனர். அதுதான் தன்னுடைய கவலை என்று செபமாலை எனக்குச் சொல்வார். என்ன காரணத்துக்காக இந்தப் பாடசாலை உருவானது என்று யாருமே இதுவரை யோசித்ததுப் பார்த்தது கிடையாது. வேறு யாராவது கூறினாலும் பரவாயில்லை தன்னுடைய ஊர் மக்களும் தன்னுடைய சொந்தக்காரர்களும் வெள்ளாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போக்கட்டிப் பாடசாலையை காட்டுப்பூனை குடியிருக்கக் கட்டிய பாடசாலை என்று சொல்லும்போது சற்றுக் கவலையாக இருக்கிறது என்று சொல்வார். அன்றைக்கு நானும் அதைப் பொருட்படுத்தாமல் காட்டுப்பூனையின் பாடசாலை என்று சொன்னேன். அதை நினைத்து இன்று நான் மிகவும் கவலைப்படுகிறேன். அன்பானவர்களே சற்றுச் சிந்தித்துப் பாருங்கள் நான் இங்கு எழுதியவைகள் இந்த ஊர் மக்கள் ஒன்றும் அறியாதவை அல்ல. நீங்கள் மறந்து கொண்டிருப்பவைகளை நான் இங்கு ஞாபகப்படுத்துகிறேன் அவ்வளவுதான். இவற்றை நான் இப்போது ஞாபகப்படுத்த வில்லை என்றால் நீங்கள் எல்லோரும் மறந்து விடுவீர்கள். இவற்றை நான் இப்போது செய்யாவிட்டால் எனிமேல் யாரும் எப்பவும் இதைச் செய்யமாட்டார்கள் என்பது சத்தியமான உண்மை. அன்பானவர்களே அமைதியாகவும் மௌனமாகவும் இருந்து செபமாலை என்ற ஒரு மனிதன் செய்த செயல்களைப் போலவே வேறு ஊர்களில் யாராவது செய்திருந்தால் அந்த மனிதனை அந்த ஊர் மக்கள் புகழ் பாடிப் போற்றியிருப்பார்கள் அல்லவா? ஆனால் நீங்கள் செபமாலை என்பவரை?

## வாலிபன் வயதில் செபமாலை

செபமாலை அப்புவுடைய முன்னோர்களும் அவர்களைச் சார்ந்த அவர் உறவுகளும் அன்பானவர்களாய் மிக மிக ஒற்றுமையாக ஒருவருக்கொருவர் உண்மையான நல்ல இரக்க குணம் கொண்ட சமுதாயத்தினர். யாருடைய வம்பு தும்புக்கும் சண்டை சச்சரவுகளுக்கும் போகாதவர்கள். தாமுண்டு, தம்வேலை உண்டு என்று வாழ்பவர்கள். அதனால் கடவுள் அவர்களுக்கு எந்தத் துன்பமும் கொடுக்காமல் அவர்களை ஆசீர்வதித்தார். அதனால் பலவிதமான ஒடுக்கு முறைகளுக்கு மத்தியிலும் மிகவும் செல்வச் செழிப்போடு அன்று வாழ்ந்து வந்தனர். அதற்கு அவர்களின் ஒற்றுமை மட்டுமே காரணமாக இருந்தது. அன்பான எங்களது வெள்ளாம்போக்கட்டி வாழ் செபமாலையுடைய அன்பு உறவுகளே உங்களுக்கு தெரியும் மாரி மழை தொடங்குவதற்கு முன்பு ஐப்பசி மாதம் நடுப்பகுதியை ஒட்டிய காலப்பகுதியில் எங்களுடைய வீடுகளுக்கு சிலர் பிச்சை எடுக்கவருவார்கள். இதை நீங்கள் இன்றும் மறந்துவிடமாட்டீர்கள் என்று நான் நம்புகிறேன்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் ஏன் எங்களிடம் பிச்சை கேட்டு வருகின்றனர் என்று உங்கள் யாருக்காவது தெரியுமா? எனக்கும் சுமார் பதினைந்து வயது இருக்கும் வரை தெரியாது. அதன் பின் ஒரு சம்பவத்தின் மூலம் அவர்கள் யார்? என்று நான் தெரிந்துகொண்டேன். ஒரு நாள் வழமையாகப் பிச்சைக்கு வருபவர்கள் நாலு பெண்களும் பத்து வயது மதிக்கக் கூடிய வயதில் இரண்டு சிறுமிகளும் வந்தனர். நான் அந்தச் சிறுமிகளைப் பார்த்து, வருடா வருடா ஏன் பிச்சை எடுபதற்கு எங்களிடம் வருகிறீர்கள்? என்று கேட்டேன். அதற்கு அந்தப் பிள்ளைகளின் தாய் ஏனென்று எங்களுக்கும் தெரியாது. நாங்கள் பல வருடங்களாக உங்களிடம் வருகிறோம். நீங்களும் அரிசி, மாவு, சீனி, பருப்பு, கோழிக்குஞ்சு, தேங்காய், மாங்காய், மரக்கறிகள் போன்ற உணவுப் பொருட்கள் தருகிறீர்கள் என்று சொன்னார். இந்தக் கேள்வியை நான் கேட்டவுடன் அம்மம்மா என்னை இப்படி கேட்கக் கூடாது என்று திட்டிவிட்டு பிடித்து அடி அடியென்று அடித்து அந்த இடத்திலிருந்து துரத்திவிட்டார். அதன் பின்னர் அப்புவிடம் விபரத்தைக் கேட்டபோது அவர் சென்னார் தன்னுடைய பூட்டன், பாட்டன் காலத்தில் குரக்கன், சாமி, உழுந்து, இறுங்கு போன்ற பல பயிர்கள் சாகுபடி செய்து விற்பனை செய்வார்கள். மிகுதியாக இருக்கும் பொருட்களை ஏழை எளிய மக்களுக்கு இலவசமாக கொடுக்கும் வழக்கமாக அவர்கள் முன்னோர்கள் அன்று செய்து வந்தனர். இவர்களுடைய பாட்டி, பூட்டிமார் அப்போது வந்தார்கள். இப்போது இவர்கள் எங்களிடம் வருகின்றனர் என்று சொல்லி எனக்கு விளக்கம் தந்தார். இவர்கள் நீண்ட நெடியகாலமாக ஏழை எளிய மக்களுக்கு உதவி செய்து வந்தனர். செபமாலைஅப்பு மகள் பிலோமினா, பேரன் ஜேசுதாசன் ஆகிய மூவரும் 1981ம் ஆண்டு முகமாலையிலுள்ள பிலோமினா வீட்டிற்கு குடிமாறி சில காலம் அங்கு தங்கியிருந்தோம். அதுவரை காலமும் இவர்கள் தவறாமல் எங்களுடைய வீடுகளுக்கு வருவார்கள். அதன் பின்னர் இவர்கள் வெள்ளாம்போக்கட்டி ஊருக்கு வந்தார்களா? இல்லையா? என்ற விபரம் எனக்குத் தெரியாது. இப்படிச் செல்வச் செழிப்போடு வாழ்ந்து வளர்ந்த செபமாலை மௌனமாக இருந்து தன் சமுதாய மக்களுக்கு நல்லபல காரியங்கயைச் செய்துள்ளார். அதில் முக்கியமாதென்று அவர் வரணிக்கம், குழந்வேலு, வீரகத்தி இவர்களைப் போல நல்ல நாட்டு வைத்தியம் முறையாகப் படித்தவர். (இதை மரியநாயகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



என்பவர் எழுதிய கடிதத்திலும் குறிப்பிட்டிருந்தார் அவருடைய கடித்தை இங்கு பதிவிடுகிறேன். பார்க்கவும்) மேலே சொல்லப்பட்ட நாலு பேர்களும் உண்மையிலே எல்லாவிதமான வியாதிகளுக்கும் மருந்து தரக்கூடியவர்கள். அதில் ஒவ்வொருவரும் ஒரு சில வியாதிகளை மாற்றுவற்கு தனிச் சிறப்பு வாய்ந்தவர்களாக இருந்தார்கள். அதில் **திருமதி. வரணிக்கம்,** கர்ப்பவதி களுடைய சில பிரச்சனைகளுக்கும் மற்றும் பிள்ளை பேற்று வைத்தியத்திலும் சிறு பிள்ளைகளுக்கு பூச்சி மருந்து மற்றும் பேதிமாத்திரை கொடுப்பதில் கைதேர்ந்த நாட்டு வைத்தியராக இருந்தார். **திரு. குழந்தைவேலு** இவர் கண்ணில் வருகிற கக்கட்டி என்ற வருத்தத்திற்கும் சின்னமுத்து என்ற வருத்தத்திற்க்கும் ஒரு வகை சாயம் கொண்ட மருந்து ஒன்றினால் முகம் முதுகு போன்ற இடங்களில் சிங்கப் படம் என்று சொல்லி ஒரு படம் வரைவார். அந்த சாயம் உடலை விட்டு அகன்றதும் அந்த சின்னுமுத்து பருக்களும் உடலை விட்டு மூன்று நாட்களில் மெது மெதுவாக மறைந்துவிடும். இப்படியான வருத்தங்களுக்கு கைதேர்ந்த நாட்டு வைத்தியராக இருந்தார். **திரு. வீரகத்தி** இவர் உழுக்கு மற்றும் சுழுக்கு போன்ற வருத்தங்களுக்கும் மற்றும் விஷ பாம்புகள் கடித்த பல மக்களைக் இவர் காப்பாற்றிச் சுகப்படுதியிருக்கிறார். இது போன்ற பல வைத்தியங்களுக்கு கைதேந்த நாட்டு வைத்தியராக இவர் இருந்திருக்கிறார். **திரு. செபமாலை** அவர்கள் எந்ததெந்த வைத்தியத்திற்கு என்னென்ன மூலிகை மருந்து கொடுப்பதென்று படித்து வைத்திருந்தார். சிலபல காரணங்களால் இவர் இந்தத் தொழிலை நீண்ட காலமாகச் செய்யாது விட்டுவிட்டார். ஆனால் செபமாலை இளைஞனாக இருந்த காலத்தில் வியாதிப்பட்டவர்களுடைய வீடுகளுக்குச் சென்று அவர்களுக்கு வைத்தியம் பார்த்தார் என்பதை இன்று வயதாக இருப்பவர்கள் பலருக்கும் தெரிந்து வைத்திருப்பார்கள் என நான் நம்புகிறேன். அன்பானவர்களே இவரிடமிருந்து நான் சில விஷயங்கள் கற்றுக் கொண்ட தினால்தான் ஊரில் உள்ள பெரும்பாலான மரம், செடி கொடிகளுடைய பெயர்களும் அவற்றினுடைய மருத்துவக் குணங்களையும் அதன் பலன்களையும் அறிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்திருந்தேன். அவற்றை நான் வெள்ளாம்பேக்கட்டி செடி, கொடிகள் என்ற தலையங்கக்தில் எழுதியிருக்கிறேன். அன்பானவர்களே! இந்த நாட்டு வைத்தியர்கள் சாதாரண மானவர்கள் கிடையாது. அந்தக் காலத்தில் மருத்துவ வசதி இல்லாத காலத்தில் இவர்கள் காடுகளுக்குச் சென்று மருத்துவ குணங்கள் கொண்ட மரம், செடி, கொடிகள் அவற்றினுடைய வேர்கள், இலைகள், பூக்கள், காய்கள், மரப்பட்டைகள் போன்றவற்றைச் சேகரித்துக் கொண்டு வந்து அவற்றைப் பதப்படுத்தி மருந்துகள் தயாரித்து மக்களுக்கு கொடுப்பார்கள். இவர்களால் தான் அன்றைய காலம் மக்கள் சுகமடைந்து அவர்களது உயிர்களைக் காப்பாற்றப்படக் காரணமாக இருந்தது இவர்களை நாம் இன்று மனிதப் புனிதர்களாக போற்றிப்புகழ வேண்டும் அல்லவா. அன்பானவர்களே செபமாலை அப்புவுடைய இந்த நினைவு மலரில் நான் ஏன் இவர்களுடைய பெயர்களையும் செயல்களையும் குறிப்பிட வேண்டும். இவர்களைப் பற்றி நானும் சொல்லாது விட்டால் வேறு எவரும் இங்கு சொல்லமாடார்கள். இவர்கள் அனைவரும் கள்ளம், கபடம் இல்லாத வெள்ளையுள்ளம் கொண்ட மனிதர்கள். படிக்காத மேதைகள். இப்படிப்பட்ட என்னும் பல நாட்டு வைத்தியர் நம்ஊரில் இருந்தனர். உண்மையிலே இவர்கள் அனைவரும் பாராட்டப்பட வேண்டியவர்கள். இவர்களால் இந்த ஊர் மக்கள் பலப் பல நன்மைகளை அனுபவித்தனர். அதை நாங்கள் ஒருநாளும் மறந்துவிடக் கூடாது. அன்பானவர்களே இவர்கள் எந்தவித பலனையும் எதிர்பாராது சுயநலமில்லாது தங்களுடைய வேலைப்பழுக்களுக்கு மத்தியிலும் மக்களுக்குச் சேவை செய்ய முன்வந்தள்ள உண்மையான அன்புள்ளம் கொண்ட நல்ல மனிதர்கள். நாங்கள் இவர்களை என்றாவது பாராட்டியது உண்டா? இவர்களால் நம் ஊர் மக்கள் எவ்வளவு பயனடைந்திருப்போம். நாங்கள் இவர்களை என்றாவது நினைத்ததுண்டா? நான் அவர்களை செபமாலை அப்புவுடைய இந்த நினைவு நாள் மலரின் ஊடாக நினைவு கூறுவதில் பெருமைப்படுகிறேன். அன்பானவர்களே! இன்று இவர்களைப் போன்று மனிதர்களை நேசிக்கும் நல்லுள்ளம் கொண்ட அன்பான மனிதர்கள் யாராவது எங்காவது இப்போது இருக்கிறார்களா? அப்படி யாராவது இருந்தால் சொல்லுங்கள் அவர்களையும் நாங்கள் பாராட்டுகிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செபமாலை மரியநாயகம் ஆகிய நான்
வல்லி - சின்னத்தம்பி (செபமாலை) அவர்களது
5. வது பிள்ளையும் 3 வது மகனும் ஆவேன் —
எனது தந்தையார் திரு சின்னத்தம்பி (செபமாலை) ஈச்சாவில்
உள்ள. வெள்ளாம்போக்கட்டி கிராமத்தில் 24/APRIL 1905
ஆண்டு. வல்லி - சின்னாச்சி அவர்களின் மூத்த ~~புதல்~~
புதல்வராக பிறந்தார் - இவருக்கு உடன்பிறப்பாக —
ஒருவர் (முடியப்பு) 2 வதாக பிறந்தார் இவர்கள் இருவரும்
வாழ்நாள் முழுவதும் தமது கிராமத்தில் மிகவும் அன்பாக
வாழ்ந்து முடித்தனர் 24 APRIL 1989 ம் ஆண்டுவரை
எனது தந்தையாருக்கு 7 பிள்ளைகள் பிறந்தார்கள்
~~[illegible]~~ ஞானப்பிரகாசம், ஆசீர்வாதம், பிலோமினா, ஜெயரஞ்சிதம்
மரியநாயகம், பூரணம், அருளானந்தம் இதில் இருவர் —
மட்டுமே, இப்போதும் வாழ்ந்து வருகின்றனர்
எனது தந்தையை பற்றி அவர் பிறந்த கிராமத்தில்
அவரது வாழ்க்கை காலத்தில் அந்த யாருக்குமே தெரியா
தக்க காரணமில்லை,
இவரைப்பற்றி. இரண்டு. மிகமுக்கியமான விடயங்களை
குறிப்பிட விரும்புகிறேன்
முதல் விடயம் இவரது இளம் பருவத்தில் இவர்
நாட்டுவைத்தியம் கற்றிருந்தார் இவர் படித்துமுடித்
ததும் இவரது குரு ஓர் பணிப்புரை. கொடுத்தார்
தரும் சுகவீனமாக இருந்த ஓர் சிறுமிக்கு வைத்தியம்
பார்க்கும்படி. இவரும் அதன்பிரகாரம் அங்கு சென்று
சிறுமியை பார்வையிட்டதும் சிறுமியின் பெற்றோருக்கு
கூறினாராம் சிறுமி இன்னும் சில மணிநேரம் மட்டுமே
உயிர் வாழ்வாள் என்று கூறி புறப்பட்டுச் சென்றார்
அதன்படி சிறுமி மறுநாள் இறந்துவிட்டாள், ~~ஐ~~ அதை
அறிந்த இவரின் குரு இவரை அழைத்து நீ சிறுமியின்
இறப்பை கூறியிருக்கக் கூடாது ஏனெனில் அவளது
பற்றோர் உனக்கு எப்பணமும், தரமாட்டார்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ மட்டும் இறப்பை கூறியிருந்தால்
அவர்கள் உனது சேவைக்கு ஏற்ற பணம்
கொடுத்திருப்பார்கள் என்றாராம் இதைக்கேட்
டும், சில நிமிடம் தான் திகைத்து நின்றுவிட்டு
இப்படிப் பொய் சொல்லி உழைக்கும் தொழில்
எனக்குத் தேவையில்லை எனக் கூறி அன்றிலிருந்தே
கைவிட்டு விட்டாராம் அத்தொழிலை

இவரது தந்தை காய்க்கு பல, நிலங்கள் சொந்தமா
க. இருந்ததால் அவர்களுக்குப்பின் இவருக்கு
ம். இவரது சகோதரனுக்கும் 100 க்கும் மேற்பட்ட
பரப்பு நிலம் அப்போ இருந்தது இதில் இவர்கள்
இருவரும் சேர்ந்து தமது வாலிபவயதில் தாங்கள்
நினைத்தவர்களாக மாறிய போது எப்போதும் தமது பாதுகாவலியாக
நினைந்த செபமாலைமாத கோவிலுக்கு 40 பரப்
காணியை கொடுத்து சில அயலவர்களின் உதவியுடன்
சிறு கோவிலையும் அமைத்தனர் அது இப்போது பல
மடங்காக வளர்ந்து காட்சியளிக்கின்றது இக்
கிராமத்தில்

இக்காலத்தில் இவர்கள் நிலங்கள் யாவும் விற்று
இல்லிடத்திற்காக அருணாசலம் அவர்களின்
நிலத்தில் வாடகைக்கு குடியிருந்தார் பின் காலத்தில்
இதை அவர் சொந்தமாக வாங்கிய 7 பரப்பு நிலத்
தை தனக்குப்பின் தனது 3 பெண்பிள்ளைகளுக்கும்
பகிர்ந்து கொடுத்தார்

இவரது வாழ்க்கைகாலத்தில் இவர் விவசாயத்தை
தனது தொழிலாகக் கொண்டார் சில காலங்களி
லையிலே வியாபாரமும் செய்து வாழ்க்கை நடத்தினார்

இவரது நற்குணங்களும் பண்பும் –
7 பிள்ளைகளையும் 25 பேரப்பிள்ளைகளையும்
70 க்கும் மேற்பட்ட பூட்டப்பிள்ளைகள்
வாரிசுகளும் இப்போது இலங்கை, இங்கிலாந்து
பிரான்ஸ், ஜேர்மனி, கனடா. ஆகிய நாடுகளில்
அவரது கிருபையுடன் நல்ல வாழ்க்கை
வாழ்ந்து வருகிறார்கள்

ம் தந்தை தான் எங்களது முன்னோடி
வறுமையிலும் செம்மையாக வாழ்ந்து
எக்கும் அப்பாணைதனை கற்றுக் கொடுத்துள்ளா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செபமாலைஅப்பு அவர்களுடைய சில மனக்கவலைகள்

செபமாலை அப்பு தன்னுடையவாழ் நாட்களில் தான் பட்ட நன்மையான மற்றும் தன்னுடைய துயரம் நிறைந்த அனைத்து விடயங்களையும் அவரது அன்பு மகள் பிலோமினாவுக்கும் அவருடைய பிள்ளைகளுக்கும் சொல்ல மறந்ததே கிடையாது. காரணம் இவர்கள் மேல் வைத்துள்ள அன்பின் காரணமாக மட்டுமல்ல, இவர்களுடன்தான் அவர் தன் வாழ்நாட்களின் பெரும் பகுதியான காலங்கள் தங்கியிருந்தார். அன்பானவர்களே! செபமாலை தன்னுடைய அனைத்துப் பிள்ளைகளையும் அனைத்துப் பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகளிடத்திலும் ஒரே மாதிரியான பற்றும் பாசமும்தான் வைத்திருந்தார் என்பது சத்தியமான உண்மை. பிலோமினாவுடனும் அவர் பிள்ளைகளிடத்தில் செபமாலை அப்பு சற்று அதிகமான பாசம் வைத்திருந்ததற்கு ஒரு காரணம் தன்னுடைய அனைத்துப் பிள்ளைகளிலும் பிலேமினா மட்டும்தான் பல கஸ்டங்களை அனுபவித்த ஒரு அன்பான ஜீவன். அதைவிட மற்றப் பிள்ளைகளும் பேரப்பிள்ளைகளும் அவ்வப்போது வந்து போவார்கள். ஆனால் பிலோமினாவும் அவர் பிள்ளைகளும் செபமாலை அப்புவுடைய அனைத்துத் தேவைகளையும் கவனித்து அவர்களுடன் நிரந்தரமாகத் தங்கியிருப்பவர்கள். அதனால் அவர் ஒரு நண்பனைப் போல ஒழிவு மறைவு இல்லாமல் அவருக்குத் தெரிந்த எல்லா விபரங்களையும் எங்களுக்குச் சொல்வார். நாங்களும் அவரிடத்தில் கோபம் கொள்ளாது ஒவ்வொன்றையும் பொறுமையாகக் கேட்போம். அதனால் தான் எங்களுக்கு அவருடைய அனைத்து வரலாற்று நினைவுகளையும் தெரிந்து வைத்திருந்தோம். அதனால் தான் நான் இன்று இந்த நினைவுமலரில் அவருடைய வரலாற்றை எழுதக்கூடியதாக இருக்கிறது. ஆனாலும் செபமாலை அப்பு அவர்களுக்குச் சில மனக்கவலைகள் இருந்தன. அவற்றை அவர் எங்களிடம் மறைத்து விட்டார். அவை என்னவென்று எங்களுக்கும் தெரியவில்லை. நான் 13.08.1984ம் ஆண்டு ஜெர்மன் நாட்டிற்கு எனது மாமா மரியநாயகத்துடன் புறப்பட்டு வந்தேன். நான் ஜெர்மன் நாடு வருவதற்கு மூன்று நாட்களுக்கு முன்புதான் என்னிடம் சில விஷயங்களைச் செபமாலைஅப்பு சொன்னார். அவை அனைத்தையும் செபமாலை அப்பு அவர்களின் இந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைவு நாள் மலரில் என்னால் முழுவதும் எழுதமுடியாது. ஆனாலும் நான் செபமாலையுடைய நினைவு நாள் மலர் ஊடாக சில உண்மைகளை வெள்ளாம்போக்கட்டி ஊர் மக்கள் தெரிந்து கொள்ளவேண்டும் என்று ஆசைப்பட்டு அவற்றில் சிலவற்றை எழுதுகிறேன். இந்த நினைவு மலரில் முழுவதிலும் எழுதப்பட்ட அனைத்து விபரங்களும் செபமாலைஅப்பு அவர்களுடைய சொந்த வாழ்கையில் நடந்த உண்மையான சம்பவங்களேதவிர பொய்கள் எதுவும் கிடையாது. அன்பானவர்களே இந்த நினைவு மலரில் உள்ள அனைத்து விடயங்களும் சத்தியமான உண்மை.

செபமாலை அப்பு, தான் பிறந்து வளர்ந்து நேசித்த அந்த அழகிய ஊரையும் அந்த ஊர் மக்களையும் தான் காரணமாக இருந்து உருவாக்கி கட்டிய செபமாலை மாதா கோவிலையும் பாடசாலையையும் விட்டு வேறு எங்காவது போய் தனிமையாக இருந்து வாழ ஆசைப்பட்டார். அதனால் தன்னுடைய கோவில் மூப்பர் (சங்கிலித்தான்) என்ற தன்னுடைய பொறுப்பை யாராவது பெற்றுக் கொள்ளும்படி தன்னுடைய சொந்தங்கள் அனைவரிடமும் கேட்டார். யாருமே முன்வராத காரணத்தால் தன்னுடைய நண்பன் அல்லாரை ஊரைச் சின்னப்பொடியப்பா அவருடைய மகன் அருளப்பு அவருடைய வீடு தேடிச்சென்று தன்னுடைய மூப்பர் பதவியை ஏற்றுக் கோவிலை நடத்தும்படி கேட்டுக் கொண்டார். அவரும் முதலில் தயங்கினார் பின்னர் அவர் அந்தப் பொறுப்பை 1974ம் ஆண்டு ஏற்றுக் கொண்டு நல்ல முறையில் அந்தக் கோவிலை வழிநடத்தினார். மூப்பர் பொறுப்பை செபமாலை அப்பு அருளப்புவிடம் கொடுத்துவிட்டு வெள்ளாம்போக்கட்டி ஊரைவிட்டு அவர் தனது மகன் மரியநாயகம் என்பவருடைய கோப்பாய் வீட்டிற்கு குடி மாறிச் சென்றுவிட்டார். அவரால் அங்கு நீண்ட நாட்கள் தங்கியிருக்க முடியவில்லை கடுமையான வருத்தம் அவரைத் தாக்கிக் கொண்டது. அவருடைய வருத்தத்திற்காக கோப்பாய் மருத்துவமனையில் இரண்டு மாதம் தங்கியிருந்து தனது நோயைக் குணப்படுத்திக் கொண்டார். அதன் பின்னர் அவருடைய மகன் 1975ம் ஆண்டு வெளிநாடு சென்ற காரணத்தால் திரும்பவும் தன் சொந்த ஊருக்கே திரும்பி வந்துவிட்டார். ஆனால் இவர் இங்கு தன்னுடைய முழு விருப்பத்துடன் தங்கியிருந்தது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடையாது என்பது தெரிகிறது. அதன் பின்னர் 1981ம் ஆண்டு தனது மகள் பிலோமினா என்பவருடனும் பேரன் ஜேசுதாசனோடும் முகமாலை என்ற ஊரிலுள்ள வசதிகள் எதுவுமற்ற ஒரு சிறிய ஓலைக் குடிசை வீட்டிற்கு குடிமாறிவிட்டார். அங்கு 1983ம் ஆண்டுவரை செபமாலை மிகவும் சந்தோசமாகவே தங்கியிருந்தார். 1983ம் ஆண்டு செபமாலை அப்புவுடைய மகன் மரியநாயகம் மூன்றாவது தடவையாக ஊருக்கு வநத்போது சாவகச்சேரி என்ற நகரத்தில் அவர் ஒரு வீடு வாங்கி செபமாலை அப்புவைத் தங்கவைத்தார். 24.04.1989ம் ஆண்டு அவர் இறக்கும்வரை அங்கே தான் தங்கியிருந்தார். செபமாலை அப்புவுடைய மனக்கவலையில் ஒன்று தான் ஊரை விட்டுப்போய் தான் தனிமையில் இருக்க வேண்டும் என்பது.

செபமாலை அப்புடைய பேரன் ஜேசுதாசன் ஆகிய நான் அன்று வெளிநாடு போக விருப்பம் இல்லாதிருந்தேன். அதற்கு பல காரணங்கள் இருந்தாலும் முக்கியமாக என்றுமே நான் அன்பு வைத்திருக்கும் என் அம்மாவையும் சகோதரர்களையும் என் உயிரினும் மேலான அப்புவையும் பிரிந்து இருப்பதை கஸ்டமாக நினைத்தே அப்படிச் செய்ய ஆசைப்பட்டேன். அதனால் அப்புவிடம் இவற்றை நான் சொன்னபோது என்னைக் கண்டிப்பாகப் பயப்படாமல் வெளிநாடுபோ என்று சிலபல புத்திமதிகளைச் சொன்னார். அந்தப் புத்திமதிகள் இன்று எவ்வளவு உண்மை என்று நினைக்கிறேன். அதில் அவர் என்னைப் பார்த்துச் சொன்னது "நீ இந்த நாட்டில் வாழவும் முடியாது. உன்னை வாழ விடவும் மாட்டார்கள். நீ என்னதான் நன்மைகள் செய்தாலும் யாருமே இங்கு உன்னை மதிக்கமாட்டார்கள். நீ யாருக்காவது உதவி செய்ய விரும்பினால் அவர்களிடத்தில் பலனை எதிர் பாராதே. மாறாக அவற்றிக்குரிய பலனை கடவுள் கண்டிப்பாக உனக்குத் தருவார் நீ வெளிநாடு சென்றால் உன்னுடைய அம்மா சகோரர்கள் சில சமையம் கஸ்டமான காலங்கள் வந்தால் ஒரு நேரமாவது சாப்பிடுவார்கள். வெளிநாடு சென்றதும் எங்களை ஒரு போதும் மறந்து விடாதே உன்னால் முடிந்தால் நாலுபேருக்கு நல்லதைச்செய். கடவுள் என்றும் உன்னுடன் இருப்பார் என்று சொல்லிவிட்டு படத்தட்டில் இருந்த பைபிள் ஒன்றை எடுத்து எனக்கு தந்துவிட்டு இது உன்னை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றென்றும் காப்பாற்றும்'' என்று சொன்னார். அந்த நாட்களில் நான் கடவுள் நம்பிக்கை அற்ற ஒரு மனிதனாக இருந்தேன். ஆனால் அப்பு நல்ல மனதோடு தந்த அந்த பைபிளைத் தந்ததால் அதனை வாங்கிக் கொண்டேன். நான் இன்று கடவுள் பக்தியுள்ள ஒருமனிதனாக இருக்கிறேன். அதனால் எத்தனையோ பைபிள் என்னிடம் இப்போது இருக்கிறது. ஆனால் நான் இன்றும் அப்பு தந்த பைபிளைத்தான் படிக்கிறேன். நான் மறுநாள் ஜெர்மன் நாடு போவதற்கு மாமா, அத்தையுடன் புறப்பட ஆயத்தமானேன். அப்போது எனக்கு எவ்வளவோ புத்தி சொன்ன அப்பு என்னை வழி அனுப்பி வைக்க வரவில்லை. வீட்டின் ஒரு ஓரமாக நின்று ஓவென்று அழுதார். அப்பு அப்படி அழுததை நான் ஒருபோதும் பார்க்கவில்லை. அப்படி அழுதார். நானும் தாங்கமுடியாத வேதனையோடு அழுதேன். பின்பு என்னைச் சமாதானப் படுத்திவிட்டு வந்து வழி அனுப்பி வைத்தார். அந்த நிகழ்வு இன்றும் என் மனதில் மறக்க முடியாத ஆறாத வடுவாக பதிந்து இருக்கிறது. செபமாலை அப்புவுடைய கவலைகளுக்கு காரணம் அவர்காலத்தில் வாழ்ந்த மனிதர்கள் அன்பு, பாசம் நீதி, நியாயம், தயவு, தாட்சணியம், வஞ்சகம், சூது இல்லாத ஒற்றுமையான நல்ல மக்கள். அவர்களுடன் வாழ்ந்து பழக்கப்பட்டவர் செபமாலை. இன்றைய நாட்களில் வாழும் மக்கள் அவர்களுக்கு நேர் எதிர்மாறாக செயப்படுகின்றனர். அவர்களைப் பார்த்தபோது செபமாலை அப்புவால் இந்தச் செயல்களை ஏற்றுக்கொள்ள முடியாதிருந்தது. செபமாலை அப்பு இந்த உலகம் இப்போது எப்படி இருக்கிறது என்று தெரியாத ஒரு சின்னஞ் சிறிய கிராமத்தில் பிறந்து வாழ்ந்து வந்தவர். இந்த புதிய உலகத்தை அவரால் புரிந்து கொள்ள முடியவில்லை. அதனால் இவர் தனது முதுமை வயதில் தனிமையை நாடிச் சென்றார். அன்பானர்களே! செபமாலை அப்பு தான் பிறந்து வளர்ந்த ஊரையும் உறவையும் வெறுத்தார். ஆனால் அவருடைய ஊர் மக்களும் உறவுகளும் செபமாலை அப்பு அவர்களை ஒருபோதும் மறந்தது கிடையாது. அவர்கள் அனைவரும் செபமாலை அப்பு அவர்களில் அளவில்லாத அன்பும் பாசமும் வைத்திருந்தார்கள். அதற்கு உதாரணமாக செபமாலை அப்பு 1984ம் ஆண்டிலிருந்து 1989ம் ஆண்டு அவர் இறக்கும்வரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாவச்சேரியில் வாழ்ந்து வந்தார். அந்த நாட்களில் சொந்த பந்தம், சிறியோர், பெரியோர், ஜாதி, மதம் என்று எதுவுமே பார்க்காமல் பல நல்ல உள்ளம் கொண்ட அன்பு மக்கள் செபமாலை அப்பு அவர்களைப் பார்ப்பதற்கும் அவருடன் பழகுவதற்கும் பேசுவதற்கும் பலர் தினம்தோறும் வருவார்கள். ஆனாலும் செபமாலைக்கு இப்படி அன்பான நல்ல உள்ளங் கொண்ட பல மனிதர்கள் இருந்தாலும் செபமாலை அப்பு அவர்களுடைய நல்ல உள்ளத்தை புரிந்து கொள்ளாத சிலர் அவருடைய மனதை காயப்படுத்தவும் செய்திருக்கிறார்கள் என்றால் வெள்ளாம்போக்கட்டி ஊரும் உறவுகளும் நம்புவீர்களா? ஆம் ஆனால் இதுவும் உண்மை. செபமாலை அப்பு அவர்கள் தன்னுடைய ஊரையும் உறவுகளையும் விட்டு விட்டு தனியாக வேறு இடத்திற்குப் போய் இருக்க ஆசைப்பட்டார். அவரை போலவே செபமாலையுடைய பிள்ளைகள், பேரப்பிள்ளைகளும் பாட்டன், பூட்டன் அனைவரும் சந்தர்ப்ப சூழ்நிலமைகளால் ஊர் உறவுகளையும் சொந்த பந்தங்களையும் சொத்துச் சுகங்கள் அனைத்தையும் மறந்து விட்டு பல மையில்கள் தூரம் தாண்டி வெளிநாடுகளில் வாழ்ந்து வருகின்றனர். உள்ஊர்களில் இருக்கின்ற சில பேரப் பிள்ளைகளும் தங்களுடைய சில தேவைகள் கருதி மட்டுமே உள்நாட்டில் இருக்கின்றனர். ஆனால் அவர்கள் அனைவரும் தங்கள் பிள்ளைகளை பார்ப்பதற்காகவும் வேறு சில தேவை களுக்காகவும் வெளிநாடுகளுக்கு வந்து சென்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. செபமாலை அப்புவுடைய வேண்டுதல்களின் பயனாக நாங்கள் அனைவரும் சுக நல சந்தோசமாக வெள்ளாம்பேக்கட்டி என்ற நமது சொந்த மண்ணில் நாம் எப்படி இருந்தோமோ அதே போன்று வெளிநாடுகளிலும் கூடி இருக்கும் சந்தர்ப்பத்தை இறைவன் எங்களுக்கு இதுவரை தந்திருக்கிறார். இப்படிப்பட்ட சந்தர்ப்பங்கள் வேறு யாருக்காவது கிடைக்குமா? என்பது உண்மையிலே சந்தேகம் தான். அன்பான சொந்தங்களே! எனிவரும் காலங்களில் எப்படி நடக்குமென்று நமக்குத் தெரியாது அது ஆண்டவன் ஒருவனுக்கு மட்டும்தான் தெரியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செபமாலை அப்பு அவர்களுடைய இறுதி நாட்கள்

செபமாலை அப்பு அவருடைய மனைவி மேரி மரியம்மா, மகள் பிலோமினா, பேத்தி றீற்றம்மா, பேரன் மரியதாஸ், இவர்களுடன் சாவகச்சேரி வீட்டில் தனது முதிர்ந்த வயதில் இலங்கையில் நடைபெற்ற கொடிய யுத்தங்களுக்கு மத்தியிலும் செபமாலை அப்பு எந்த ஒரு கவலையும் இல்லாமல் இறுதி நாட்களில் வாழ்ந்து வந்தார். அவருடைய பிள்ளைகள் மற்றும் பேரப்பிள்ளைகள் சுமார் 95 வீதமானவர்கள் அந்தக்கால கட்டத்தில் ஜெர்மன், லண்டன், பாரிஸ், கனடா போன்ற நாடுகளில் வாழ்ந்து வருகின்றனர். இறுதியாக தன்னுடன் இருந்த பேரன் மரியதாஸ், பேத்தி றீற்றம்மா, அவருடைய கணவன் றெஜி பெர்னான்டோ, ஒரு வயதுகூட நிரம்பாத பூட்டிப்பிள்ளை சிந்துஜா (இவருடைய சிந்துஜா என்ற பெயரை செபமாலை அப்பு அவர்கள் தான் தெரிவு செய்தார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது) இவர்கள் அனைவரும் ஜெர்மன் நாட்டிற்கு போவதற்காக ஆயத்தமானார்கள். அப்போதுதான் செபமாலை அப்பு கவலைப்படத் தொடங்கினார். கவலை படிப்படியாக அதிகமானது காரணம் தன்னுடன் இறுதியாக இருந்த பேரப்பிள்ளைகள் தன்னை விட்டுப் போவதாக நினைத்து அவர் கவலைப்படவில்லை. மாறாக தன்னுடைய மனைவி மரியம்மாவும் மகள் பிலோமினா இவர்கள் இருவரும் யாருமே இல்லாது தனித்து விடப்படார்கள் என்ற ஒரு காரணத்தால் மட்டும் தான் அவர் கவலைப்பட்டார். என்ன செய்வது கடவுள்விட்டவளி என நினைத்துக் கொண்டு கடவுளை மட்டும் இப்போது அவர் நம்பினார். செபமாலை அவர்களுடன் கடைசியாக இருந்த பேரப்பிள்ளைகள் 1988ம் ஆண்டு புரட்டாதி மாதம் 27ம் திகதி செபமாலை அப்புவை மட்டுமல்ல, ஊரையும் உறவுகளையும் விட்டுவிட்டு ஜெர்மன் நாடு வருவதற்காக எல்லோரிடமும் விடைபெற்றுக் கொண்டு வந்துவிட்டனர். இந்த நாள் தான் செபமாலை அப்பு அவர்கள் தன் வாழ்நாள் முழுவதும் சேர்த்து வைத்த கண்ணீரை இந்த ஒரு நாளில் அவர் முழுவதுமாகச் சிந்திவிட்டார் என்று சொல்லமுடியும். அனால் செபமாலை அப்பு தன்னுடைய பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் எல்லோரும் நலமாக வாழவேண்டும் என்று தினம் தினம் அல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு நொடியும் தன் உதடுகளினால் கடவுளிடம் பிராத்தனை செய்வார். இதை அனேகமான பிள்ளைகளும் பேரப்பிள்ளைகளும் தெரிந்து வைத்திருப்பார்கள் என்று நான் நம்புகிறேன். அன்பான சொந்தங்களே! செபமாலை அப்பு அவர்களுடைய பிராத்தனைகளால் நாங்கள் எல்லோரும் சுகமாக, நலமாக, சந்தோசமாக வாழ்கின்றோம். மற்றவர்கள் என்ன நினைக்கிறார்களோ என்று எனக்குத் தெரியாது ஆனால் நான் இதை நம்புகிறேன்.

செபமாலை அப்பு சாவகச்சேரி வீட்டிற்கு வந்து சுமார் ஐந்து வருடங்கள் முடியுற்ற நிலையிலும் ஐந்து மைல் தொலை தூரத்தில் இருக்கும் தான் பிறந்து வளர்ந்த சொந்த ஊருக்கு போனதே கிடையாது. செபமாலை அவர்களுடைய மனைவி, மகள் இவர்களின் வற்புறுத்தலால் மூன்று ஆண்டுகள் கோவில் திருநாளுக்காகப் போயிருந்தார். பின் நாட்களில் அவர் அதற்கும் போகாமல் விட்டு விட்டார். ஆனால் அந்த ஊர் மக்கள் அனைவரும் செபமாலை அப்பு அவர்களிடம் ஜாதி, மதம், பெரியவர், சிறியவர், என்று பாகுபாடு பார்க்காமல் மிகுந்த அன்பும் மரியாதையும் வைத்திருந்தனர். இதை செபமாலை அப்பு நன்றாக அறிவார். அதே போல செபமாலை அப்புவும் அவர்கள் எல்லோரிடத்திலும் அன்பாக இருப்பார். ஒரு சிலருடைய கடுஞ்சொற்களால் ஏற்பட்ட மனக்கசப்பால் செபமாலை அவர்கள் தன்னைத் தானே தனிமைப்படுத்திக் கொண்டாரே தவிர அவர் எவரிடத்திலும் எந்தச் சந்தர்ப்பத்திலும் கோபப்பட்டது கிடையாது. செபமாலை அப்பு ஒரு அன்பு உள்ளம் கொண்ட நல்ல மனிதர் என்று சொன்னால் அவரை தெரிந்த அனைவரும் ஆம் என்று நிட்சயமாக ஏற்றுக்கொள்வார்கள்.

செபமாலை அப்புவும் மனைவி மரியம்மாவும் மகள் பிலோமினாவும்தான் ஒரு பெரிய வீட்டில் தனிமையாக இருக்கிறார்கள். இந்தக் காலகட்டத்தில் இந்திய இராணுவம் இலங்கை நாட்டுக்கு வந்து தமிழ் மக்களுக்கு எதிராக மிகக் கடுமையான கொடிய யுத்தத்தைச் செய்துகொண்டு இருந்தனர். இதே காலகட்டத்தில் செபமாலை அப்பு அவர்களுக்கு புற்றுநோய் என்ற நோயினால் பாதிக்கப்பட்டு இருந்தார். அப்போது செபமாலை அப்பு அவர்களுடைய கவலை பலமடங்கு கூடியது. காரணம் அங்கே யுத்தம் நடைபெற்று வருவதினால் தங்களுடைய உயிர்களுக்கு எந்த நேரம் என்ன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடக்கும் என்று தெரியாது. அது ஒரு கவலை அப்படி யாருக்காவது மரணம் நேர்ந்தால் யாருக்கு யார் உதவி செய்வது என்ற மற்றொரு கவலை. வெளிநாடுகளில் வாழும் பிள்ளைகள், பேரப்பிள்ளைகளுடைய நிலைமையை நினைத்து என்னொரு கவலை. கொடிய யுத்தத்திற்கு மத்தியில் தன்னுடைய கொடிய நோய்க்கு மருத்துவமனை மருந்துகள் இல்லாமல் அவற்றை வாங்குவதற்குப் போராடும் மனைவி, மகளை நினைத்துக் கவலை. இப்படிப் பல பிரச்சனைகளை நினைத்து கவலைப்பட்டுத் தன் இறுதி நாட்களில் பாசப் போராட்டம் போராடினார். இறுதி நாட்களில் செபமாலை அவர்கள் இப்படி விபரிக்க முடியாத என்னும் பல பாசப் போராட்டங்களுடன் போராாடினார்.

செபமாலை அப்பு அவர்கள் எப்படிப்பட்ட சூழ்நிலைகள் வந்தாலும் கோவில் செல்வதையோ? கடவுளிடம் பிராத்தனை செய்வதையோ? மறந்ததோ கிடையாது. தன் சொந்த ஊரை விட்டு சாவகச்சேரி என்ற ஊருக்கு எப்போது குடிமாறினாரோ அன்றில் இருந்து தான் மரணிக்கும் வரை சாவகச்சேரி கச்சாய் வீதி கடற்கரை ஓரமாக அமைந்துள்ள **செ<u>ன் லிகோரியார்</u>** என்ற ஆலயத்துக்கு சென்று பூஜைகளில் பங்குபற்றி பிராத்தனைகள் மன்றாட்டுகளைச் செய்வதை வழக்கமாக செய்து கொண்டிருப்பவர். இந்தச் செபமாலை அப்பு அவர்கள் ஒருநாள் அந்தக் கோவிலுக்கு அவரது மகள் பிலோமினா அவர்களுடன் சென்று அவர் தனது மரண நாளைக் குறித்து அப்போது அந்தக் கோவிலில் பங்குத் தந்தையாக இருந்த செபமாலை அவர்களுடன் பல வருடங்களாக நல்ல நட்பு உறவை வைத்திருந்த மரியாதைக்குரிய **அருட்திரு சுவாமி கருணாகரன்** அவர்களிடத்தில் சென்று வேண்டுகோள் ஒன்றை விடுத்தார். அது என்னவென்றால் சில சமயம் தான் இறந்துவிட்டால் சாவகச்சேரி செ<u>ன்லிகோரியார்</u> ஆலயத்துக்கு சொந்தமான சவக்காலையில் தன்னுடைய உயிரற்ற உடலை அடக்கம் செய்வதற்கு அனுமதி வேண்டித் தரும்படி கேட்டுக் கொண்டார். அதற்கு சுவாமி கருணாகரன் அவர்கள் இதைப்பற்றி நீங்கள் ஒன்றிற்கும் கவலைப்பட வேண்டாம் நீங்கள் என்னும் நீண்ட நாட்கள் உயிர் வாழவேண்டும், அப்படி ஒரு நிலமை வரும்போது நான் உங்களுடைய விருப்பத்தை கண்டிப்பாக நிறைவேற்றுவேன் என்று உறுதிமொழி கொடுத்துவிட்டு செபமாலை அப்பு அவர்களைப் பார்த்து எனி நீங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சலங்கள் கவலைகள் இல்லாமல் உங்கள் வீட்டிற்குப் போய் நிம்மதியாக உங்கள் உங்கள் வேலைகளை பயப்படாமல் செய்யுங்கள் என்று சொல்லிவிட்டு செபமாலை அவர்களையும் மகள் பிலோமினா என்பவரையும் வழியனுப்பி வைத்துவிட்டார்.

நோயின் தாக்கத்தால் தன்னுடை உடல் தளர்ந்து சோர்வுற்றுப் போவதாக உணர்ந்த செபமாலை அப்பு அவர்கள் தான் மனதில் பட்ட சில விடயங்களை ஒரு கடிதமூலம் எழுதவேண்டும் என்று ஆசைப்பட்டார் ஆனால் தன்னுடைய கையால் எழுதமுடியாத நிலையில் செபமாலை அப்பு அப்போது இருந்தார். அப்புவைப் பார்ப்பதற்காக ஒவ்வொரு நாட்களும் பலர் வருவார்கள். ஆனால் அவர்கள் யாரிடமும் அப்பு கடிதம் ஒன்று எழுதித்தரும்படி கேட்டது கிடையாது. தனது உற்ற நண்பன் சின்னப்பொடி (சின்னப்பு) அவர்களுடைய பேரப்பிள்ளைகளில் ஒருவரான **இராயப்பு சாந்தா** என்பவர் செபமாலை அப்புவைப் பார்ப்பதற்காக ஒரு நாள் வந்திருந்தார். அவரிடம்தான் செபமாலை அப்பு தனக்கு ஒரு கடிதம் எழுதித் தரும்படி கேட்டுக்கொண்டார். அதற்கு சாந்தா என்பவரும் உடனே சம்மதித்து செபமாலை அப்பு சொன்ன எல்லாவற்றையும் சுருக்கமாக ஒரு கடிதமாக எழுதி செபமாலை அப்பு அவர்களும் சாந்தா என்பவரும் தங்கள் கையொப்பங்களை அந்தக் கடிதத்தில் பதியவைத்து சாந்தா என்பவர் செபமாலை அப்பு அவர்களிடம் தன்னால் எழுதப்பட்ட அந்தக் கடிதத்தை கொடுத்துவிட்டார். அந்தக் கடிதம் 11.03.1989ம் ஆண்டு எழுதப்பட்டது. அந்தக் கடிதத்தை நான் செபமாலை அப்பு அவர்களுடைய இந்த நினைவு நாள் புத்தகத்தில் பதிவு செய்கிறேன்.

செபமாலை அப்பு தான் மரணநாள் நெருங்குவதை திட தீர்மானமாக தெரிந்து வைத்திருந்தார். அவர் தன்னுடைய மரணத்துக்கு முன்பு வெளிநாடுகளில் வாழ்ந்துகொண்டு இருக்கும் தனது பிள்ளைகள், பேரப்பிள்ளைகளுக்குச் சில விடயங்களைச் சொல்ல வேண்டும் என்று ஆசைப்பட்டார். ஆனால் அன்று இப்போது போன்று கைத்தொலைபேசிகளோ அல்லது சாதாரண தொலைபேசிகளோ அல்லது சமூக வலை ஊடகங்களோ இருக்கவில்லை. வெளிநாடுகளில் இருக்கும் தங்கள் உறவினர்களிடம் பணம் வாங்கவோ அல்லது ஏதாவது முக்கியமான தேவைகளை தெரிவிக்கவேண்டும் என்று ஆசைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டால் கொழும்புக்குத்தான் வரவேண்டியிருக்கும். அப்படி கொழும்புக்கு வருவதென்றால் அவ்வளவு சுலபமல்ல. மிக மிகக் கஸ்டம். யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கு வருவதற்க்கு மட்டும் சுமார் நாலு நாட்களுக்கு மேல் செல்லும். அப்படிப்பட்ட அந்தச் நிலமையில் யாரிடமும் எந்த நேரத்திலும் எந்தச் சூழ் நிலமைகளிலும் எந்த உதவிகளையும் எதிர்பாராத செபமாலை அப்பு அவர்கள் எத்தனையோ பல சொந்தங்கள் இருந்தும் அவர்கள் யாரிடமும் உதவி கேட்காமல் தனது தொட்டமகன் உறவு முறையான


திரு. லூர்துநாயகம்

**லூர்துநாயகம்** என்பவரிடன் ஒரு உதவி கேட்டார். லூர்துநாயகம் அவர்களிடத்தில் செபமாலை அப்பு உதவி கேட்டதற்குரிய காரணம் யாருமே இல்லாமல் தனிமையாக வாழ்ந்த வயதான இவர்களுக்கு பலர் பக்கபலமாக இருந்து பலப்பல உதவிகள் செய்து வந்தனர். அவர்களில் இவர்தான் முதன்மையானவர், முக்கியமானவர். இவர் தன்னுடைய வேலைப் பழுக்களுக்கு மத்தியிலும் ஒவ்வொரு நாட்களும் அப்புவைப் பார்க்க அவர் வீட்டிற்கு மறக்காமல் வருவார். இவரிடம் எந்த நேரத்திலும் என்ன உதவி கேட்டாலும் மறுக்காமல் செய்வார் என்று செபமாலை அப்பு அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அதனால்தான் முதலும் கடைசியுமாக அவரிடம் ஒரு உதவி கேட்டார். உண்மையில் சாதாரண உதவி கிடையாது. அந்த உதவி என்னவென்றால் வெளிநாடுகளில் வாழ்ந்துவரும் செபமாலை அவருடைய பிள்ளைகளுக்கும் பேரப்பிள்ளைகளுக்கும் தான் மரணிக்கப் போகும் செய்தியையும் வேறு சில விடயங்களையும் போய் அறிவித்து வரும்படி சொன்னதுதான் அந்த உதவி. லூர்துநாயகம் உடனடியாகச் சம்மதித்து போர்க்காலச் சூழ்நிலமையிலும் அவருடைய மனைவி பிள்ளைகளையும் சொந்த பந்தங்களையும் தனியாக விட்டு பல சிரமங்களுக்கு மத்தியிலும் கொழும்புக்கு வந்து செபமாலையுடைய பிள்ளைகளுக்கும் பேரப்பிள்ளைகளுக்கும் செபமாலை அப்பு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொன்ன எல்லா விடயங்களையும் மறக்காமல் ஒன்றும் விடாமல் சொன்னார். செபமாலை அப்புவினுடைய பேரன் ஜேசுதாசனாகிய என்னிடத்தில் மட்டும் பல மணிநேரங்கள் பேசினார். அவையெல்லாம் விபரிக்க முடியாதளவு சோக சம்பவங்களாக இருந்தன. லூர்த்தண்ணா, செபமாலை அப்பு சொன்னதாக ஒரு மிக முக்கியமான விடயத்தைச் என்னிடம் சொன்னார். அது என்னவென்றால் இந்த நிமையில் என்னைப் பார்க்கவோ அல்லது இறந்துவிட்டாலோ தயவு செய்து யாரும் இலங்கைக்கு வரவேண்டாம். அப்படி யாராவது வந்தாலும் தன்னை உயிருடன் பார்க்க முடியாது. ஆனால் யார் எதைச் சென்னாலும் கேட்காமல் ஜேசுதாசன் என்ற தனது பேரன் யேசன் என்னைப் பார்ப்பதற்காக கண்டிப்பாகவர முயற்சி செய்வான். அவனிடத்தில் உறுதியாகச் சொல்லு. தயவு செய்து தன்னைப் பார்க்கவர முயற்சி செய்யவேண்டாம். தான் இறந்த பின்பு அவன் தன்னுடைய தாயையும் பேத்தியாரையும் என்றுமே மறக்காமல் உதவி செய்யும்படி சொன்னதாகவும் மற்றும் தான் என்ன சொன்னாலும் யேசன் கேட்பான் என்றும் சென்னார். இவற்றை எல்லாம் சிலசமயம் லூர்த்தண்ணா அவர்கள் இப்போது மறந்திருக்கலாம். ஆனால் நான் இவற்றில் ஒன்றைக்கூட மறக்கவில்லை மறக்கவும் முடியாது. லூர்தண்ணா எங்களுடன் தொலைபேசி பேசிவிட்டு அவற்றை எல்லாம் செபமாலை அப்புவிடம் போய்ச் சொன்னார். அவர் எல்லாவற்றையும் ஆர்வமாகக் கேட்டு சரியாக ஒரு வாரத்தின் பின் செபமாலை அப்பு அவர்கள் அவர் பிறந்த அதே திகதியில், அவர் பிறந்த அதே மாதத்தில், அவர் பிறந்த அதே கிழமையாகிய திங்கட்கிழமை அதே பிற்பகல் வேளையில் **24.04.1989ம்** ஆண்டு, திங்கட்கிழமை அன்றைய நாள் ஒருமாலை நேரம் செபமாலை அப்பு அவர்களுடைய உயிர் அவருடைய உடலைவிட்டுப் பிரிந்து சென்று விட்டது. இப்போது செபமாலை அப்பு அவர்கள் கடவுளுடைய உயிர்தெழுப்புதல் நாள் வரைக்கும் மரணம் என்ற நித்திரையில் நிம்மதியாக ஓய்வாக இருக்கிறார். அன்பானவர்களே! இப்படிப்பட்ட நல்ல உள்ளம் கொண்ட அன்பான மனிதர்களை இந்த உலகம் சற்று மறந்து கொண்டிருப்பதை நினைக்கும்போது அவருடைய உண்மையான சில செயல்களை அருகில் இருந்து பார்த்தவர்களுக்கு சற்று கவலையாகத் தான் இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



செபமாலை ஆலயத்தின் திருநாள். 2008



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரணத்திற்குப் பின்பு செபமாலை அப்பு


செபமாலை அப்பு அவர்களுடைய மரணம் அடைந்துள்ள நிகழ்வு காட்டுத் தீ போல எல்லா இடங்களுக்கும் பரவத்தொடங்கியது. அதனால் செபமாலை அவர்களுடைய ஊர் உறவுகளும் சொந்த பந்தங்களும் செபமாலை அப்பு அவர்களில் அன்பு கொண்ட உறவினர், நண்பர்கள் மற்றும் அனைத்துச் சமூகத்தினரும் பகுபாடு இல்லாமல் மிகப் பெரிய கூட்டத்தினர் செபமாலை அப்பு அவர்களுடைய உயிரற்ற உடலுக்கு அஞ்சலி செய்வதற்காக செபமாலை அப்பு அவர்களுடைய வீட்டிற்கு வருகை தந்து அஞ்சலி செய்தார்கள். குறிப்பாக செபமாலை அப்புவுடைய வீட்டில் இருந்து சுமார் 100 மீற்றர் தூரத்தில் இலங்கை இந்திய இராணுவத்திற்குச் சொந்தமாக இருந்த மிகப் பெரிய இராணுவ முகாம் இருந்தது. அந்தக் காலகட்டத்தில் இப்படிப்பட்ட பெரிய அளவிலான மனிதர்கள் கூட்டம் கூடுவதை இராணுவத்தினர் அனுமதிப்பது கிடையாது. ஆனாலும் இராணுவத்தினர் இவர்களைப் பார்த்து அமைதியாக இருந்து பார்த்துக் கொண்டார்கள் என்பது சத்தியமான உண்மை. அடுத்த நாள் செபமாலை அப்பு அவர்களுடைய சரீர அடக்க ஈமைக்கிரிகைகள் நடைபெறுவதற்கு ஆயத்தங்கள் நடைபெறத் தொடங்கியது. அப்போது செபாலை அப்பு அவர்கள் அவருடை மகள் பிலோமினாவுக்கு சொல்லிவைத்த விடயம், அவருடைய உடலை சாவகச்சேரி லிகோரியார் ஆலயத்திற்கு சொந்தமான சவக்காலையில் சவஅடக்க ஏற்பாட்டை செய்யும்படி சொன்னார். ஆனால் அங்கே இருந்த எவருமே பிலோமினா சொன்னவற்றைக் காதுகொடுத்துக் கேட்கவில்லை. அதனால் செபமாலை அப்பு அவர்கள் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற முடியவில்லை என்று பிலோமினா மிகவும் மனம் வருந்தினார். முடிவில் அவருடைய அம்மாவும் செபமாலை அப்புவுடைய மனைவி மரியம்மா அவர்களுடைய விருப்பத்தின் படியும் ஏனைய சொந்த பந்தங்களுடைய விருப்பத்தின் முடிவின் படியும் செபமாலை அப்பு அவர்களுடைய சொந்த ஊராகிய வெள்ளாம் போக்கட்டிக்கு அவருடைய பூதவுடல் கொண்டுவரப்பட்டு செபமாலை அப்பு அவர்களுடைய செபமாலைமாதா ஆலயத்தில் மரணத் திருப்பலி கொடுக்கப்பட்டு, செபமாலை அப்பு அவர்களுக்குச் சொந்தமான கல்லறைத் தோட்டத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைந்த மக்கள் கூடத்திற்கு மத்தியில் அவருடைய பூவுடல் இனிதே நல்லடக்கம் செய்யப்பட்டது. முதிர்வு வயது என்றாலும் ஒரு ஆண் துணையாக தங்களுடன் கூட இருக்கிறார் என்ற துணிவுடன் செபமாலை மனைவியும் மகளும் பயமில்லாமல் இருந்தனர். ஆனால் செபமாலை அப்பு அவர்களுடைய மனைவியும் மகளும் செபமாலை அப்பு அவர்கள் இறந்த பின்னர் இவர்கள் இருவருக்கும் தனிமை வாழ்க்கை மிகவும் கஸ்டமாக இருந்தது. அதனால் அவர் அவர்களுடைய பிள்ளைகளிடம் முறையே மரியம்மா அவர்களை அவர் பிள்ளைகள் 1992ம் ஆண்டும் கனடா நாட்டிற்கும் மகள் பிலோமினா அவர்களை அவர் பிள்ளைகள் 1993ம் ஆண்டு ஜெர்மன் நாட்டிற்கும் தங்களுடன் அழைத்துக் கொண்டார்கள். செபமாலை அவர்கள் என்னும் நான்கு வருடங்கள் உயிருடன் இருந்திருந்தால் அவர் நிட்சயமாக ஜெர்மன் நாட்டுக்கு வந்திருப்பார். ஏனென்றால் அவருடைய மகள் பிலோமினா எங்கு சென்றாலும் அவர் அவருடன் கண்டிப்பாக வந்திருப்பார். ஆனால் கடவுள் என்ன நினைத்தார் என்று எங்களுக்குத் தெரியவில்லை. நான் நினைத்தது நடக்கவில்லை என்ற கவலை எனக்கு எப்பவும் உண்டு. செபமாலை மகள் பிலோமினா 22 ஆண்டுகள் ஜெர்மன் நாட்டில் தன் பிள்ளைகளுடன் சந்தோசமாக வாழ்ந்து வந்தாலும் அவருயை தந்தை செபமாலை இறந்த பின்பும் கூட அவர்களைப்பற்றி நினைவுகளுடன்தான் வாழ்ந்து வந்தார். அவர் 23.11.2015ம் ஆண்டு ஜேர்மன் நாட்டில் காலமானார். அதற்கு முன்பு அவர் ஒரு கடிதத்தில் தான் இறந்துவிட்டால் தன்னுடைய உயிரற்ற உடலை வெள்ளாம்போக்கட்டி ஊருக்கு கொண்டு சென்று அவருடைய தந்தை செபமாலை அவரை அடக்கம் செய்யப்பட்ட கல்லறைக்கு அருகில் தன்னுடைய உடலை அடக்கம் செய்யும்படி எழுதிவைத்திருந்தார்.

அவர் எழுதிவைத்தபடி நாங்கள் அருடைய பூதவுடலை அவர் தந்தைக்குப் பக்கத்தில் அடக்கம் செய்தோம்.


குறிப்பு
யேசன் விருப்படி என்னை
அடக்கம் செய்ய வேணும்
முடிந்தால் செபமாலை என்னை
அப்புக்கிட்ட பக்கத்தில்
அடக்கம் செய்யவும்
எ. பிலோமினா

இக்கடிதம் எட்வேட் பிலோமினா, மகன் எட்வேட் ஜேசுதாசனுக்கு இறப்பதற்கு முன்பு எழுதிய கடிதத்தின் ஒரு பகுதி.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதிலிருந்து அவர் தனது தந்தை செபமாலை அப்பு அவர்களில் எவ்வளவு அன்பு வைத்திருந்தார் என்று எங்களால் புரிந்துகொள்ள முடிகிறது. அன்பானவர்களே! செபமாலை அப்பு அவர்கள் தன்னுடைய வாழ்க்கையில் நடைபெற்ற கஸ்டநட்டங்களையும் இன்ப துன்பங்களையும் என்னும் பல முக்கியமான விடயங்களையும் எங்களுக்குச் சொல்லித் தந்திருந்தார். அவர் ஏன் தன்னுடைய ஊருக்காகவும் அந்த ஊர் மக்களுக்காகக் கஸ்டப்பட்டார் என்றும் செபமாலை அப்பு அவர்களுடைய சொந்த பந்தங்களும் ஊர் மக்களுக்கும் தெரியப்படுத்த வேண்டும் என்ற ஆசையால் இந்த செபமாலை அப்புவுடைய நினைவுப் புத்தகம் எழுதப்பட்டது. என் அன்பான உறவுகளே! யாராவது உங்களது வெளியூர் நண்பர்கள் உங்களுடைய பிறந்தமண்ணாகிய வெள்ளாம்போக்கட்டி கிராமத்தில் இருக்கின்ற சிறப்புக்கள் என்ன இருக்கிறது என்று கேட்டால் உடனடியாகச் பாடசாலை, கோவில் இருக்கிறது என்று மட்டும் தான் உங்களால் சொல்ல முடியும். அவை செபமாலை என்ற ஒரு மனிதன் இல்லாது விட்டால் இந்தச் சிறப்பம்சத்தை உங்களால் கூற முடியுமா? அன்பானவர்களே செபமாலை அவர்கள் முயற்சியால் உருவாக்கம் பெற்ற பாடசாலை இப்போது அழிவின் விழும்பில் வெறும் கட்டடங்கள் மட்டும் தான் இருக்கிறது. அனால் அவர் முயற்சியினால் உருவாக்கம் பெற்ற மாதா கோவில் இன்று மிகப்பெரிய வளர்ச்சி பெற்றிருக்கிறது. இந்தக் கோவில் வெள்ளாம்போக்கட்டி மண்ணில் இருக்கும் வரைக்கும் செபமாலை அப்பு அவர்களுடைய பெயரும் நிலைத்து இருக்கும். காரணம் நீங்கள் இதுவரை நாட்களும் வணங்கிவரும் மாதாவுக்கு முன்னுக்கும் செபமாலை இருக்கிறது. அதேபோல் அப்பு அவர்களுடைய பெயருக்கு முன்னுக்கும் செபமாலை இருக்கிறது. அதனால் செபமாலை மாதா கோவில் இருக்கும்வரை செபமாலை அப்பு அவர்களுடைய பெயரையும் யாராலும் எளிதில் மறந்துவிட முடியாது. எங்களுடைய அன்பான உறவுகளே அமைதியாகவும் மௌனமாகவும் இருந்து செபமாலை அப்பு அவர்கள் வெள்ளாம்போக்கட்டி ஊர் மக்களுக்காகச் செய்த நல்ல பல செயல்களை இன்று பலர் அறியாதவர்களாக இருக்கிறார்கள். அவர்களும் எனி வருகிற சந்ததியினர்களும் செபமாலை அப்பு அவர்களையும் அவர் என்ன செய்தார் என்பதையும் அறிந்து கொள்ளவும் இந்த நினைவு மலர் ஓர்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவணத் தொகுப்பாக அமையும் என்ற நம்பிக்கையுடன் இம்மலரை எழுதியிருக்கிறேன். அன்பானவர்களே! பைபிள் புத்தகதில் இருந்தால் யோபு அதிகாரம் ஒன்றையும் மற்றும் கடைசி அதிகாரமான நாற்பத்திரண்டு அதையும் தயவு செய்து வாசித்துப் பாருங்கள். அதில் கடவுள் ஒரு மனிதனுக்கு ஏன் கஸ்டத்தை அனுமதிக்கிறார் என்றும் முடிவில் அவர்களுக்கு என்ன ஆசீர்வாதங்கள் கிடைக்கும் என்றும் சொல்லி இருக்கிறார். கடவுள் சொல்வது என்றும் பொய்யாகாது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அமரர். செபமாலையின் பூதவுடல் 1989...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திரு. செபமாலை, மனைவி. மேரி மரியம்மா, மகன் மரியநாயகம், பேரன் ஜெபநேசன்.




திரு. செபமாலை




திரு. செபமாலை, மனைவி. மேரி மரியம்மா, மகன் அருளாந்தம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திரு. செபமாலை, மனைவி. மேரி மரியம்மா




திரு. செபமாலையுடன் மகள் பிலோமினாவும் சிறு பிள்ளைகளும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருட்திரு சுவாமி ஞானப்பிரகாசம்



அருட்திரு சுவாமி ஞானப்பிரகாசம் அவர்களைப்பற்றி இந்தச் சிறிய குறிப்பை நான் ஏன் அமரர் திரு. செபமாலை அவர்களுடைய நினைவு நாள் மலரில் பிரசுரிக்க வேண்டும். முதலில் அவர் யார்? அவர் என்ன செய்தார்? அவருக்கும் அமரர் திரு. செபமாலைக்கும் என்ன தொடர்பு என்பதனை மிகவும் சுருக்கமாக இங்கு பதிவு செய்ய நான் ஆசைப்படுகிறேன். வாருங்கள் அன்பர்களே பார்க்கலாம். அருட்திரு சுவாமி ஞானப்பிரகாசத்துக்கும் செபமாலை அவர்களுக்கும் பல ஒற்றுமைகள் இருக்கின்றன. அதாவது முதலில் இருவருமே சைவசமைய பெற்றோர்களுக்குப் பிறந்து சைவசமையத்தில் வளர்க்கப்பட்டார்கள். அதன் பின்னர் இருவருமே கிறீஸ்தவர்களாக மதமாற்றம் செய்தனர். இவர்கள் இருவரும் மற்ற சக மனிதர்கள்போல் மனிதநேயமும் பற்றும் பாசமும் அக்கறையும் கொண்டவர்கள். சுவாமி ஞானப்பிரகாசம் படிப்பில் சிறந்த கல்விமானாக இருந்தார். அமரர் செபமாலை அவர்களுக்கோ கல்வி சிறுவயதில் மறுக்கப்பட்டதனால் சிறந்த கல்விமானாக வரமுடியவில்லை. ஆனால் அவர் ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறந்த சிந்தனையாளன் என்பது மறக்கமுடியாத உண்மை. ஆம் நான் அமரர் செபமாலை அவர்களைப் பற்றிய பல குறிப்புக்களை இந்தப் புத்தகத்தில் பதிவு செய்திருக்கிறேன். இப்போது சுவாமி ஞானப்பிரகாசம் அவர்களைப் பற்றிய குறிப்புக்கள் சிலவற்றைப் பார்கலாம்.

சுவாமி ஞானப்பிரகாசர் யாழ்ப்பாணத்தை அரசாட்சி செய்த 6ம் பரராசசேகரன் என்ற மன்னர் பரம்பரையில் வருகைதந்த திரு. சுவாமிநாதன் மற்றும் தங்கமுத்து தம்பதிகளுக்கு மகனாகப் பிறந்த வைத்தியலிங்கம் என்பவர் தான் இந்த சுவாமி ஞானப்பிரகாசம். இவர் தனது சொந்த ஊராகிய மானிப்பாய் என்கின்ற ஊரில் 30.08.1875ம் ஆண்டு பிறந்தார். இவர் இலங்கையில் சிறந்த ஒரு கல்விமானாக அறியப்பட்டவர். இவர் சைவசமைய முறைப்படி பிறந்து வளர்க்கப்பட்டாலும் அங்கே இருக்கிற ஏதோ ஒரு குறைபாடு இருப்பதாக அவர் நினைத்த படியால் அவர் அதில் நாட்டமற்றவராக இருந்தார். இவர் சிறந்த கல்விமானாக இருந்ததினால் பலதரப்பட்ட சிறந்த கல்விமான்களோடு பழகும் சந்தர்ப்பம் கிடைத்தது. அதுமட்டுமல்ல இவருக்குப் பல வெளிநாடுகளுடைய கிறீஸ்தவ கல்விமான்களுடனான நட்பும் கிடைத்தது. அதன் காரணமாக அவர் கிறீஸ்தவமதக் கோட்பாடுகளையும் கற்றறிந்தார். அதனால் அதன் மீது ஈப்புக் கொண்ட சுவாமி ஞானப்பிரகாசம் அவர்கள் தன்னை ஒரு கிறீஸ்தவராக மதம் மாற்றி தனது வாழ்கையைத் தொடர்ந்தார். அவர் இயற்கையாகவே நல்ல இரக்க குணம் படைத்த மனிதர். இப்போது அவர் ஒரு கிறீஸ்தவர். அதன் பின்னர் கிறீஸ்துவின் அன்பைப் பெற்றவராக இருந்ததினால் என்னும் நிறைய மக்களுக்கு தன்னுடைய உதவிகளைச் செய்துவந்தார்.

சுவாமி ஞானப்பிரகாசம் அவர்கள் யேசுக்கிறீஸ்து வுடைய போதனைகளால் ஈக்கப்பட்டதனாலும் அவருடைய அன்பான போதனைகளை ஏழையெழிய மக்களுக்குச் சொல்லும் எண்ணத்திற்காகவும் அவர் தன்னை ஒரு இறை பணியாளனாக 1895ம் ஆண்டு ஒப்புக்கொடுத்து, அவர் தன்னை யேசுக் கிறீஸ்தவுக்குத் ஒப்படைத்தார். அத்தோடு அவர் நின்றுவிடாமல் 01.01.1901ம் ஆண்டு அவர் தன்னை ஒரு கத்தோலிக்க மதகுருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டு, அவர் தன்னை யேசுவுக்குள் முழுமையாகத் ஒப்புக் கொடுத்தார். அவர் தன்னுடைய முதல் பங்குத்தந்தையாகத் தன்னை ஊர்காவத்துறை என்ற ஊரில் தன்னுடைய பங்கை வகிக்கத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடங்கினார். அவர் மதகுருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டு, தன்னுடைய சமூகப் பணியினை ஊர்காவற்றுறைக்குச் செய்யத் தொடங்குகிறார். அதில் முதலாவதாக அங்கே ஒரு நூல்நிலையத்தை உருவாக்கி, அங்கே வாழ்ந்த ஏழை மக்களுடைய படிக்கும் ஆற்றலைத் தூண்டச்செய்தார். அவை மட்டுமல்ல அவர் என்னும் எண்ணற்ற பல நூல் நிலையங்களையும் கல்விக்கூடங்களையும் உருவாக்கினார். அதில் செபமாலை என்பவருடைய வெள்ளாம்போக்கட்டி என்ற ஊரிலுள்ள பாசாலையும் அடங்கும். இவரால் உருவாக்கி அமைக்கப்பட்ட பாடசாலைகள், கல்விக்கூடங்கள் அனைத்தும் இன்றுவரை அதன் பயன்பாட்டில் இருக்கின்றன. ஆனால் துரதிஸ்டவசமாக வெள்ளாம்போக்கட்டியில் உருவாக்கிய பாடசாலை மட்டும் பாவனையில் இல்லாமல் வெறும் கட்டடங்களாகவே இருந்தன. ஆனால் இன்று அது சிறுவர்கள் பாடசாலையாக மாறியிருக்கிறது என்பது சிறிது எமக்கு ஆறுதலளிக்கிறது.

அன்பானவர்களே! சுவாமி ஞானப்பிரகாசம் அவர்கள் சுமார் ஐம்பதுக்கும் அதிகமான நூல்களை எழுதியிருக்கிறார். அவற்றில் முக்கியமான சில நூல்களை குறிப்பிடலாம் என்று நினைக்கின்றேன். அவை வரலாறு, அரசியல், மானிடவியல் சமூகவியல், எழுத்துத்துறை, சொல்லொற்றுமை, இடப் பெயர்கள், சமையவரலாறு, சமையவழிபாடு, பழக்க வழக்கங்கள், சரித்திரம், தமிழர் பூர்வீகம், யாழ்ப்பாண அரசர்கள், யாழ்ப்பாணச் சரித்திரம், தமிழர் வரலாறு, இந்திய நாகரீகம், ஜாதிகள் பிறந்தமுறை என்னும் இவர் எழுதிய நூல்களில் சொற்பிறப்பு, ஒப்பியல், தமிழ் அகராதி என்ற இவருடைய நூல்கள் தமிழர்களின் அதிசிறந்த அகராதிகளாக இன்றுவரை பலதரப்பட்ட மக்களால் கருதப்படுகிறது. இப்படி என்னும் எண்ணற்ற பல நூல்களை சுவாமி ஞானப்பிரகாசம் எழுதியிருக்கிறார். இவைகளில் பெரும்பாலான நூல்களை இவரே வெளியீடும் செய்திருக்கிறார். அது மட்டுமல்ல இவர் தமிழ்மொழிமீது அளவற்ற பற்றுக் கொண்டதனால் தமிழ் மொழி ஆக்கத் துறையின் பெரும் சாதனையாகவே இவர் கருதப்பட்டார் என்பது வரலாறு. அதனால் இவர் இலங்கையின் யாழ்ப்பாண வரலாற்றுச் சங்கத் துணைத் தலைவராக இருந்து, பின்னர் அவர் தலைவரும் ஆனார். இவரை தமிழ் சொற் புலவர் என்றும் போற்றப்பட்டார். இவர் தமிழ் மொழியில் மட்டும் தேர்ச்சி பெற்றவர் மட்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடையாது. இவர் தமிழ், ஆங்கிலம், சிங்களம், லத்தீன், சமஸ்கிறீதம், பிரான்ஸ், ஜேர்மன் போன்ற பல மொழிகளை எழுதவும் வாசிக்கவும் தேர்ச்சிபெற்றவர் என்பதும் குறிகப்பிடத்தக்கது. அருட்திரு. சுவாமி ஞானப்பிரகாசம் அவர்கள் தன்னுடைய வாழ்நாளில் எண்ணற்ற ஏழைஎழிய மக்களுக்கு கல்விஅறிவு வளம்பெறுவதற்காக பல பாடசாலைகளை உருவாக்கினார். அவை மட்டுமல்ல சுமார் 35க்கும் மேற்பட்ட கிறீஸ்தவ தேவாலையங்களையும் உருவாக்க இவர் காரணமாக இருந்தார். அந்த முப்பத்தைந்து தேவாலயத்தில் ஒன்றுதான் வெள்ளாம் போக்கட்டி என்ற ஊரில் அமைந்துள்ள செபமாலை மாதா என்ற தேவாலையமும். அன்பானவர்களே! இப்படிப்பட்ட மாபெரும் செல்வாக்கு மிக்க சுவாமி ஞானப்பிரகாசம் அவர்களை பார்ப்பதற்காக எண்ணற்ற பல சமூகசேவை செய்யும் மனிதர்கள் காவல் இருப்பார்கள். ஆனால் சுவாமி ஞானப்பிரசாசம் அவர்கள் இந்த எழை எழிய செபமாலையிடம் வெள்ளாம்போக்கட்டி ஊரில் இருக்கிற சின்னன் சிறிய குடிசை வீட்டிற்கு வந்து செபமாலை அவர்களைச் சந்தித்துச் செல்வார் என்றால் உங்களால் நம்பமுடிகிறதா? ஆம் இதுவும் உண்மைதான். அன்பானவர்களே! திரு. செபமாலை அவர்களுக்கு இப்படியான மனிதாபிமானம் கொண்ட இலங்கை நாட்டின் அதி சிறந்த கல்விமானான அருட்திரு. சுவாமி ஞானப்பிரகாசருடைய அன்பும் நட்பும் கிடைக்கப்பெற்றது. எப்பேற்பட்ட பாக்கியம். இப்படிப்பட்ட நல்ல உள்ளம் கொண்டு மனிதர்களை நேசிக்கும் அருட்திரு. சுவாமி ஞானப்பிரகாசம் அவர்கள், செபமாலை அவர்களிலும் அவர் மட்டற்ற அன்பு வைத்திருந்தார் என்பதைப் பார்க்க முடிகிறது. அதனால் செபமாலை அப்புவுடைய இந்த நினைவுநாள் மலரில் அவருடைய சிறப்புக்களை சொல்லி வெளியிடுவதில் நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

அன்பானவர்களே! இலங்கை தேசத்தின் மிகவும் ஒப்பற்ற பொக்கிசமாகத் திகழ்ந்த அருட்திரு. சுவாமி ஞானப்பிரகாசம் அவர்கள் தன்னுடைய சமூகப்பணிகள் ஆன்மீகப் பணிகள் அனைத்தையும் செவ்வனையே நிறைவு செய்து அவர் தனது 72வது வயதில் தான் பிறந்து வளர்ந்த அவரது சொந்த ஊராகிய மானிப்பாய் என்ற ஊரில் அந்த ஊரில் இருக்கும் அரசாங்க மருத்துவமனையில் 1947ம் ஆண்டு தன்னுடைய பூமிக்குரிய வாழ்க்கையைய் முடித்துக் கொண்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் யேசுக் கிறீஸ்தவினால் வரப்போகும் உயிர்த் தெழுப்பலுக்காக இப்போது மரணம் என்ற நித்திரையில் இருக்கிறார். அவருக்கு உயிர்தெழுதலைப் பற்றி எங்களைவிட சுவாமி ஞானப்பிரகாசம் அவர்கள் நன்கு அறிவார். அதே நம்பிக்கையுடன் அவரைப் புதிய பூமியில் யேசுவுடைய ஆட்சியில் வரவேற்க நாங்களும் தயாராகக் காத்திருப்போம். அன்பானவர்களே! சுவாமி ஞானப்பிரகாசருடைய பெருமை தமிழர்களுக்கு மட்டுமல்ல, அகில உலகத்திற்கே தெரியும். அதனால் சுவாமி ஞானப்பிரகாசருடைய தலையை பொறித்த தபாற் தலையை 1939ம் ஆண்டு ஜெர்மன் என்ற ஐரோப்பிய நாடு தன்னுடைய ஊர் மக்களுக்காக வெளியிட்டு சுவாமி ஞானப்பிரகாசம் அவர்களைக் கௌரவப்படுத்தினார்கள். அதைவிட அவருடைய மறைவுக்குப் பல ஆண்டுகளுக்குப் பின்னர் இலங்கை அரசாங்கம் 22.05.1981ம் ஆண்டு அவரைக் கௌரவிக்கும் முகமாக அவருடைய முகம் பதிந்த தபால் தலையை இலங்கை மக்களுடைய பாவனைக்காக வெளியீடு செய்து அவரைக் கௌரவித்தனர். இவருடைய தபாற் தலையை வணக்கத்துக்குரிய யாழ்பாண ஆயர் அருட்திரு. தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்கள் முன்பாக யாழ்ப்பாண அஞ்சல் அலுவலர் திரு. தியாகராசா அவர்கள் யாழ்பாண வீரசிங்க மண்டபத்தில் பல அறிஞர் பெருமக்கள் மத்தியில் மிகவும் பிரமாண்டமான முறையில் வெளியிட்டு அவரைக் கௌரவப்படுத்தினார். இவைமட்டுமல்ல இவருடைய வாழ்க்கை வரலாற்றையும் அன்றைய காலம் பாடசாலை மாணவர்களுடைய பாடப் புத்தகத்தில் ஒரு பாடமாகவும் இலங்கை அரசாங்கம் தந்து இவருடைய பெயரை மென்மேலும் பெருமைப் படுத்தினர். இப்படி பெருமை கொண்ட அருட்திரு. சுவாமி ஞானப்பிரகாசம் அவருடைய பேரையும் புகழையும் அவர் மக்களுக்காகச் செய்த நல்ல செயல்களையும் எனி வருகின்ற எமது சந்ததிக்ளுக்குத் தெரியப்படுத்தும் நோக்கத்துடன் செபமாலை அப்பு அவர்களுடைய நினைவுநாள் மலரில் பிசுரம் செய்தது அவரை நானும் மகிமைப்படுத்திப் பெருமையடைகிறேன். நன்றி!

குறிப்பு: சுவாமி ஞானப்பிரகாசருடைய பெரும்பாலான குறிப்பக்களை நான் சமூக ஊடகமான வலையொளியிலிருந்து பெற்றுக்கொண்டேன் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. நன்றிகள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முருகேசு (முடியப்பு)



திரு. திருமதி. வல்லிபுரம் சின்னாச்சி அவர்களின் 2ஆவது மகனாக இவர் பிறந்தார். இவர் தனது நான்காவது வயதில் தன் தாயை இழந்து தந்தையின் அரவணைப்பில் வாழ்ந்து வந்தார். இவர் சிறு வயதாக இருந்ததினால் தந்தையாரின் அளவுக்கதிகமான பாசம் கிடைக்கப் பெற்றார். அண்ணன் செபமாலையை போல் அமைதியானவராக இல்லாது மிகவும் சுறுசுறுப்பான ஒரு துடிப்பான இளைஞன். இவர் தனது அண்ணன் மேல் அன்பும் பாசமும் நல்ல ஆழ்ந்த மரியாதையும் வைத்திருப்பவர். இவர் 1953ம் ஆண்டு வெள்ளாம்போக்கட்டி கிராமசபை தேர்தலுக்காக அவ்வூரைச் சேர்ந்த மரியாதைக்குரிய மேட்டுக்குடி திரு. செல்லையா என்பவருக்கு எதிராகப் போட்டியிட்டார். அந்தத் தேர்தலில் அவர்களின் சூட்சியின் காரணமாக ஒரே ஒரு வாக்கு வித்தியாசத்தில் முடியப்பு தோற்கடிக்கப்பட்டார். அதன் பின் திரு. செல்லையா என்பவர் அவ்வூர் மக்களுக்குச் சேவை செய்வதற்கான அங்கீகாரத்தை பெற்றார். அதன் பின்னர் சேர்மன் என்ற பட்டப் பெயரினைத் செல்லையா அவர்கள் பெற்றுக் கொண்டார். அந்தப் பட்டப் பெயரால் திரு. செல்லையா இன்றுவரை அவ்வூர் மக்களால் அழைக்கப்பட்டு வருகிறார். திரு. முடியப்புவை அவர்கள் தோற்கடிக்கப்பட செய்த சூழ்ச்சி என்னவென்றால் அவர் சார்ந்த சமுதாயத்தினர் பலர் விவசாயப் பண்ணைகளை வைத்திருந்தனர். அவர்களிடம் முடியப்புவுடைய சமுதாயத்தைச் சேர்ந்த பல மக்கள் வேலை செய்து வந்தனர். அதனால் அவர்கள் இவர்களிடம் நீங்கள் முடியப்புவுக்கு இத்தேர்தலில் வாக்குச் செலுத்தி வெற்றிபெறச் செய்தால் தங்கள் பண்ணைகளில் உங்களுக்கு வேலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரமாட்டோம் என எச்சரித்தனர். அந்தப் பயத்தின் காரணமாக பலர் அவர்களுக்கு வாக்குச் செலுத்தி முடியப்புவுடைய தோல்விக்குக் காரணமானார்கள். அன்பான மக்களே! நீங்கள் அன்று முடியப்புவை வெற்றிபெற்றச் செய்திருந்தால் சேர்மன் என்கின்ற பதவியைப் பெற்று அவர் நம் சமுதாயத்தினர்க்கு நல்ல பல திட்டங்களை அவரின் ஒரு கையெழுத்து மூலம் பெறுத்தர வாய்பிருந்தது. ஏனென்றால் அன்று நாம் மக்கள் சில பல சமூக மக்களால் புறக்கணிக்கப்பட்டு வாழ்ந்து வந்தோம். அந்தக் காரணங்களால் எம் மக்கள் மேல் அன்பு வைத்திருந்த கத்தோலிக்க மதகுருமாரும் வெளிநாட்டு மெஷினெறிகளும் அன்று எம் மக்களுக்கு உதவிகள் செய்து தருவதற்கு வாஞ்சையாக காத்திருந்தனர். உதாரணமாகச் சொல்வதென்றால் முக்கியமான கல்வி வளர்ச்சிக்கு உதவுதல் மற்றும் உள்ளூர் மேம்பாட்டுக்களான வீதிகள் அமைத்தல், அரச வேலைகள் நம் மக்களுக்குக் கிடைப்பதற்கு முயற்சியெடுத்தல், ஏனைய மக்களை வேலை செய்ய வைக்கக் கூடிய அதிகாரம் மிக்க அரச பதவிகள்கூட அவர்களின் கல்வித் தன்மைக்கேற்ப கிடைத்திருக்க வாய்பிருந்தது. ஆனால் இவற்றை எல்லாம் நம் முன்னோர்கள் தவறவிட்டது அவர்கள் செய்த பெருந்தவறு. அன்பானவர்களே இந்த ஊர் மக்களின் போதியளவு ஆதரவு இல்லாத காரணத்தால் மதகுருமாரும் மெஷினறிகளும் மெதுமெதுவாகத் தங்கள் ஆதரவு நிலையைய் குறைத்துக் கொண்டனர். அதன் காரணமாக என்னவோ இன்றுவரை நம் மக்கள் அதிகாரம் மிக்க உயர் அரச பதவிகள் பெற்றிருக்க வாய்பில்லாது இருக்கின்றனர்.

திரு. முடியப்பு அவர்கள் நாகமுத்து என்ற சைவ சமையத்தில் பிறந்த பெண்ணை அன்னம்மா என்று பெயர் மாற்றம் செய்து கத்தோலிக்க மத முறைமையின்படி திருமணம் செய்து ஞானமுத்து என்று ஆண் மகனையும் திரேசம்மா என்ற பெண் மகளையும் பெற்றெடுத்தார்கள். இவர்களுடைய சந்தோசம் நீண்டநாள் நீடிக்கவில்லை. துரதிஸ்ட வசமாக முடியப்புவுடைய மனைவி அன்னம்மா நோய்வாய்பட்டு தன் இளம்வயதில் காலமானார். அதன் பின்னர் உறவினருடைய அறிவுறுத்தலின்படி **ரஞ்சிதம்** என்பவரை இரண்டாவது தடவையாக திருமணம் முடித்து இராயப்பு, லூர்த்தம்மா,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானம்மா, மரியம்மா, அன்னம்மா, அந்தோனிக்கம்மா மற்றும் யேசுதாசன் ஆகியோரைப் பெற்றெடுத்தனர். எனினும் இவர் களுக்கு நீற்றம்மா என்ற பெண் குழந்தையும் பிறந்து சிறுவயதில் நோயின் காரணமாக இறந்து விட்டார். திரு. முடியப்பு அவர்களும் நோயின் பிடியில் சிக்குண்டு 1984ம் வருடம் இந்த உலகை விட்டு மறைந்துவிட்டார். என் அன்பான உறவுகளே! கத்தோலிக்க மக்களை அடக்கம் செய்ய பயன்படுத்தும் இடுகாடு என அழைக்கப்படும் எங்களுடைய சவக்காலையை சுமார் ஐம்பது வருடத்திற்கு மேலாக சில மக்களால் ஆக்கிரமிக்கப்பட்டு வைத்திருக்கப் பட்டிருந்தது. அதை நம் மக்களின் சில பல போராட்டத்தின் பின்பு மீண்டும் நம்முடைய பாவனைக்குக் கொண்டு வரப்பட்டது. ஆக்கிரமிப்புக்காரர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டது. இந்த நம்முடைய இடு காட்டில் சுமார் ஐம்பது வருடத்தின் பின்பு முதல் முதலாக அமரர் திரு. முடியப்புவுடைய உயிரற்ற பூதவுடல்தான் அடக்கம் செய்யப்பட்டது. அதன் பின்னர் இப்போது அந்த இடுகாடு கத்தோலிக்க மக்கள் தங்கள் பாவனைக்குப் பயன்படுத்துகின்றார்கள். அமரர் திரு. முடியப்பு இன்று மரணமென்ற நித்திரையில் இருக்கிறார். அன்பானவர்களே! பைபிள் இருந்தால் தயவு செய்து பாருங்கள். யோவான் 5ம் அதிகாரம் 28ம் வசனம் கல்ல றையில் உள்ள அனைவரும் உயிருடன் வருவார்கள் என்று சொல்லப்பட்டு இருக்கிறது. இதை நான் நம்புகிறேன் நீங்கள்?



றஞ்சிதம்

## சின்னத்தங்கம் (மேரி)



இவர் செபமாலையுடைய ஓர் உறவுக்காரப் பெண். சைவசமைய மதத்தைச் சார்ந்தவர். இவருடைய சின்னவி என்ற இயற்பெயரை மேரி என்கின்ற கிறீஸ்தவப் பெயர் மாற்றம் செய்யப்பட்டு கிறீஸ்தவ முறைமையின்படி செபமாலை திருமணம் செய்து கொண்டார். இவர்களுக்கு ஞானப்பிரகாசம், ஆசீர்வாதம் என இரண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகன்கள் உள்ளனர். திருமணம் செய்து மிகக்குறுகிய காலத்தில் 1932ம் ஆண்டு தன் குடும்பத்தை ஆறாத்துயரில் ஆழ்த்தி விட்டு இவ்வுலகைவிட்டுப் பிரிந்துவிட்டார். இவர் சைவ சமையத்திலிருந்து கிறீஸ்தவமதம் தழுவியதால் அவருடைய உறவினர்களால் ஒதுக்கி வைக்கப்பட்டார். ஆனாலும் செபமாலை இவரில் மேல் காட்டிய அன்பின் காரணமாக சின்னவி இவற்றையெல்லாம் பொருட்படுத்தவே இல்லை. அவர் இறந்தபின்பு செபமாலையையும் பிள்ளைகளையும் அவர்கள் முற்றுமுழுதாக மறந்துவிட்டனர். சின்னவியின் சொந்த பந்தங்கள் ஓரிரு மையில்கள் தொலைவில்தான் வாழ்ந்து வருகின்றனர். ஆனாலும் அந்நியர்கள்போல ஒருவரையொருவர் கண்டு கொள்வது இல்லை. சின்னவியடைய பேரன்களும் அவருடைய சொந்த சகோதரியுடைய பேரப் பிள்ளைகளும் ஒரே பாடசாலையில் படிக்க நேரிட்டபோது கிட்டத்தட்ட சுமார் நாற்பது வருடங்களின் பின்புதான் நாங்கள் இரத்த உறவு எனப் புரிந்து கொண்டார்கள். ஆனாலும் நீண்டகாலப் பிரிவால் அதுவும் நீர்த்துப் போய்விட்டது. சைவம், வேதம் என்ற இருவேறு கோட்பாட்டின் காரணமாகப் பிரிந்த இவர்கள் நன்மை தீமைகள் எதுவானாலும் பெரும்பாலும் ஒருவரை ஒருவர் அழைப்பதில்லை. ஆனால் யாரையும் யாரும் குறைகூற முடியாது. அன்பானவர்களே கடவுள் தன்னுடைய புத்தகமான பைபிளில் இப்படிச் சொல்லுகிறார். மனத்தாழ்மையானவன் இந்தப் பூமியைச் சுதந்தரித்துக்கொண்டு சமாதானமாகவும் மனமகிழ்ச்சியாகவும் என்றென்றும் வாழ்வான் என்று சொல்லப்பட்டு இருக்கிறது. சங்கீதம் அதிகாரம் 37 வசனம் 9 தயவுசெய்து பார்க்க முடிந்தால் பாருங்கள்.

## மேரி மரியம்மா



செபமாலையுடைய துணைவியாராகிய சின்னத்தங்கம் காலமானதன் பின்னர் செபமாலைக்கு இரண்டாவது திருமணமாக கோப்பாய்யூரை சேர்ந்த மேரி மரியம்மா என்பவரைத் திருமணம் செய்து கொண்டார். இவர் ஆறு அண்ணன்மார்களுடன் சேர்ந்து பிறந்து ஏழாவது செல்வமகள். இவர் மிகப்பெரிய செல்வக் குடும்பத்தில் பிறந்தவர். இவர் செல்வச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செழிப்போடு அவர்களால் வளர்க்கப்பட்டார். மரியம்மாவுடைய மூன்று அண்ணன்மார்கள் சிறுவர்களாக இருந்த போதே இறந்து விட்டார்கள். மற்ற மூன்று அண்ணன்களில் இருவர் மேரி மரியம்மாவுக்கு சுமார் பத்து வயது இருக்கும்போது தம் உறவினர்களோடு சிங்கப்பூர் சென்றுவீட்டனர். மீதமிருந்த ஒரு அண்ணனுடனும் தாய் தந்தையுடனும் வாழ்ந்து வந்தார். இவருடைய தந்தை இராமு இறந்த பின்னர் படிப்பறிவில்லாத இவர்கள் தங்கள் உறவினர்களால் ஏமாற்றப்பட்டு தங்களுடைய அனைத்துச் சொத்துக்களையும் இழந்தார்கள். மேரி மரியம்மாவுடைய அண்ணன்மாரும் சொந்தக்காரர்களும் சிங்கப்பூரில் இருந்து அனுப்பும் பணம் மற்றும் விலையுயர்ந்த தங்கம் போன்ற பொருட்கனையும் அபகரித்துவிட்டு, அவர்களால் அனுப்பப்படும் கடிதங்களை இவர்களிடமிருந்து மறைத்தும் படிப்பறிவு இல்லாத இவர்களிடம பொய்களைக் கூறியும் களவாக கையொப்பம் வாங்கியும் நிலபுலன்களையும் அபகரித்துக் கொண்டு இவர்களை நிற்கதியாக்கிவிட்டனர். அதன்பின்னர் அவர்களது தாயாரால் இவர்களுக்கு திருமணம் செய்துவைக்கப்பட்டது. பின்னர் தாயார் சின்னத் தங்கமும் காலமாகிவிட்டார். திரு. செபமாலை மேரிமரியம்மாவைத் திருமணம் செய்து பிலோமினா, மரியநாயகம், பூரணம், அருளானந்தம் ஆகியோரையும் ஜெபறஞ்சிதம்மா இவர் மூன்று வயதாக இருக்கும்போது இறந்து விட்டார். இந்த ஐந்து பிள்ளைகளை இவர்கள் பெற்றெடுத்தார். ஜெபறஞ்சிதம்மா சிறுவயதில் இறந்திருந்த போதிலும் எங்களுடைய வீட்டில் யாருக்காவது என்ன விஷசங்கள் நடைபெற்றாலும் இவர்கள் இருவரும் இறந்த அந்தப் பிள்ளையையும் நினைவு கூர மறக்கவே மாட்டார்கள். மேரி மரியம்மா சிங்கப்பூரில் இருந்த அண்ணன் சின்னையாவை சுமார் ஐம்பது வருடத்தின் பின்பு ஒரு விபத்தின்மூலம் கண்டுபிடிக்கிறார். இதன் பின்னர் தன் தங்கையைப் பார்ப்பதற்காக 1982ம் ஆண்டு இலங்கைக்கு வந்து தன் தங்கை மேரி மரியம்மாவைச் சந்திக்கிறார். அதன் பின்னர் தன் தாய், தங்கையை வஞ்சித்வர்களிடம் சென்று நீதி கேட்கப் போகிறார். அப்போ அவர்கள் யாருமே உயிருடன் இல்லை. அவர்களுடைய பிள்ளைகள் மட்டும்தான் அப்போது இருந்தனர். அவர்களிடம், அவர்கள் பெற்றோர்களால் தன் தாயும் தங்கையும் வைஞ்சிக்கப்பட்ட கதைகளையெல்லாம் சொல்லிவிட்டு வந்தார்கள். அன்றைய இவர்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொத்துக்கள் ஒண்டரைக் கோடிக்குமேல் எனக் கணக்கிடப் பட்டது என்று சொல்லப்பட்டது. இதைவிட பூநகரி என்ற ஊரில் பல ஏக்கர்கணக்கான நெல்வயல்களும் இவர்களுக்கு அன்று இருந்தன. கேட்பாரற்று இருந்த இந்த விளை நிலங்கள் இன்று யார்யாருக்கோ சொந்தமாகிவிட்டது. ஆனாலும் ஐம்பது வருடங்களுக்கு பின்பு ஏற்பட்ட நம் உறவு இன்றுவரை தொடர்கிறது. மேரி மரியம்மா தனது கணவன் செபமாலை 1989ம் ஆண்டு இறந்த பின்பு அவரை தனது இரண்டு ஆண்பிள்ளைகளும் கனடா நாட்டுக்கு வரவழைத்தனர். அவர் கனடா நாட்டில் வாழ்ந்தாலும் தன்னுடைய இரண்டு பெண்பிள்ளைகள் வாழும் நாடான ஜெர்மனுக்கு நினைக்கும் போதெல்லாம் வந்து செல்வார். இவர் ஜெர்மன், பெல்சியம், கொலண்ட், பாரிஸ், போத்துக்கல், ஸ்பெயின், சுவிஸ், அமெரிக்கா போன்ற எண்ணற்ற பல நாடுகளுக்கு தன் பிள்ளைகளுடனும் பேரப்பிள்ளுடனும் பூட்டப்பிள்ளை களுடனும் சுற்றுலாக்களை அனுபவித்து மகிழ்தார். அவர் எப்படி சிறுவயதில் செல்வச் சீமாட்டியாக இருந்தாரோ அதைவிட நூறு மடங்காக அவரை ஆண்டவன் ஆசீர்வதித்தான். அன்பானவர்களே! படிப்பறிவற்று இவர் தன் பேரப்பிள்ளைகள் பூட்டப் பிள்ளைகளை ஆங்கில மொழியில் திட்டுமளவுக்கு பயிற்சி பெற்றிருந்தாரென எண்ணும்போது எமக்கெல்லாம் ஆனந்தமாகவே இருக்கிறது. அன்பானவர்களே இவர் 2006ம் ஆண்டு தன்னுடைய பூமிக்குரிய வாழ்கையை முடித்துக் கொண்டு இன்று மரணம் என்கிற ஓய்விலிருக்கிறார். யோபு 14ம் அதிகாரம் வசனம் 15இல் இப்படிச் சொல்லப்பட்டிருக்கிறது உங்களால் உருவாக்கப்பட்ட நான் நீங்கள் கூப்பிடும்போது உயிரேடு வருவேன் என்று. எழுதப்பட்டிருக்கிறது அதே நாமும் நம்புவோம்.



மேரி மரியம்மா, பேத்தி நவம், பூட்டி செல்வதி, கொப்பட்டன்



மேரி மரியம்மா, மகள் பிலோமினா, பேத்தி றீற்றம்மா, பூட்டி சிந்துஜா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானப்பிரகாசம்




செபமாலை முதல் மனைவி மேரி தம்பதியினருக்கு முதல் மகனாக 1930ம் ஆண்டு பிறந்தார் இந்த ஞானப்பிரகாசம். அன்பானவர்களே! வணக்கத்துக்குரிய அருட்தந்தை சுவாமி ஞானப்பிரகாசம் அவர்கள் மேல் வைத்திருந்த அன்பின் காரணமாக செபமாலை தனது முதல் மகனுக்கு இந்தப் பெயரைச் சூட்டினார். (சுவாமி ஞானப்பிரகாசம் யாரென்றும் அவர் வரலாற்றை சுவாமி ஞானப்பிரகாசம் என்ற தலையங்கத்தில் கீழ் சுருக்கமாக பதிவு செய்திருக்கிறேன். தயவுசெய்து பார்த்துக் கொள்ளுங்கள்) செபமாலை தனக்கு முதல் மகனாகப் பிறந்த இவர் தன்னுடைய முதல் முத்து என்று செபமாலை இவர் மட்டும் இந்தப் பெயரை செல்லமாகக் கூப்பிடுவார். திரு. ஞானப்பிரகாசம் மிருசுவில் ஊரைச் சேர்ந்த பிலோமினா என்பவரைத் திருமணம் செய்து நவம் செல்வராசா (இராசா) வில்லியம் (உதயகுமார்) பூவதி இராசசுலோச நாயகம்(வவா) தோமாஸ் மேரிக்கிறேஸ்லூமினா (பிள்ளை) லூர்த்துநாயகம் மற்றும் தாசன் இவர் ஒரு விபத்தின் மூலமாக 1980ம் ஆண்டு சுமார் பதினெட்டு வயதாக இருக்கையில் மரணமானர். திரு. ஞானப்பிரகாசம் பிலோமினா தம்பதியினர் ஒன்பது பிள்ளைகளைப் பெற்று பெருவாழ்வு வாழ்ந்தனர். இவருடைய இரண்டு பிள்ளைகள் காலமானார்கள். ஐந்து பிள்ளைகள் இப்போ லண்டனில் வாழ்கின்றனர். மற்ற இரண்டு பெண்பிள்ளைகளும் இலங்கையில் முல்லைத்தீவு மற்றும் வவுனியா ஆகிய இடங்களில் இருக்கின்றனர். திரு. ஞானப்பிரகாசம் அவர்கள் ஒன்பது பிள்ளைகளுக்கு தந்தையான பின்பும்கூட தகப்பன் மேல் ஆழ்ந்த மரியாதையும் பயமும் உண்டு. இவர் நோயின் கோரப் பிடியில் சிக்குண்டு 1980ம் ஆண்டு இந்த உலகைவிட்டுப் பிரிந்து சென்றுவிட்டார். இவருடைய உயிர்தெழுதலைச் செய்யவும் இறைவன் வாஞ்சயாக இருக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசீர்வாதம்



செபமாலை மேரி தம்பதியினருக்கு இரண்டாவது மகனாக ஆசீர்வாதம் பிறந்தார். இவர் குழந்தையாக இருந்தபோது இவர் தாய் இறந்துவிட்டார். அதனால் இவர் தந்தையாரின் செல்லப் பிள்ளையாகவே வளர்க்கப்பட்டார். இவர் முகமாலை ஊரைச் சேர்ந்த மரியம்மா (குணம்) என்பவரைத் திருமணம் செய்து ஸ்ப்பம்பதி(இராசா), பிரான்சீஸ்சேவியர், இருதயநேசன், அருள்நேசம்(லலிதா), ஜெயநேசம்(ஜெயா) என (ஐந்து பிள்ளைகளைப் பெற்றெடுத்தனர். இவர்களில் இரண்டு பிள்ளைகள் ஜெர்மன் நாட்டிலும் மற்றும் இருவர் லண்டன் மற்றும் பாரிஸ் நாடுகளிலும் இன்று வாழ்ந்து வருகின்றனர். இவர் தந்தையுடன் என்றும் நட்பாகத்தான் பழகுவார். இருவரும் ஒன்றாகச் சேர்ந்து மதுக்குடிப்பார். மகனுக்கு புகைப் பழக்கம் இருப்ப தனால் இருவரும் ஒருவருக்கொருவர் புகையிலைக்கு நெருப்பு மூட்டிப் புகைத்துக் கொள்வார்கள். அப்படி இவர்களுடைய உறவு இருந்தது. இவர் 2005ம் ஆண்டு நோய்வாய்ப்பட்டு மரணத்தைத் தழுவிக்கெண்டார். இறைவன் இவரையும் உயிர்பெறச்செய்வார் என நாம் நம்புவோமாக.

## பிலோமினா



செபமாலை அவருடைய இரண்டாவது மனைவியான மேரி மரியம்மா இருவருக்கும் முதல்பிள்ளையாக இவர் பிறந்தார். இவர் சென்பியன்பற்று ஊரின் அருகாமையில் அமைந்துள்ள சிற்றூரான குடாரப்பு ஊரைச் சேர்ந்த எட்வேட் என்பவரைத் திருமணம் செய்தார். (இவர் கடல் தொழிலில் தேர்ச்சி பெற்ற மிகப்பெரிய ஒரு ஜம்பவான்) திருமணம் செய்து ஜேசுதாசன், றீற்றம்மா, மரியதாஸ் ஆகிய மூன்று பிள்ளைகளைப் பெற்றெடுத்தனர். பிலோமினா தனது கணவன் எட்வேட் அவர்களுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டின் காரணமாக சில காலம் பிரிந்திருந்தார். திரு. எட்வேட் அவர்கள் ஒரு விபத்தின் மூலமாக 1988ம் ஆண்டு இறந்துவிட்டார். இவர் மரிப்பதற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு அவருடைய பிள்ளைகளின் விருப்பத்தின்படி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனைவியுடன் இவர் சேர்ந்து கொண்டார். இவருடைய மரணம் மகாமகா கொடுமையான யுத்தத்திற்கு மத்தியில் நடைபெற்றது. அதனால் இவருடை நல்லடக்கம் மனைவி, பிள்ளைகளுடனும் மிகக் குறைந்த மக்களுடன்தான் நடைபெற்றது. கணவரின் மறைவுக்குப் பின்னர் மிகுதியாக ஊரில் இருந்து இரண்டு பிள்ளைகளும் றீற்றம்மா, மரியதாசன் அகிய இருவரும் 1988ம் ஆண்டு ஜெர்மன்நாடு சென்றுவிட்டனர். அன்று இவரையும் பிள்ளைகள் ஜெர்மன்நாட்டிற்கு அழைத்தபோது தாய் தந்தையை விட்டு வரமுடியாதென மறுத்துவிட்டார். தாய் தந்தைமேல் அதிகமான பாசம் தைத்திருந்த இவர் 1989ம் ஆண்டு தந்தையின் மறைவுக்குப் பின்னர் 1992ம் ஆண்டு அவருடைய தாய் மேரி மரியம்மா கனடா நாட்டில் இருக்கும் அவர்களுடைய பிள்ளைளுடன் சென்றுவிட்ட பின்னர் பிலோமினாவும் ஜெர்மன் நாட்டில் இருக்கும் தன் பிள்ளைகளுடன் சென்றுவிட்டார். செபமாலை பெற்றெடுத்த ஏழு பிள்ளைகளில் மிகவும் மிகவும் துன்பப்பட்டவர் இவர் மட்டுமாகத்தான் இருக்கும். இவர் தன்பிள்ளைகளுடன் இருபத்தொரு வருடங்கள் ஜெர்மனியில் வாழ்ந்தார். இந்த நாட்களில் இவர் பெற்ற ஆசீர் வாதங்கள் கணக்கிலடங்காது. அன்பானவர்களே! யோபு 42ம் அதிகாரம் வசனம் 10ஐ தயவுசெய்து பாருங்கள். கஸ்டங்களை கடவுள் அனுமதிப்பது தண்டனைக்காக அல்ல. பின்பு கிடைக்கப் போகும் ஆசீர்வாதத்திற்காக என எழுதப்பட்டிருக்கிறது. திருமதி. எட்வேட் பிலோமினா 2015ம் ஆண்டு நோய்வாய்ப்பட்டு இறந்து விட்டார். இவர் தான் மரிப்பதற்கு முன்பு கடிதமொன்று எழுதி வைத்திருந்தார். அதில் அவர் தான் இறந்துவிட்டால் தன்னுடைய உடலை ஊருக்குக் கொண்டு சென்று தன் தந்தை செபமாலை அவர்களுக்குப் பக்கத்தில் அடக்கம் செய்யும்படி. அவர் விருப்பப்படி அவருடைய உடல் தந்தைக்குப் அருகிலேயே அடக்கம் செய்யப்பட்டது. இவர் தனது தந்தையில் எவ்வளவு பாசம் வைத்திருந்தார் என்று எங்களால் அறியமுடிகிறது.



செபமாலை மற்றும் மகள் பிலோமினாவுடைய கல்லறைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜெபறஞ்சிதம்மா



இவர் செபமாலை மேரிமரியம்மா தம்பதியினருடைய இரண்டாவது மகள் ஜெபறஞ்சிதம்மா. இவர் தன்னுடைய மூன்றாவது வயதில் காச்சல் என்ற நோயின் கடுமையான தாக்கத்தால் மருந்துகள் பயனற்று இறந்துவிட்டார். இவருடைய முகம் எப்படி இருக்கும் என்பதை இவரது சகோதரர்கள் இன்று மறந்துவிட்டனர். ஆனால் இவருடைய தாய் தந்தையர்கள் தாங்கள் இறக்கும்வரை மறந்ததே கிடையாது. காரணம் அவரை இவர்கள் இறந்ததாகவே நினைக்கவில்லை. தினம் தினம் மறக்காமல் நினைத்தபடியே இருந்தனர். ஜெபறஞ்சிதம்மாவுக்கும் அயல் வீட்டில் வசித்த கந்தசாமி என்பவருக்கும் ஓரே வயது. அதனால் அவரின் அம்மா குஞ்சு ஆச்சியிடமும் சென்று பால்குடிக்கும் வழக்கம் இருந்தாக அவருடைய தாய் மேரி மரியம்மா எங்களிடம் பலமுறை சொல்லியிருக்கிறார். இவர் பிறந்தபோது அவரின் இரண்டு கைகளிலும் சிலுவைபோன்ற வடிவமைப்புக் கொண்ட மச்சம் இருந்ததாகச் சொல்வர்கள். இதனை 2006ம் ஆண்டு மரித்துப்போன மேரி மரியம்மாவுடைய கண்ணீர் அஞ்சலியில் கூட நாம் அச்சிட்டிருந்தோம். அதையும் உங்கள் பார்வைக்காக இங்கு பிரசுரம் செய்கிறேன் அன்பானவர்களே ஜெபறஞ்சிதம்மா அவர் மேல் செபமாலை எப்படி அன்புவைத்துள்ளார் என்பதற்கு அடையாளமாக அவர் இறப்பதற்கு முன்பு எழுதிவைத்த ஓர் கடிதத்தில் அவரைப் பற்றிய ஒரு சிறு குறிப்பையும் அவர் எழுதி வைத்துள்ளார். அன்பானவர்களே! ரோமர் 6ம் அதிகாரம் 8ம் வசனத்தை தயவுசெய்து வாசித்துப் பாருங்கள் நாம் யேசுக் கிறீஸ்துவைப் போலவே நாம் இறந்தோம் என்றால் அவரோடு வாழ்வதும் நிட்சயம். உயிர்த்து எழுதலின்போது வருவார் என்பது கடவுள் நமக்குத் தரும் நல்ல செய்தி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



மலர்வு.
12.06.1922

உதிர்வு.
26.03.2006

சிறப்புற்ற கோப்பாய் மண்ணில் சிறப்போடு வாழ்ந்து இராமன்
கைத்தலம் பற்றிக் கொண்ட இல்லவள் சின்னத்தங்கம்
இல்லற வாழ்வு தன்னில் பெற்ற நற் பிள்ளைகள் ஏழில்
இளையவள் மேரி இன்று எங்களைத் துயரிலாழ்த்தி
விண்ணிடை வாழும் தெய்வ வீட்டினைச் சேர்ந்தாரின்று
எம்மையும் துயரிலாழ்த்தி சென்றீரோ தெய்வவீடு

அல்லாரை ஊரனைத்தும் தெய்வமாய் போற்றி நிற்கும்
உத்தமர் என்ற செபமாலை பெயர் கொண்டவரை
உம் துணைவராக ஏற்றுப் பிள்ளைகள் ஐவர் ஈன்றீர்
மன்னவர் முனதுணை இழந்து பிள்ளைகள் இரண்டினோடும்
பெருந் துயரம் கொண்ட போது தோள் கொடுத்து நின்றவரே
தூர எமை விட்டு தொலை தூரம் சென்றீரோ!

ஐந்து பிள்ளை நீர் பெற்று ஏழு பிள்ளை வளர்த்த விந்தை
அல்லாரை ஊர் அனைத்தும் தான் அறிந்த செய்தியம்மா
ஊர் அறியாச் செய்தியொன்றும் உண்மையிலே இருக்குதம்மா
கை இரண்டில் குருசு மச்சம் கொண்ட பிள்ளை ஜெபறஞ்சிதம்மா
சிறுவயதில் தவறியது சிலர் அறிந்த உண்மை மட்டும்
அவரின் நினைவு வந்து கலங்குதல் நாமும் கண்டோம்

பிள்ளைகள் எழுவர் ஈன்ற பேரரும் பேத்திமாரும்
ஐய்யந்து இருபத்தைந்தும் அழுது புலம்புகிறார்
பேரரும் பேத்திமாரும் பெற்ற உம் பூட்டரும், பூட்டிமாரும்
முப்பத்தியாறும் இங்கு பேருறும் துயரில் நின்று
துடியாய்த் துடித்து துயர் கொள்கிறார்கள்
பேரரின் பேத்தி நால்வர் கண்ட எம் அன்புத்தாயே!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பது எதுவானாலும் கொடுக்க நீர் தயங்கமாட்டீர்
ஏழை மக்களுக்கு கற்பகதரு நீரம்மா
உன்போல் நல்லவரின் உயிர் பிரிந்து போகலாமோ
உம் பொன்னான மேனி உண்ண பூமித்தாய் பார்த்திருந்தாள்
உம் பூவுடலின் உயிர் பறிக்க காலனவன் காத்திருந்தான்
மண்ணுலகை நீர் வெறுத்து விண்ணுலகம் சென்றதேனோ!

அழுது புலம்புகின்றோம் ஆறுதல்கூற யாருமில்லை
அம்புபட்ட மான்போலின்று அழுது துடிக்கிறோமே
அம்மா உம் பிரிவால் இன்று அழுது நாம் துடிக்கிறோமே
துயரினை நாம் சுமந்த வேளை துணையாய் நின்ற தாயே
துயரினில் எம்மை ஆழ்த்தி தொலை தூரம் சென்றதேனோ
அம்மா! அம்மா!! அம்மா!!! என்று கூவி அழைக்கின்றோம்
அலறித் துடிக்கின்றோமே அம்மா! அம்மா!! அம்மா!!!
அறியாமல் நீரும் இன்று ஆழுறக்கம் கொள்வதேனோ?

இறைவனடி சென்ற அப்பு அண்டதனைச் சென்றடைய
அன்புடனே ஆண்டவரை பிரார்த்தனைகள் நாம் செய்வமே
வணங்குகின்றோம் நாம் உம்முடைய உயிரற்ற பொன்னுடலை
அம்மா! அம்மா! அம்மா! அம்மா! அம்மா! அம்மா! என்று
இறுதிமொழி கூறி நின்று பரலோக வாழ்க்கை வாழ
இருகரம் கூப்பி உம்மை அனுப்பி வைக்கின்றோமே!

உன் பிரிவால் துயருறும்
உனதன்பு உறவுகள்
எட்வேட் பிலோமினா குடும்பத்தினர்
ஜேர்மனி
01.04.2006






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரியநாயகம்



இவர் செபமாலை மேரி மரியம்மா தம்பதியினருடைய மூன்றாது பிள்ளை. இவர் உசன் மகாவித்தியாலையத்தில் 10ம் வகுப்புவரை படித்தார். அன்றைய கால கட்டத்தில் இவர் ஆங்கிலக் கல்வியில் புலமைபெற்றிருந்தார். பின்பு லாண்டாமி என்ற அரசபதவியில் சிறிதுகாலம் பணியாற்றினார் இலங்கையில் அப்போது ஏற்பட்ட சேகுவரா கிளர்ச்சியின்போது வேலையைய் விட்டுவிட்டு சிறிது காலத்தின் பின்னர் 1971ம் ஆண்டு கப்பலில் வேலை செய்வதற்காக வெளிநாட்டிற்குச் சென்றுவிட்டார். அன்றிலிருந்து இன்றுவரை வெளிநாட்டில்தான் இவர் வாழ்கிறார். இவர் உலகின் பல நாடுகளுக்குச் சென்று வேலை பார்த்திருந்தார். அதனால் இவருக்கு தமிழ், ஆங்கிலம், சிங்களம், ஜெர்மன், லெபினீஸ் மற்றும் அரபு மொழிகளைப் பேசக்கூடியவர். இவர் யாழ்ப்பாணம் ஜெயசீலி என்பவரைத் திருமணம் செய்து கிறிஸ்ரின்விம்ஷி என்ற ஆண் மகனையும் குயின்ஷி என்ற பெண் பிள்ளையையும் பெற்றெடுத்தார்கள். இவர்கள் 1985ம் ஆண்டிலிருந்து நிரந்தரமாக கனடா நாட்டில் குடும்பமாக இருந்து வாழ்ந்து வருகின்றனர். இவர் சுமார் ஐம்பது வருடங்கள் வெளிநாடுகளில் அனுபவித்துக் கஸ்டப்பட்டதின் பயனாக கடவுள் இவருக்கு இன்று பல ஆசீர்வாதங்களைக் கொடுத்திருக்கிறார். அதனால் நாம் கடவுளுக்கு நன்றி சொல்வோம். அன்பானவர்களே! எல்லாவற்றையும் கடவுள் ஏதோ ஒரு காரணங்களுக்காக கஸ்டங்களை அனுமதிகிறார். ஆனால் முடிவு என்னவோ நன்றாகத்தான் இருக்கும் இதுவே நாம் கடவுளிடம் கற்றுக் கொண்ட பாடம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூரணம்




திரு. செபமாலை மேரி மரியம்மா இவர்களுடைய நான்காவது பிள்ளையாகப் பிறந்தார். இவர் சிறுவயதில் மிகுந்த சுறுசுறுப்புப்பானவர். என் இன்றுவரை (2020ம் ஆண்டு) அப்படியேதான் இருக்கிறார். இவர் தன்னுடைய உடலை அதிகமாக கவனித்துக் கொள்ளுபவர். தன்னுடைய அறுபத்தி ஏழு வயதிலும் நீச்சல் மிதிவண்டி ஓடுதல், தினமும் ஒழுங்கான உடற்பயிற்சி என தவறாமல் செய்து கொண்டிருப்பார். இவர் தனது பதினெரு வயதிலிருந்து கோப்பாய் ஊரில் இருக்கும் அவரது பெரிய தாயாரான சுந்தரி ஆச்சி என்பவருடைய வீட்டில்தான் தனது பெரும்பாலான நாட்களைக் கழித்தார். இவர் அதேயூரைச் சேர்ந்த சொந்தங்களாக இருந்த திரு. நாகமுத்து திரு.திருமதி. செல்வி ஆகியோருடைய ஒரே மகனான திரு. நவரத்தினம் என்பவரைத் திருமணம் முடித்து ஆறு பிள்ளைகளைப் பெற்றெடுத்தார். இவர்களுக்கு முதலில் இரட்டை ஆண் குழந்தைகள் பிறந்தனர். துரதிஸ்டவசமாகப் பிறந்த சில மணி நேரங்களில் இருவரும் இறந்துவிட்டனர். இவர்களுடைய பிஞ்சுமுகத்தை இவரது தாயார் மேரிமரியமம்மா அவர்களைத்தவிர வேறுயாரும் பார்க்க வில்லை. அதன் பின்பும் மீண்டும் ஓர் பெண் குழந்தையைப் பெற்றெடுத்தனர். அந்தக் குழுந்தையும் பிறந்த சில மணி நேரத்தில் இறந்துவிட்டது. இந்தக் குழந்தையுடைய பிஞ்சு முகத்தையும் அவர் தாயால் மட்டுமே தான் பார்க்கமுடிந்தது. அதன் பின்பு ஜேன்ஜெமீனா(கீதா), ஜெபநேசன், ஜோணஸ் ஆகிய மூன்று பிள்ளைகள் பிறந்தனர் இவர்கள் அனைவரும் 1984ம் ஆண்டிலிருந்து இன்றுவரை (2020) ஜெர்மன் நாட்டில் குடும்பமாக வாழ்ந்து வருகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருளானந்தம்



அருளானந்தம் மேரி மரியம்மா செபமாலை தம்பதிகளின் ஐந்தாவது மகனாகப் பிறந்தவர் இவர்தான். இவர்களின் கடைசிப் பிள்ளையும் கூட. மிகுந்த செல்லப் பிள்ளையாகவும் இருந்தவர். இவருக்கு கஸ்டம் என்றால் என்னவென்றே தெரியாமல் வாழ்ந்தவர். திரு. செபமாலை யார் எவரையும் எந்தவொரு சந்தர்ப்பமாக இருந்தாலும் ஏன் அவர்கள் தவறுகளே செய்திருந்தால் கூட தன் சொந்தப் பிள்ளைகளையோ, மற்றவர் களையோ சுடு சொற்களால் திட்டியதோ? பேசியதோ? கிடையாது. எப்படிபட்ட மனிதன் ஆருளானந்தம் அவர்களைப் பலமுறை திட்டிப் பேசினார் என்றால் ஆனந்தம் எப்பேற்பட்ட செயல்களைச் செய்திருப்பார் என யோசித்துப் பாருங்கள். ஆனால் அருளானந்தம் அவர் தந்தையிடம் திட்டு வேண்டுவதை பற்றி எந்த நாளும் கவலைப்பட்டது கிடையாது. ஏனென்றால் திட்டுக்குப் பின்னர் அவருக்குக் கிடைக்கும் அதீத அன்பை அவர் நன்றாகப் புரிந்து வைத்திருந்தார். திரு. அருளானந்தம் வசாவிளான் ஊரைச் சேர்ந்த றஞ்சி என்பரைக் காதல் திருமணம் செய்து <u>அலெக்சனா,</u> <u>கிளவ்வுடியா,</u> <u>மரீனா</u> ஆகிய மூன்று பிள்ளைகளைப் பெற்றார். இவர்கள் 1985ம் ஆண்டு ஜெர்மன் நாட்டிற்கு வந்து சுமார் பத்து ஆண்டுகள் இங்கேயே வாழ்ந்தார்கள். பின்னர் கனடா நாட்டுக்குச் சென்றுவிட்டார்கள். இவர்களுடைய மனைவி பிள்ளைகள் இன்று வரை (2020ம் ஆண்டு) கனடா நாட்டில் தான் வாழ்ந்து வருகின்றனர். ஆனால் திரு. அருளாந்தம் தன்னுடைய இளம் வயதில் நோய்வாய்ப்பட்டு 2014ம் ஆண்டு இவ்வுலகைவிட்டுப் பிரிந்து சென்றுவிட்டார். அன்பானவர்களே! மரணிக்கப்பட்ட அனைவரும் உயிர்தெழுவரென நான் நம்புவதைப் போலவே இவரையும் நம்புகிறேன். தயவு செய்து தானியேல் அதிகாரம் 12வது வசனம் 13 பாருங்கள். முடிவு காலம் மட்டும் நீ போய் இளைப்பாறு. நாட்களின் முடிவில் அதாவது யேசுவின் வருகையின்போது நீ உயிர்தெழுப்பப்படுவாய் என எழுதி வைக்கப்பட்டிருக்கிறது. கடவுளின் வார்த்தை என்றுமே பொய்யாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரு. பத்திநாதர் அவர்கள்



செபமாலை அப்பு அவர்களுடைய வாழ்நாளில் நல்ல நண்பர்களாக ஏற்றுக் கொண்ட நண்பர்கள் இருவர்கள். அதில் ஒருவர் திரு பத்தினாதர் அவர்கள். மற்றவர் திரு சின்னப்பு சின்னப்பொடி அப்பு. இவர்கள் இருவரையும் செபமாலை அப்பு என்றுமே மறந்தது கிடையாது. செபமாலை அப்பு அவர்கள் கிறீஸ்தவ மதம் மாறிய பின்னர் அவர் தான் முன்பு கடைப்பிடித்து வந்த சமைய வழிபாட்டை மட்டுமல்ல சடங்கு சம்பிரதாய கோட்பாடுகளை அனைத்தையும் அவர் தன் செயலில் மட்டுமல்ல, நினைவிலிருந்தும் அழித்தொழித்து விட்டார். அதனால் செபமாலை அவருடைய சைவசமைய சொந்தபந்தங்கள் அவரைத் தனிமைப்படுத்திவிட்டனர். அதனால் தனிமையிலிருந்த செபமாலை அவர்களுக்கு நல்ல உற்ற நண்பனாக அவருடைய கிறீஸ்தவ மதத் கோட்பாடுகளை வரவேற்று தானும் ஒரு கிறீஸ்தவராக மதம்மாறி அவருக்கு உறுதுணையாக இருந்த ஒரு நல்ல உள்ளம் கொண்ட மனிதர்தான் இந்த பத்தினாதர். இவரைப்போலவே சின்னப்பு (சின்னப்பொடி) அவர்களும் இவர்கள் மூவருக்கும் தங்களது வாழ்நாட்களில் ஒருமுறைகூட சண்டைசச்சரவுகளோ, கோபதாபங்களோ அல்லது ஏன் ஒரு சிறிய மனஸ்தாபம் கூட இவர்களிடையே வந்தது கிடையாது. அப்படி இவர்களுடைய நட்பு ஆழமாக இருந்தது. இப்படிப்பட்ட நட்பை இன்று காண்பது மிக மிக அரிதாகவே இருக்கிறது. இந்த மூன்று நண்பர்களுடன் செபமாலை அவர்களுடைய தம்பி முடியப்புவும் சேர்ந்து செபமாலை மாதா என்ற ஆலயத்தை உருவாக்க பலப்பல கஸ்டங்களை அனுபவித்தனர். அந்தக் காலத்தில் இவர்களுடைய வாயில் இருந்து வரும் வார்தைகள் அனைத்தும் கோவில் கோவில் கோவில் என்றுதான் இருந்தன. அந்தக் காலத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாததார ரீதியாக இவர்களிடத்தில் பெரிதாக ஒன்றும் இருக்கவில்லை. அப்படி இருந்தும் இவர்களுடைய அயராத சரீர உழைப்பினாலும் அவர்களிடத்தில் இருந்த தன் நம்பிக்கையின் காரணத் தினாலும் தான் இந்த செபமாலை மாதா கோவில் உருவானது. அதன் பின்னர் அந்த ஊர் மக்களுடைய உதவிகளினால் அந்தக் கோவில் பெரிதாக உருவானது.

அன்பானவர்களே! இந்த நல்ல உள்ளம் கொண்ட பத்திநாதர் அவர்கள் இரண்டு பெண் பிள்ளைகளுக்கும் ஒரு ஆண் பிள்ளைக்கும் தகப்பனாவார். அவர்களில் மகன் அருளப்பு என்பவர் கல்வி அறிவில் தேர்ச்சி பெற்றவராக இருந்தார். அவர் ஒரு பொலிஸ் அதிகாரியாக வரக்கூடிய சந்தர்ப்பம் கிடைத்தது. அன்றைய சமூக ஒடுக்குமுறை காரணமா அந்த வேலை அவருக்கு மறுக்கப்பட்டது. திரு. **<u>அருளப்பு</u>** என்பவர் **<u>பார்பறா</u>** என்பவரைத் திருமணம் செய்து **<u>யூவா, யூவாப், புஸ்பமலர், சின்னமலர்ப்புஸ்பம், பிறான்சீஸ்கா</u>** என்ற மூன்று பெண்பிள்ளைகளையும் **<u>தேவதாஸ்</u>** **<u>மரியநாயகம்</u>** என்ற இரண்டு ஆண் பிள்ளைகளையும் பெற்றெடுத்தார். துரதிஸ்டவசமாக திரு. அருளப்பு என்பவர் அவருடைய இளம் வயதில் அவருடைய துணைவியாரை மரணத்தில் இழந்துவிட்டார். அதுமட்டுமல்ல அவருடை இரண்டு மகன்களையும் அவர் பின் நாட்களில் மரணத்தில் பறி கொடுத்து விட்டார் என்பது வேதனையான செய்தி. அதன் பின்னர் அருளப்பு அவர்களும் மரணித்து மரணம் என்ற ஆழ்ந்த நித்திரையில் இருக்கிறார். ஆனாலும் மறுமையின் நாளில் இவர்கள் அனைவரும் உயிர்தெழுவார்கள் என்ற நம்பிக்கை தருவதாக இறைவன் நமக்கு வாக்குக் கொடுத்திருக்கிறார் அதனை நாம் நம்புவோமாக!

திரு. பத்திநாதருடைய பெண் பிள்ளைகளில் அன்னம்மா என்பவரும் ஒருவர். அன்னம்மா என்பவர் குரிசுமுத்து என்பவரைத் திருமணம் செய்து பிலோமினா, எலிசபெத் மற்றும் ஞானமலர் ஆகிய மூன்று பெண் பிள்ளைகளையும் மரியதாஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற ஒரு ஆண் பிள்ளையையும் இவர்கள் பெற்றெடுத்தனர். இவர்களில் மரியதாஸ் என்ற ஆண் மகன் சுவிஸ் நாட்டில் நீண்ட காலமாக வாழ்ந்து வருகிறார்.

திரு. பத்தினாதர் அவர்களுக்கு என்னும் ஒரு பெண்பிள்ளை இருக்கிறார். அவருடைய பெயர் திரேசம்மா. இவர் வலத்தீஸ் என்பவரைத் திருமணம் செய்தார். வலத்தீஸ் என்பவர் அருளப்பு அவர்களின் மனைவி பார்பறா அவர்களுடைய அண்ணன். அதேபோல திரேசம்மா என்பவர் அருளப்பு என்பவருடைய தங்கை அதாவது இவர்கள் இருவரும் மாற்றுத் திருமணம் செய்தவர்கள். இவர்களுக்கு **லூர்துநாயகம், டேவிற்அன்ரன், மேரிராணி, மேரிமரியம்மா (யசிந்தா), மேரிசிசீலிஜா (கமலா), கிறிஸ்ரீன்அம்மா (கலா)** ஆகிய பிள்ளைகளும் என்னும் இரண்டு ஆண்பிள்ளைகளும் இவர்கள் எனது ஞாபகம் சரியாக இருந்தால் அவர்களில் ஒருவருடைய பெயர் அன்ரன்அமலதாஸ். மற்ற குழந்தையுடைய பெயர் என்னால் அறியமுடியவில்லை. இந்த இரண்டு சிறுவர்களும் சின்னஞ் சிறுவயதில் மரணித்துவிட்டனர். அதனால் இவருடைய மற்றைய விபரங்களை என்னால் பெற்றுக் கொள்ள முடியவில்லை. அன்பானவர்களே! செபமாலை அவர்க ளுடையதும் பத்தினாதர் அவர்களுடைய நட்பினைப் போலவே அவர்களுடைய வாரிசுகளான பிள்ளைகளும் காலங்கள் பல கடந்தும் இன்றுவரை நல்ல நண்புடன்தான் இருந்து வருகின்றனர். பத்தினாதர் என்ற செபமாலையுடைய உற்ற நண்பன் அவருடைய பூமிக்குரிய வாழ்க்கையை முடித்துக்கொண்டு இன்று உயிர்தெழும் நம்பிக்கையுடன் மரணம் என்ற ஓய்வில் இருக்கிறார். இவரையும் செபமாலை அவர்களுடைய நினைவுநாள் மலரில் பதிவேற்றம் செய்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னப்பு (சின்னப்பொடி)



சின்னப்பு அவர்கள் செபமாலை அவருடைய ஒரு நல்ல நண்பன் இவரும் செபமாலை அவர்களும் எந்த விடயங்களானாலும் ஒளிவு, மறைவு இல்லாமல் பேசுவார்கள். அப்படி செபமாலை அவர்கள் இவரிடத்தில் நல்ல நம்பிக்கை வைத்திருந்த ஒரு நல்ல மனிதர்தான் இந்தச் சின்னப்பு. இவரும் செபமாலை, முடியப்பு, பத்தினாதர் அகிய நால்வராலும்தான் செபமாலை மாதா என்ற கோவில் வெள்ளாம்போக்கட்டி மண்ணில் உருவாகக் காரணமாக இருந்தவர்கள் என்றால் அதுதான் மறக்க முடியாத உண்மை. சின்னப்பு அவர்களும் செபமாலை அவர்களைப் போலவே இளைஞனாக இருந்த காலத்திலே நீண்ட தலைமுடி வளர்த்துக் கொண்டையும் மற்றும் அவர் தனது இரண்டு காது களிலும் கம்மலும் போட்டிருப்பார். **(அந்தக் காலத்தில் வசதியான வீட்டில் பிறந்த பெரும்பாலும் மூத்த பிள்ளைகளுக்கு இப்படிச் செய்யும் வளக்கம் எங்களுடைய சமுதாயதம்தில் இருந்ததாக சொல்வார்கள்).** சின்னப்பு அவர்கள் முதல் திருமணத்தின் முலமாக ஒரு ஆண் பிள்ளையையும் ஒரு பெண் பிள்ளையையும் பெற்றெடுத்தார். அதன் பின்னர் அவருடைய மனைவி காலமானதால் மறுபடியும் திருமணம் செய்து **இராயப்பு, பிலிப்பு, அருளப்பு, மரியதாஸ், ஜேசுதாஸ், ஞானப்பிரகாசம்** ஆகிய பிள்ளைகளைப் பெற்றெடுத்தனர். இவருடைய அருளப்பு என்ற மகன்தான் செபமாலை அவர்களுடைய ஓய்வுக்குப் பின்பு செபமாலை மாதா ஆலயத்தின் மூப்பராகக் கடமையாற்றி இருந்தார்.

சின்னப்பு அவர்களும் செபமாலை அவர்களும் நல்ல நண்பர்கள் என்பதற்கு எடுத்துக்காட்டாக நான் நேரில் பார்த்த ஒரு உண்மைச் சம்பவத்தை உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன் அதாவது சின்னப்பு என்பவர் இறந்து விட்டார் என்ற செய்தியை சொல்வதற்க்கா சின்னப்பு அவர்கள் பிறந்த அவரது சொந்த ஊரான அல்லாரை என்ற ஊரிலிருந்து ஒருவர் செபமாலை அவர்களுக்குச் சொல்வதற்காக வந்தார். அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொன்ன அந்த துயரமான செய்தியைக் கேட்டவுடன் செபமாலை அவர்கள் கோவில் வளவிற்குச் சென்று சாவுமணியை அடித்துவிட்டு, வீட்டிற்க்கு வந்து அவருடைய வேட்டியை உடுத்துக்கொண்டு அவர் தன்னுடைய மறைந்த நண்பன் சின்னப்பு வீட்டிற்குப் புறப்பட ஆயத்தமானார். அப்போது நானும் செபமாலை அப்புவுடன் புறப்பட்டு மரண வீட்டிற்குப் போனேன். செபமாலை அப்பு அவர்கள் கவலை அடைவார். எந்தச் சந்தர்ப்பத்திலும் அவருடைய கண்ணிலிருந்து கண்ணீர் வருவதே இல்லை. ஆனால் மரித்த சின்னப்பு அவருடைய கையைத் தனது இருகைகளால் இறுக்கமாகப் பிடித்து மனதுருகி நண்பா நீ இன்று போய்விட்டாய். நீபோய் அங்கே எனக்கும் ஒரு இடத்தைப் பிடித்துவை என்று சொல்லிக் கண்ணீர்விட்டு ஓ என்று அழுதார். அப்போதுதான் நான் முதல் தடவையாக செபமாலை அப்பு அவருடைய கண்ணிலிருந்து கண்ணீரைப் பார்த்தேன். அப்போது அங்கேகூடி அழுது கொண்டிருந்த பெண்கள் தங்களுடைய மரண ஓலத்தை பல மடங்கு கூடச்செய்து சத்தமாக அழுதார்கள். அன்பர்களே! செபமாலை அவர்கள் அமரர் சின்னப்பு அவர்களில் எவ்வளவு அன்பு வைத்திருந்தார் என்று உங்களால் புரிந்துகொள்ள முடிகிறதா? உண்மையிலே இவர்களுடைய இந்த உண்மையான நட்பு மறுமையிலும் யேசுக்கிறீஸ்துவின் ஆட்சியிலும் தொடரும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

செபமாலை அப்பு அவர்கள் தனது இறுதி நாட்களில் புற்றுநோய் என்ற கொடிய நோயின் தாக்கத்தால் தன்னுடைய உயிருக்காகப் போராடிக் கொண்டிருந்தார். அந்த நேரங்களில் நல்ல பல அன்புள்ளம் படைத்த உறவுகள் செபமாலை அப்பு அவர்களுடன் பேசுவதற்கும் பழகுவதற்கும் தினம் தினம் வருவார்கள். அப்படி வந்தவர்களில் ஒருவர் செபமாலை அப்பு அவர்கள் இறப்பதற்கு சில நாட்களுக்கு முன்பு அதாவது <u>**11.03.1989ம்**</u> ஆண்டு வந்த அவருடைய நண்பன் சின்னப்பு அவர்களுடைய பேரப் பிள்ளை <u>**இராயப்பு சாந்தா**</u> என்பவர் அவரிடம் தான் என்னும் சில நாட்களில் இறக்கப் போகிறேன். அதனால் என்னால் இன்று கடிதம் எழுதமுடியாத நிலையில் இருக்கிறேன் அதனால் எனக்கு ஒரு கடிதம் எழுதி உன்னால் தரமுடியுமா என்று கேட்டார். அதற்கு சாந்தா என்பவர் உடனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்மதித்து செபமாலை அவர்கள் சொன்னவற்றை எல்லாம் ஒரு கடிதமாக எழுதி அந்தக் கடிதத்தில் அவரும் தனது கையொப்பத்தை பதியவைத்து செபமாலை அப்பு அவர்களையும் அந்தக் கடிதத்தில் அவருடைய கையொப்பத்தை பதியவைத்து செபமாலை அப்பு அவர்களிடம் கொடுத்தார். அந்தக் கடிதத்தை நான் செபமாலை அப்பு அவர்களுடைய இந்த நினைவுநாள் மலரில் பிரசுரம் செய்துள்ளேன். செபமாலை அப்பு அவர்களும் **24.04.1989ம்** ஆண்டு தனது நண்பர்களான பத்திநாதர் மற்றும் சின்னப்பு என்ற இரண்டு நண்பர்களைப் போலவே மரணம் என்ற நித்திரையில் இருக்கின்றார்.

## (கோப்பாய் மணியம்)
## ஞானமுத்து



ஞானமுத்து, செபமாலை அப்பு அவர்களுடைய தம்பி. முடியப்பு என்பவருடைய மகன். இவருக்கு திரேசம்மா என்ற ஒரு தங்கையும் இருக்கிறார். இவர்கள் இருவரும் சிறு வயதாக இருந்தபோது அவருடைய தாய் **அன்னம்மா** என்பவரை மரணத்தில் பறிகொடுத்துவிட்டார்கள். அதனால் செபமாலை அப்பு அவர்களில் மிகவும் அன்பாக இருப்பார். இவர் கோப்பாய் ஊரைச் சேர்ந்த **சகாயராணி** என்ற பெண்ணைத் திருமணம் செய்து அவரது சொந்த ஊராகிய வெள்ளாம்போக்கட்டியில் மிகவும் சந்தோசமாக வாழ்ந்து வந்தார். இவர்கள் **றீற்றம்மா** என்று பெண்பிள்ளையும் **அன்ரன், றீகன், பிறேமன்** என்ற மூன்று ஆண் பிள்ளைகளையும் பெற்றெடுத்தனர். இவர் கோப்பாய் ஊரில் திருமணம் செய்ததால் அனேகமாக மக்கள் **கோப்பாய் மணியம்** என்று தான் இவரை அன்போடு அழைப்பார்கள். இவருடைய சந்தோசம் நீண்ட நாட்கள் நீடிக்கவில்லை. அவரது மனைவி சகாயராணி அவரது நான்காவது பிள்ளை பிறந்து சில மாதங்களில் இறந்துவிட்டார். அதனால் இவர் தன்னுடைய சின்னஞ்சிறு பிள்ளைகளுடன் மிகவும் கஸ்டப்பட்டார். பலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரை மறுதிருமணம் செய்யும்படி வற்புறுத்தி முயற்சி செய்தார்கள். ஆனால் அவர் அதை பிடிவாதமாக மறுத்துவிட்டார். அன்பானவர்களே! ஞானமுத்து தன்னுடைய இருபத்திநாலு வயது இருக்கும்போது தன் மனைவி சகாயராணியை மரணத்தில் பறிகொடுத்துவிட்டார். அவர் அந்த நாளிலிருந்து இன்றுவரை (2020ம் ஆண்டு இந்தப் புத்தகம் எழுதும்வரை கிட்டத்தட்ட எண்பத்தைந்து வயதைக் கடந்தும் தன் பிள்ளைகளின் நலனுக்காக திருமணம் செய்து கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அன்பானவர்களே திரு. <u>**ஞானமுத்து**</u> அவருடைய மனைவியின் மரணத்தின் பின்பு வெள்ளாம்போக்கட்டியிலுள்ள அவருக்குச் சொந்தமான காணி, நிலம், வீடு அனைத்தையும் விற்றுவிட்டு தன்னுடைய சின்னஞ் சிறு குழந்தைகளையும் மற்றும் அவருக்குச் சொந்தமான அனைத்தையும் எடுத்துக்கொண்டு தன் சொந்தபந்தங்கள் அனைவரையும் கண்ணீரில் நனையவிட்டு மனைவியுடைய சொந்த ஊராகிய கோப்பாய்க்கு குடிமாறி விட்டார். அன்றிலிருந்து தான் பிறந்த வெள்ளாம்போக்கட்டி மண்ணை படிப்படியாக மறந்து, இப்போது முற்றும் முழுதாக மறந்து விட்டார். ஆனால் செபமாலை மாதா திருநாளுக்காக அவர் தனது பிள்ளைகளுடன் மறக்காமல் கண்டிப்பாக வருவார். அன்பானவர்களே! செபமாலை அப்பு அவர்கள் ஞானமுத்து அவர்களைப் பற்றி பல விடயங்களை என்னிடம் சொன்னார். அவற்றில் ஒன்றை உங்களுடன் பகிர்ந்து கொள்ள ஆசைப்படுகிறேன். அது என்னவென்றால் மனைவி செத்த உடனே மறு மனைவி தேடும் ஆண்கள் வரிசையில் பிள்ளை களுக்காக தன்னுடைய வாழ்க்கையை வாழ்நாள் முழுவதும் அர்ப்பணித்த இவரைப்போல நல்ல மனிதன் இன்று எந்த மனிதனாலும் இருக்க முடியாதென்று சொல்லிப் பெருமைப்பட்டார். அன்பானவர்களே! செபமாலை அப்பு என்ன செய்தாலும் அதைக்காட்டிக் கொள்ளவே மாட்டார். ஆனால் அவர்களுக்காக மன்றாடுவது கடவுள் ஒருவருக்குத் தெரிந்தால் போதும் அவர் மூலமாக கடவுள் சம்மந்தப்பட்டவர்களுடைய கஸ்டங்களைத் தீர்ப்பார் என்று உறுதியாக நம்பி அவர்களுக்காக மன்றாடுவார். அன்பர்களே! செபமாலை அப்புவுடைய நினைவுநாள் மலரூடாக ஞானமுத்து அவர்களை நினைவு கூர்ந்ததிற்கு அவரில் செபமாலை அப்பு அவர்களில் வைத்திருந்த அன்பை உங்களுக்குச் தெரியப்படுத்துவதற்காக மட்டுமே எழுதுயிருக்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (முகமாலை பிள்ளை)
## <u>திரேசம்மா</u>



திரேசம்மா அவர்கள் ஞானமுத்து அவர்களுடைய தங்கை. தாயுடைய பிரிவு எப்படிப்பட்ட வேதனையைத்தரும் என்று செபமாலை அவர்களுக்கும் நன்றாகத் தெரியும் சிறு வயதில் **திரேசம்மா** அவர்களும் அவரது தாயை இழந்து தவிக்கும் தவிப்பை அனுதினமும் நேரில் பார்த்துக் கொண்டிருக்கும் செபமாலை அவர்களுக்கு இவரில் பற்றும் பாசமும் அதிகம் இருந்தது அவருக்குத் திருமண வயது வந்தபோது திருமணம் நடைபெற செபமாலை அப்பு அவர்கள்தான் காரணமாக இருந்தார். ஏனென்றால் செபமாலை அப்பு அவர்களுடைய மகன் ஆசீர்வாதம் அவர்களுடைய மனைவி மரியம்மாவுடைய அண்ணன் **தம்பையா** என்பவரைத்தான் திரேசம்மாவுக்கு திருமணம் செய்து வைக்கப்பட்டது. இவருக்குத் திருமணம் முடிந்த பின்னர் இவருடைய அண்ணன் ஞானமுத்து அவர்களைப் போலவே தான் பிறந்த வெள்ளாம்போக்கட்டி மண்ணை சிறிது சிறிதாக மறந்து விட்டார். ஆனால் இவர் தன்னுடைய உறவுகளுக்கு அன்பு காட்டி நேசிப்பது அவருக்கு அவரே நிகர் என்று சொல்ல முடியும். அவ்வளவுக்கு அன்பாக நேசிக்கக் கூடியவர். அன்பானவர்களே! அவரது கணவன் தம்பையா ஊருக்கு அதாவது முகமாலை என்ற ஊருக்கு இவர் குடிமாறிவிட்டார். அந்த நாட்களில் இருந்து இன்று வரை செபமாலை அப்பு அவர்கள் திரேசம்மாவை அவர்களை முகமாலைமகள் என்றுதான் கூப்பிடுவார். அதன் பின்னர் இவரை இங்குள்ள மக்கள் அனைவரும் அவருடைய பெயரை திரேசம்மா என்று கூப்பிடுவதில்லை. மாறாக **முகமாலைஅக்கா, முகமாலைமாமி, முகமாலை தங்கச்சி, முகமாலை அத்தை** என்ற அடைமொழி யுடன்தான் கூப்பிட்டு வருகின்றனர். மொத்தத்தில் இவருடைய சொந்தப் பெயர் **திரேசம்மா** என்பதையே மறந்துவிட்டனர். அன்பானவர்களே, திரேசம்மா, தம்பையா ஆகியோர்களுக்கு **<u>ஞானமலர், புஸ்பராணி, இராசேந்திரம், செபமாலையம்மா,</u>**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஞானப்பிரகாசம்,** **அன்ரன்றமோஸ்,** **எலிசபேத்தம்மா** ஆகிய ஏழு பிள்ளைகளைப் பெற்றெடுத்தனர். இவர்களில் எலிசபேத்தம்மா என்ற மகள் அருட் சகோதரியாக தன்னைத்தானே இறைவனுக்குத் ஒப்படைத்து எழையெழிய மக்களுக்காகத் தொண்டு செய்து வருகிறார். அன்பானவர்களே! செபமாலை அப்பு அவர்கள் மூன்று ஆண்டுகளுக்குமேல் மகள் பிலோமினா அவர்களுடைய முகமாலை வீட்டில் தங்கியிருந்த போது திரேசம்மா அவர்களைப் பற்றிய பல விடயங்களை எனக்குச் சொல்லித் தந்திருக்கிறார். அதிலிருந்துதான் எனக்கு செபமாலை அப்பு அவர்கள் முகமாலை மகள் சொல்லப்படும் திரேசம்மா அவர்களில் எவ்வளவு அன்பு வைத்திருந்தார் என்று என்னால் அறிய முடிந்தது. அவற்றை உங்களுக்குத் தெரியப்படுத்தும் நோக்கத்திற்காக இவருக்குத் தனித் தலையங்கம்போட்டு எழுதவேண்டும் என்று ஆசை எனக்கு ஏற்பட்டது. அன்பானவர்களே! திரேசம்மா அவர்கள் அவருடைய வாழ்கையில் நல்லபல செல்வங்களையும் நிறைந்த நல்ல வாழ்க்கையும் பெற்று நீண்டகாலம் வாழ்ந்தார். இப்படிப்பட்ட அருமையான வாழ்க்கை வாழ்ந்த திரேசம்மா அவர்கள் 2003ம் ஆண்டு அவரது உடலை விட்டு அவரது உயிர் பிரிந்து சென்றுவிட்டது. அவருடைய உயிரற்ற பூதவுடலை அவர் தந்தை முடியப்பு அவர்களுடைய வீட்டிற்கு எடுத்துவரப்பட்டு அவருக்கும் சொந்தமான கல்லறைத் தோட்டத்தில் அவரது தந்தை முடியப்பு அவர்களுடன் மரணத்தில் நித்திரை செய்கிறார். அன்பானவர்களே! நான் நம்புவதைப்போல நீங்களும் அவர் கடவுளுடைய நாளில் உயிர் பெற்று வருவார் என்று உறுதியாக நம்புவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டொமினிக்



டொமினிக் என்பவரை அன்புடன் இந்திரன் என்றும் பலர் கூப்பிடுவதுண்டு. இவரைப் பற்றியும் ஞானராஜா என்பவரைப் பற்றியும் செபமாலை அப்புவுடைய நினைவு நாள் மலிரில் ஏன் எழுத வேண்டும் என்று நீங்கள் நினைக்கலாம். அதற்கு ஒரு காரணம் இருக்கிறது. இவர்கள் இருவரும் வெள்ளாம்போககட்டி என்ற ஊரில் பிறந்து வளர்ந்தவர்கள் கிடையாது. இவர்கள் இருவரும் திருமண உறவின் மூலமாக எங்கள் ஊருக்கும் எங்களுக்கும் சொந்தமானவர்கள். ஆனால் இவர்களுடன் நான் பழகியபோது ஊர் உறவுக்காரர்களைவிட இவர்களுக்கு கூடுதலாக எங்களுடைய ஊரைப் பற்றியும் குறிப்பாக செபமாலை அப்பு அவர்களைப் பற்றியும் அதிகமாக அறிந்திருக்கிறார்கள் என்று என்னால் உணர முடிந்தது. அதனால் செபமாலை அப்பு அவர்களுடைய நினைவு நாள் மலரில் இவர்கள் என்னிடம் கூறியிருக்கும் சில குறிப்புக்களை உங்களுடன் பகிர்ந்துகொள்ள ஆசைப்பட்டு இவர்களைப் பற்றிய சில சிறு குறிப்புக்களை எழுதுகிறேன். முதலில் டெமினிக் என்னிடம் என்ன விடயங்களைக் கூறினார் என்று பார்ப்போம். நான் 2000ம் ஆண்டு இலங்கை வந்திருந்தபோது போர்ச்சூழல் காரணமாக யாழ்ப்பாணம் வரமுடியவில்லை. வவுனியாவுடன் நான் ஜேர்மன் திரும்பிவிட்டேன். அதற்கு முன்பு நான் டொமினிக் என்பவரை முதல் முறையாக கொழும்பில் சந்தித்தேன். இவரை நான் சந்திப்பதற்கு முன்பு இவரைப் பற்றிய பல நல்ல விடயங்களை எனது அம்மா, அம்மம்மா மூலமாகத் தெரிந்துவைத்திருந்தேன். அவைகளை எல்லாம் என்னால் சொல்ல முடியாது. அதனால் யுத்த காலங்களில் எனது அம்மா, அப்பு, அம்மம்மா ஆகியோர் தன்னந்தனியாக இருந்தபோது பல மற்றய நல்ல மனிதர்களைப் போலவே இவரும் பல உதவிகளை செய்தார். அதைவிட என்னுடைய தனிப்பட்ட சில பிரச்சனைகளையும் இவர் சரி செய்துதந்தார். அன்பானவர்களே! நான் அப்புவுடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைவு நாள் புத்தகத்தை எழுத ஆரம்பிக்கும்போது பலரிடம் பல குறிப்புக்களைச் சேகரித்தேன். அதேபோல இவரிடமும் சில குறிப்புக்களைக் கேட்டிருந்தேன். எனக்கு ஆச்சரியம் மிக்க பல குறிப்புக்களைத் சொன்னார். அதில் முக்கியமாக அவர் தந்த ஒரு குறிப்பை உங்களுடன் பகிர்ந்து கொள்ள ஆசைப்படுகிறேன் அது என்னவென்றால் இந்தப் பாடசாலையும் செபமாலைமதா கோவிலும் செபமாலை அப்பு இல்லை என்றால் இந்த ஊருக்கு வந்திருக்க வாய்பே இருந்திருக்காது என்று சொன்னார். நான் திரும்ப அவரிடம் திருமணத்தின் மூலமாக எங்களுடைய ஊருக்கு வந்த உங்களால் எப்படி எங்களுடைய ஊரைப் பற்றி இவ்வளவு தெரிந்து வைத்திருந்திருக்கிறீர்கள் என்று நான் கேட்டபோது, அவர் என்ன சொன்னார் தெரியுமா? அன்பர்களே! நான் திருமணம் செய்யும்போது அதாவது இருபது வருடத்துக்கு முன்பே எல்லாவற்றையும் அறிந்து வைத்திருந்தேன். அதைவிட நாங்கள் ஊரில் இல்லாத காலத்தில் செபமாலை அப்பு அவர்களிடம் நெருங்கிப் பழகியிருந்த காரணத்தால் பலவற்றை அறிய முடிந்ததென்று சொல்லியிருந்தார். செபமாலை அப்பு செய்த நல்ல பல விடயங்கள் ஊரும் உறவுகளும் மறந்து கொண்டிருக்கும் இந்த நாட்களிலும் எங்களுடைய பெரியம்மா மகள் புஸ்பராணி அக்காவைத் திருமண உறவின் மூலமாக சொந்தமாக வந்த இவர் நம் ஊரையும் உறவுகளையும் முக்கியமாக செபமாலை அப்பு அவர்களைப் பற்றியும் மறக்காமல் தெரிந்து வைத்திருப்பதை நினைத்து நான் சந்தோசப்படுகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானராஜா



அன்பானவர்களே! ஞானராஜா அவர்களும் எங்கள் ஊர் வெள்ளாம்போக்கட்டி மண்ணில் பிறந்தவர் கிடையாது. இவர் என்னுடைய தங்கை முறையான **மேரி சிசீலிஜா** என்பவரைத் திருமணம் செய்ததன் மூலமாக எங்கள் ஊருக்கும் எங்களுக்கும் சொந்தமானவர். இவரும் டொமினிக் அண்ணனைப் போல நம் ஊரையும் உறவுகளையும் நன்றாக புரிந்தும் அறிந்தும் வைத்திருக்கிறார். நாங்கள் ஊரில் இல்லாத காலத்தில் மற்றைய பல உறவுகளைப் போல வயதாகிய என் அப்பு, அம்மம்மா, அம்மா, ஆகியார்களுக்கு உதவியாக இருந்து நல்ல பல உதவிகள் செய்திருந்தார் நான் இவரை முதல்முதலாக 2002ம் ஆண்டு ஊருக்குப் போன போதுதான் பார்த்தேன். அதற்கு முதல் இவரைப் பற்றிய எல்லா விடயங்களையும் எனது அம்மா ஜெர்மன் நாட்டுக்கு வருமுன்பே கடிதங்கள் மற்றும் ரெலிபோன் மூலமாக தெரிந்துகொண்டேன். அன்பானவர்களே! பிலோமினா 2015ம் ஆண்டு ஜெர்மன் நாட்டில் இறந்தபோது அவருடைய விருப்பப்படி அவருடைய உடலை அவர் தந்தை செபமாலை அப்பு அவர்களுக்குப் பக்கத்தில் அடக்கம் செய்தோம் அல்லவா? அதற்காக **லூர்துநாயகம்** என்ற எங்கள் அண்ணனுடன் இவரும் தங்களுடைய அனைத்து வேலைகளையும் விட்டுவிட்டு இரவு பகலாக பல நாட்கள் எங்களோடு பாடுபட்டவர் என்பது நாங்கள் இங்கு நினைவுபடுத்த விரும்புகிறோம். அன்பானவர்களே! அப்புடைய இந்த நினைவு நாள் மலருக்காக நான் பலரிடம் பல செய்திக் குறிப்புக்களைக் கேட்டிருந்தேன். அதேபோல இவரிடமும் கேட்டேன். எங்கள் ஊரில் பிறந்து வளர்ந்தவர்கள் மறந்ததும், மறந்து கொண்டிருக்கும் பல செய்திகளை மறக்காமல் இவர் என்னிடம் கூறியிருந்தார். 2015ம் ஆண்டு என்று நினைக்கிறேன் எனக்கு **திரு. ஞானராஜா** அவர்களிடம் இருந்து எனக்கு ஒரு ரெலிபோன் வந்தது. அதில் அவர் என்னிடம் பல விடயங்களைப் பேசினார். அது என்னவென்றால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளாம்போக்கட்டி அரசினர் பாடசாலை செயலிழந்து வெறும் கட்டடங்கள் மட்டுமே காணப்படுகிறது. எல்லோரும் அறிந்த செய்தி. அது மீண்டும் இப்போது பாலர் பாடசாலையாக உருவாகி இருக்கிறது. அங்கே படிக்கும் பிள்ளைகளுக்கு ஊர்ந்து திரியும் பூச்சி, புழுக்களும் மற்றும் சிறு சில பிராணிகள் உள்ளே வருவதால் கஸ்டப்படுகின்றனர். அதனால் பாடசாலையைச் சுற்றிப் பிள்ளைகளுடைய பாதுகாப்பிற்காக கம்பி வலையால் வேலி அடைக்க வேண்டும். அதனால் அரசாங்கம் இரும்பு வலை வேலி அடைப்பதற்கு சில உதவிகளைச் செய்வதாகச் சொல்லி யிருக்கிறார்கள். அதனால் நீங்கள் சந்தோசமடைவீர்கள் என்று சொன்னார். நான் ஏன் என்று கேட்டபோது இது உங்கள் அப்பு செபமாலை அவர்களால் ஆரம்பிக்கப்பட்டது அது புனரமைக்கும்போது சந்தோசமடைவீர்கள் என்று சொன்னார். அன்பானவர்களே! பாடசாலை இல்லை என்றான போதிலும், அதை அழியவிடாமல் இன்று பிள்ளைகளுக்கு கல்வி புகட்டும் ஒரு நிலையமாக மாறி இருப்பது சந்தோசமே என்று நான் நினைக்கிறேன். அன்பானவர்களே! ஊர் உறவுகளைவிட செபமாலை அப்பு அவர்களுடைய செயல்கள் எல்லாவற்றையும் அந்த ஊர் மக்களிடம் இருந்துதானே ஞானராஜா கேட்டறிந்திருப்பார். அன்பானவர்களே! வெள்ளாம் போக்கட்டி ஊரின் பெருமைமிகு அடையாளங்களாகக் காணப்படும் செபமாலை மாதா கோவில், பாடசாலை இரண்டாலும் செபமாலை அவர்களுக்கு மட்டுமல்ல, ஊர் மக்கள் அனைவருக்கும் பெருமை என்பதை நீங்கள் எல்லோரும் மறந்துவிடக்கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எங்கள் பார்வையில் செபமாலைத் தாத்தா



செபமாலையின் பேத்தி
றெஜி பெனான்டோ நீற்றம்மா

கள்ளம் கபடம் இல்லாத வெள்ளை
உள்ளம் கொண்ட பண்பாளர்
பெண்ணிய இறைத்தந்தையின் கருத்து
பொதிகின்ற நற் பொருள்
நிறைந்த மனிதரையும், ஒரு வழியின்
செல்ல வைக்கும் வலிமை கொண்டவர்
இரு பெரும் முதுமையைத் தரும்
வயது வந்தும் யார் மனதையும்
புண் படும் படி பேசவோ
நடந்து கொள்ளவோ தெரியாத
மனிதர்
மிகப் பெரும் பக்திமான்
ஆகையால் தான். தன் வலிமைக்கு
இருந்த வரை, தான் விரும்பி ஏற்றுக்
கொண்ட மத அடையாளங்களைக்
காப்பாற்றியும் அதன் வழிமுறைகளுக்கு
அடைக்கலமாகவும், வழிபடவும் வேண்டும்
என்ற ஓர் நோக்கத்தால்
தன் வசதிக்கேற்பட்டு சிறு ஆலயம்
ஒன்றை தன் வாழ்விடத்திலேயே
அமைத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் சக்தி இருக்கும் வரை
அடிமைப்பாடு பட்டுக் கைப்பற்றித் தன்
உரிமை காரணமாக அந்தச் சக்தியுடைய
இப்படைத்து! இயல்வாள்.

எவ்வளவோ இச் சமூகத்தின்
உற்று நோக்கும் பல விஷயங்களை
அவன் மனித இனத்தின் இழிந்து!
தனித் தன்மை வாய்ந்தவனாக —
மாறிவிட்டான்
செயலானவர் நாதத்தனைத் தூற்று வந்த
நெடு நாட்டு ஏற்றைக் கடக்க காண
முடியாது அந்தக் கிராமத்தில்

இப்போதுள்ள இந்தச் சமுதாயத்தில்
இப்படிப்பட்ட மனிதர்களைக் காண்பது
என்பது அரிதிலும் அரிது!
நீ மேலும்
நிறைந்த இச் சமூகத்தின் அநீதியும்
போல நீ தான் இருப்பாள்

தனக்கென்று வாழாது பிறர் நலம்
பேணலும் உதவுதலும் வேண்டும்
என்ற நல் மனமுள்ள மனிதனாய்
போற்றுவதில் பெருமை அடைவோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பு உண்மையான அன்பை
உங்களிடம் பெற்றதனால் போலா
இரக்கமானவ புரிந்து! சொன்னாலும் பக்குவம்
உங்களிடம் இருந்து கற்றுக்கொண்டேன்
அந்த போகாத போனா, இந்த நிக்காத போனா
அவர்க்கெட்ட பழகாத போனா என்றும்
இவ்வொன்று சொன்னாக் கொண்டும், ஆயிரம்
வாழ்க்கை சூட்சுமங்கள் இருப்பதை
என் வாழ்வான இவ்வொரு உயிர் எதும்
போதும் உணர்ந்து! கொண்டேன்
உங்கள் அன்பான கட்டளைகள்
என் வாழ்வை வழி நடத்தும்,
மகிழ்ச்சியாக இன்று வாழ்கின்றேன்
யாரும் வாழும் போதே வாழ்த்தாத
இந்த உலகில் இவன் மாத்த
பிரியும் நினைவு கடமை செய்வது
சாதனை காணுமென
இல்லா மனிதாபிமானி தூய்மையான
நேர்மையான வாழ்வுக்கு -
இதுவே சான்று!
உங்கள் புகழ் என்றும் மேலும்
வளர வாழ்த்தும் உங்களால்
வளர்க்கப் பட்ட பேத்தி

இவ்வண்ணம்!
ஜெகதீஸ்வரன் பேத்தி
இலக்கியா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் தென்மராட்சி, கொடிகாமம் கச்சாயூரில் தோன்றிய செபமாலை



## செபமாலையின் பேரன் திரு. வில்லியம்

உன் சொத்தான பெரிநிலத்தை கொடுத்து செபமாலை மாதா ஆலயத்தை தோற்றுவித்த செபமாலை.
ஓர் இரு கிறிஸ்தவர்களை சேர்த்து பல கிறிஸ்தவர்களை உருவாக்கிய செபமாலை

ஓர் ஆண்டல்ல ஈராண்டல்ல முப்பத்தைந்து ஆண்டுகள் செபமாலை ஆலயத்தின் மூப்பராக (முதல் அங்கியத்தாரக) பராமரித்து செயல்பட்ட செபமாலை

உன் தலைமகன் ஞானப்பிரகாசத்துடன் ஆறு குழந்தைச் செல்வங்களைப் பெற்றெடுத்தாய்.
உன் அன்பான மகள் பெயர்தான் பிலோமினா அதே பெயர் கொண்ட பிலோமினா என்ற மூத்த மருமகளையும் தேர்ந்தெடுத்தாய்.
உன் தலைமகன் ஞானப்பிரகாசத்தை அப்பையா என்றும் முதல் பிறந்த முத்து என்றும் செல்லமாக அழைத்திடுவாய்
அப்பு என்று அன்பாக அழைத்திடுவோம் நாம் தப்பு ஏதும் செய்தாலும் எந்தை தலைமகனின் பேரப் பிள்ளைகள் தானே என்று சிரித்த முகத்துடன் அரவணைப்பாய்
உன் சிரித்த முகம் நேர்மைக்குணம் என்றும் மறக்கவே முடியவில்லையே செபமாலை அப்பு,
உன் மகன் மருமகள் குடும்பச் சச்சரவு ஏற்பட்டால் உடன் வந்து சமரசம் செய்திடுவாய்
முதுமை அடைந்து நடக்க முடியாத தள்ளாத வயதிலும் கோல் ஊன்றிய நிலையில் அடுத்த ஊரில் உள்ள மூத்தமகனின் பேரப்பிள்ளைகள் மறக்காமல் சந்தித்து மகிழ்ந்திடுவாய்.
உன் மூத்தமகனின் ஒன்பது பேரப்பிள்ளைகள் நாம் எத்தனை ஆண்டுகள் சென்றாலும் மறக்க முடியவில்லை. என்றும் ஞானப்பிரகாசம் செபமாலையின் நாமம் வாழ்க!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பல மனிதர்களுடைய அன்பைச் சம்பாதித்த என்னுடைய அன்புள்ள அப்பு



செபமாலை அப்பு அவர்களுடைய உறவுமுறை கொண்ட நான் அவருடைய மகள் பிலோமினா வுடைய இளைய மகன் மரியதாஸ் நான் எனது அப்புவைப் பற்றிய சிறு குறிப்பை சொல்ல ஆசைப்படுகிறேன்.

அன்பானவர்களே நான் என்னுடைய ஒன்பதாவது வயதில் [1988] ஆண்டு ஜெர்மனி நாட்டுக்குப் போய் விட்டேன் நான் என்னுடைய ஒன்பதாவது வயதுவரை எனது அம்மா அம்மம்மா அக்கா அப்பு ஆகியோர்களுடன் வாழ்ந்து வந்தேன் நான் வசிக்கும் நாட்டினில் மிகவும் உக்கிரமாகப் போர் நிலவியது அந்தப் போர்காலங்களில் என்னை எனது அப்பு மிகவும் கண்ணும் கருத்துமாகப் பாதுகாத்து வந்தார் நான் போர் சூழலில் வாழ்ந்தாலும் அந்தப் பயம் எனக்கு தெரியவில்லை காரணம் என்னை அவர்கள் அந்தளவுக்குப் பாதுகாத்து வந்தார்கள் அது மட்டுமின்றி என்னுடைய வாழ்க்கையில் நான் பார்த்தது இல்லை நான் இலங்கையில் வாழ்ந்த போது [illegible] [illegible] [illegible] அப்படி சில சமயம் [illegible] என்றால் நான் கஷ்டப்படுவதைவிட என்னுடைய அப்பு மிகவும் கஷ்டப்படுவார் என்னுடைய அப்பு இரவில் தன் பக்கத்தில் இருந்து கதைகள் பல சொல்வார் அந்த கதைகள் அனைத்திலும் மனிதர்கள் எப்படி வாழவேண்டும் எப்படி வாழக்கூடாது என்பதாகவே இருக்கும் சில சமயம் தன் சொந்தக் கதையும் சொல்வார் என்னில் அதிகளவான அன்பு வைத்திருந்த எனது அப்பு நான் வீட்டை விட்டு ஜெர்மன் வரும்போது விட்ட கண்ணீர் இன்றும் என் மனதை வாட்டுகிறது

இப்படிக்கு பேரன்
மரியதாஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடவுள் சொல்லும் ஆறுதல் வார்த்தைகள்

அன்பானவர்களே! மனிதனிடம் பணம், பொருள், இன்பங்கள், துன்பங்கள், நிம்மதி, சந்தோசங்கள், துக்கம், துயரம் போன்ற எல்லாவற்றையும் இழந்தாலும் அவற்றை மீண்டும் பெற்றுக்கொள்ளவும் அடையவும் முயற்சிகள் செய்தால் நிட்சயம் முடியும். அவனால் அவன் தன்னுடைய ஜீவனை அதாவது உயிரை இழந்தால் பணம் பொருள் செல்வம் அவனிடத்தில் கொட்டிக் கிடந்தாலும் அவனால் அவனுடைய போன அந்த ஜீவனைத் திரும்பவும் பெற்றுக்கொள்ள முடியாது. ஏனென்றால் அந்த ஜீவனை கடவுள் மனிதனுக்குக் கடனாக அதாவது இரவலாகக் கொடுத்திருக்கிறார். அத்தியாயம் 2ம் அதிகாரம் 7ம் வசனம் இப்படிச் சொல்லுகிறது. மண்ணால் மனிதனை உண்டாக்கி அவன் நாசினில் கடவுள் தன்னுடைய ஜீவ சுவாசத்தை ஊதினார். அப்போது அவன் ஜீவ ஆத்துமாவாகினான் என்று. கடன் கொடுத்தவன் தான் கொடுத்த கடனை ஒருநாள் திருப்பிக் கேட்பான் அல்லவா?. ஆனால் இன்று அதனைப் பல மனிதர்கள் மறந்து விடுகின்றனர். ஆனால் கடன் கொடுத்த கடவுள் அதை மறப்பானா? இல்லை. அவன் அதை ஒரு நாள் கேட்பான். நாம் கொடுக்காவிட்டாலும் அவன் அதை எடுத்துவிடுவான். அப்போது எங்களால் ஒன்றுமே செய்ய முடியாமல் போய்விடும்.

ஆம் அன்பானவர்களே! அப்படியானால் பிரிந்த அந்த ஜீவன் எங்கு செல்கிறது. அதையும் கடவுள் தன்னுடைய வேதப்புத்தகத்தில் எழுதி வைத்திருக்கிறார். அவை என்னவென்றால் பிரசங்கி 12ம் அதிகாரம் 7ம் வசனம் இப்படிச் சொல்லுகிறது மண்ணால் தான் கடவுள் மனிதனை உருவாக்கினார். அதனால் மண்ணானது அது தந்த மண்ணுக்கே போகிறது. அதாவது நாம் மரித்துவிட்டால் எமது உயிரற்ற உடலை மண்ணில் புதைத்துவிடுவோம் அல்லவா? அதைத்தான் கடவுள் சொல்லுகிறார். அதே போல மண்ணால் உருவாக்கிய அந்த உடலுக்கு கடவுள் தன்னுடைய ஜீவ சுவாசத்தைத் தந்து உயிர்பெறச் செய்தார் அல்லவா அந்த உயிர் அது தந்த தேவனிடத்தில் போய்விடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதனுடய உடலுக்கும் உயிருக்கும் என்ன நடக்கும் என்று தன்னுடைய வேதப் புத்தகத்தை எழுதி எங்களுக்குத் தந்திருக்கிறார் அன்பானவர்களே! கடவுளிடம் திரும்பப்போன அந்த ஜீவன்களை எல்லாம் அந்தக் கடவுள் என்ன செய்யப் போகிறார். அதையும் அவர் தெள்ளத் தெளிவாக எழுதி எமக்குத் தந்திருக்கிறார் அதாவது எசேக்கியேல் 18ம் அதிகாரம் 4ம் வசனம் இப்படிச் சொல்லுகிறது அதாவது உயிர்கள் எல்லாம் என்னுடையது. (அதாவது கடவுளுடையது) பாவமுள்ள ஆத்மா சாகும் என்று கடவுள் தன்னுடைய வேதத்தில் எழுதி நமக்குத் தந்திருக்கிறார். பல மனிதர்கள். ஆத்மாக்கு அதாவது உயிருக்கு அழிவில்லை என்று சொல்வார்கள். அதில் பாதிதான் உண்மை. மிகுதி பொய். அதாவது இதனுடைய அர்த்தம் மனிதன் கடவுளுடைய குணங்களாகிய அன்பு, இரக்கம், பாசம், நேசம், ஈவு, கொடை போன்ற இரக்கக் குணங்களை மற்றைய சக மனிதர்களுக்குக் காட்டவேண்டும். மிக மிகக் கொடுரமான பாவங்களைச் செய்கிற மனிதர்களுடைய ஆத்மாவை அதாவது அவர்களுடைய உயிரை கடவுள் தன்னுடைய உயிர்தெழுப்புதலின் நாளில் அவர்களை உயிர்தெழச் செய்யாமல் அவர்களுடைய ஜீவனை மறுபடியும் மரணிக்கச் செய்துவிடுவார். அதனால் மற்ற மனிதர்கள் சொல்வதுபோல அல்லாமல் ஆத்மாவும் சாகும். அதாவது அழிந்துவிடும் ஆனால் மற்றைய ஜீவன்களை அவர் மறுபடியும் உயிர்பெறச் செய்து வாழவைப்பார். கடவுள் சொல்வது என்றுமே பொய்யாகாது.

அன்பானவர்களே! பாவம் செய்யாத மனிதன் இந்த உலகத்தில் யாருமே இல்லை அதனால் பாவகுணமுள்ள மனிதன் என்றால் மனித இனம் அனைத்தையும் கடவுள் மரணிக்கச் செய்துவிடுவர் என்று உங்களுக்கு எண்ணத் தோன்றும் அல்லவா? அதற்கும் கடவுள் நமக்குப் பதில் தந்திருக்கிறார். அதாவது யோவான் 5ம் அதிகாரம் 22ம் வசனம் இப்படிச் சொல்கிறது. மரித்த நீதிமானும் அநீதிமானும் அதாவது நல்லோரும் தீயோரும் முடிவில் உயிர் பெறுவார்கள் என்று கடவுள் தன்னுடைய புத்தகத்தில் எழுதிவைத்துள்ளார். நீதிமான் என்றால் நல்லவர்கள். அவர்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிர்தெழுப்பப்படலாம். இது நியாமான செயல். ஆனால் அநீதிமான் என்றால் தீய அல்லது கெட்ட செயல்களைச் செய்பவர்கள். அப்படியானால் இவர்களும் மறுமையில் உயிர்த்தெழுப்பப்படுவார்களா? எங்கள் மனதில் எண்ணத் தோன்றும். ஆம் கடவுள் அப்படித் தான் தன்னுடைய புத்தகத்தில் எழுதச் சொல்லி இருக்கிறார். அநீதிமான் என்றால் தீயவர்கள். அவர்களுக்கும் உயிர்தெழுதல் உண்டா? என்று எங்களுக்கு எண்ணத்தோன்றும் அல்லவா? ஆம் அது என்னவென்றால் அவர்கள் தெரிந்தோ, தெரியாமலோ சில சிறிய பாவங்களைச் செய்திருப்பார்கள். அவர்கள் செய்யும் அந்தத் தவறுகள் தவறென்று உணர்ந்து வருந்தி, திருந்தி கடவுளிடம் மன்னிப்புக் கேட்டால் அந்தத் தவறுகளினால் மற்றவர்களுக்குத் தீமை விளைவிக்கவில்லை என்று கடவுள் பார்வையில் அவர் சரி என்று தெரிந்து கொண்டால் அவர்களுடைய பாவங்களையும் தவறுகளையும் கடவுள் மன்னித்து அவர்களுக்கு மறுபடியும் உயிர்தெழுப்புதலைத் தருவதாக வாக்குத் தந்திருக்கிறார். இப்படி பல நல்ல ஆறுதல்தரும் வார்த்தைகளை கடவுள் மறக்காமல் நமக்குத் தந்திருக்கிறார்.

அன்பான மக்களே! யேசுவால் தன் சீசர்களுக்கு கற்பிக்கப்பட்ட பரலோக மந்திரத்தில் கடவுள் நல்லவர். அவர் யார்? அவர் பெயர் என்ன? அவர் இந்த மனித குலத்திற்க்கு என்ன செய்தார்? அவருடைய அரசாட்சி விண்ணகத்தில் எப்படி நடக்கிறதோ அதேபோல பூமியிலும் செய்வதற்காக அவர் செய்யும் ஏற்பாடு என்ன? எனியும் என்ன செய்யப் போகிறார்? என்ற எண்ணற்ற நல்ல விடயங்களை எங்களுக்குத் தந்திருக்கிறார். ஆனால் நாம் எல்லாம் இவற்றை செய்யவிடாது கடவுளின் எதிரியாகிய சாத்தான் எங்களை தடுத்துவிடுவான். ஆனால் யேசுவைப் போலவே நாமும் அவனுக்கு எதிர்த்து நின்றால் யேசுவைப் போலவே நாமும் கடவுளுடைய அன்பை ருசித்துப் பார்க்கமுடியும். பைபிளில் இருந்து என்னும் ஏராளமான நல்ல செய்திகள் இருக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரோமர் 6ம் அதிகாரம் 5ம் வசனம் அதில் சொல்லப்பட்ட நல்ல செய்தி என்னவென்றால் யேசு மரித்து பின் உயிர்பெற்று எழுந்தது உண்மை என்று நாங்கள் இவ்வளவு காலமும் நம்பி விசுவசித்திருந்தால் நாங்களும் மரித்து உயிர்தெழுவோம் என்று அப்போஸ்தலன் பவூலைப்போல நாமமும் நம்புவோமாக. அன்பானவர்களே! கடவுள் வாக்கு என்றுமே பொய்யாகாது. யேசுவுக்கு அவருடைய மரணத் தீர்ப்பை பெற்றுக் கொடுப்பதற்காக எதிரிகள் பல பொய்யான குற்றச்சாட்டுக்களை வைத்தார்கள். அதில் முக்கியமான ஒரு குற்றச்சாட்டு என்னவென்றால் பொந்தோந்தியோப் பிலாத்து என்ற அன்றைய ஆளுனர் கேட்ட ஒரு கேள்வி உங்களுக்கு ஞாபகம் இருக்கும் என்று நம்புகிறேன். அது என்னவென்றால் நீ இராசாவா என்று கேட்டான். அதற்கு யேசு சொன்னார் பதில். ஆம்! நீரே சொல்லிவிட்டீரே. நான் இராசாதான் என்று சொன்னார். அதற்காக அங்கே இருந்த யேசுவின் எதிர்ப்பாளர்கள் பார்த்தீரா இராசனே இவன் தேவதூசணம் சொல்லுகிறான். இவனை கழுமரத்தில் ஏற்றிக் கொலை செய்துவிடுங்கள் என்று கூச்சல் போட்டார்கள். அதனால் அந்த ஆளுனர் யேசுவுக்கு மரணதண்டனை கொடுத்துத் தீர்ப்பழித்துக் கொலை செய்தார். அதன்பின்னர் அவர் உயிர்த்தெழுந்தார்.

அன்பானவர்களே! யேசுக்கிறீஸ்த்து இதுவரைக்கும் இராசவாக ஆட்சிசெய்யவில்லை. அப்படி இருக்கும்போது அவர் ஏன் தான் ஒரு இராசா என்று தன்னைச் சொன்னார். ஏனென்றால் அவருடைய இராச்சியம் அப்போது வரவில்லை. ஆனால் அவருடைய இரண்டாவது வருகையின்போது அவர் ஒரு இராசாவாகத்தான் வருவார். அப்படி அவர் இராசாவாக வந்து இந்தப் பூமியை ஆழுகை செய்வார். அப்படி அவர் இராசாவாக வந்து அரசாட்சி செய்தால் எப்படி இருக்கும் இந்தப் பூமி. அதையும் வேதாகமத்தின் கடைசிப் புத்தகமாகிய வெளிப்படுத்தல் 21ம் அதிகாரம் 1ம் வசனத்தில் இருந்து 4ம் வசனம் இப்படிச் சொல்லியிருக்கிறார். அதாவது யேசுவுடைய புதிய பூமியில் அவருடைய அரசாட்சியில் துன்பம் இருக்காது, துயரம் இருக்காது, வலி இருக்காது,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழையவை அதாவது இப்போது இருக்கிற அனைத்தும் இருக்காது என்று நம் எல்லோருக்கும் வாக்குறிதியை அவர் தந்திருக்கிறார். அன்பானவர்களே! கடவுள் பொய் சொல்ல மாட்டார். அதனால் இவைகள் அனைத்தும் மெய்யாகவே மெய்யாகவே நடக்கும். இவையனைத்தும் எங்களுக்கு மட்டுமல்ல, மனித குலத்துக்கே மகிழ்ச்சியான செய்தி அல்லவா.

இப்படி மனிதகுலத்திற்கு ஏராளமான நற்செய்திகளை தன்னுடைய வேதப் புத்தகத்தின் மூலமாக எங்களுக்குத் தந்திருக்கிறார். அதற்காக நாம் கடவுளுக்கு நன்றி கூறுவோம்.

அன்பானவர்களே! நான் இத்துடன் கடவுள் நமக்குச் சொல்லும் ஆறுதல் வார்த்தைகள் என்ற விடயத்தை நிறைவு செய்து, அமரர் திரு. செபமாலை அவர்களுடைய இந்த நினைவுநாள் மலரையும் நிறைவு செய்கின்றேன்.

**நன்றி**

அன்புடன்
**எட்வேட் ஜேசுதாசன்**
ஆன்ஸ்பேர்க், ஜேர்மனி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி சொல்லி வாழ்த்துகின்றோம்



அன்பான எங்கள் அன்புச் சொந்தங்களே! செபமாலை அப்பு தனது முதுமையின் காரணமாக சாவகச்சேரில் உள்ள வீட்டில் ஓய்வெடுத்த காலப் பகுதிகளில் எங்களுடைய அன்பான பல நண்பர்கள், உறவினர்கள், சொந்தங்கள் மற்றும் செபமாலை அப்புவின் நலம் விரும்பிகள் எனப் பலர் ஒவ்வெரு நாளும் செபமாலை அப்புவைப் பார்ப்பதற்காகவும் பேசுவதற் காகவும் சுக நலம் விசாரிப்பதற்காகவும் வருகைதந்து அவரைச் சந்தோசப்படுத்தி னார்கள். இவை மட்டுமல்ல இலங்கையில் நடைபெற்ற கொடுமையான யுத்தத்தால் இவர்கள் பாதிக்கப் பட்டபோதும் பின்பு புற்றுநோயினால் அவர் பாதிக்கப்பட்டு தன் வாழ்நாட்களின் இறுதிக் கால கட்டத்தினை நினைத்து கஸ்டப்பட்ட போதும் நீங்கள் அனைவரும் அவருக்கு உறுதுணையாக இருந்து அன்புகாட்டி, அரவணைத்து, ஆறுதல்கள் சொல்லி செபமாலை அப்புவுவைச் உச்சாகப்படுத்தி சந்தோசப்படுத்தினீர்கள். இவை மட்டும் அல்ல, அவருடைய மரணம் கொடிய யுத்தத்தின் மத்தியில் நடைபெற்றபோதும் நீங்கள் அனைவரும் உங்கள் உயிர்களைத் துச்சமென மதித்து, வருகைதந்து அவருடைய உயிரற்ற பூதவுடலுக்கு அஞ்சலிகளையும் செலுத்தி அவருடைய நல்லடக்கத்திற்கு வருகையும் தந்து நலமே சிறப்பித்திருந்தீர்கள். என் அன்பிற்குரிய சொந்தங்களே! இவற்றோடு என்னும் பலர் செபமாலை அப்புவுக்கும் அவருடைய குடும்பத்தினருக்கும் எண்ணற்ற பல உதவிகளைச் செய்திருக்கிறீர்கள். அவர்கள் அனைவருக்கும் நாம் இந்த வேளை நினவுகூர்ந்து வாழ்த்துகிறோம். அன்பானவர்களே! உங்கள் அனைவருக்கும் ஆண்டவன் பெயர் பணிந்து எங்கள் இதயத்தின் ஆழத்தில் இருந்து வரும் அன்பு வார்த்தைகளால் மனமார்ந்த நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்து நாம் உள்ளம் மகிழ்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பானவர்களே! இவற்றையெலாம் விட உங்களில் பலர் செமமாலை அவர்களுடைய இந்த நினைவு மலர் எழுதுவதற்கு செபமாலை அவர்களுடைய நல்ல பல குறிப்புக்களையும் வேறு பல உதவிகளையும் தந்து உதவினீர்கள். அதனால் அவர்களுக்கும் இந்த நினைவு மலரூடாக செபமாலை அப்பு அவர்களுடைய சொந்தங்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து, உதவிக்கரம் கூப்பி உதவிகள் செய்த நல்ல உள்ளங்கள் கொண்ட அனைவருக்கும் அத்துடன் இம்மலரைத் தொகுத்து அச்சுப்பதிப்புச் செய்து தந்த **ராஜீ பதிப்பகத்தினருக்கும்** எனது மனமார்ந்த நன்றிகளை இருகரம் கூப்பித் தெரிவித்துக்கொள்கிறோம்.

அன்புடன்
**எட்வேட் ஜேசுதாசன்**
Arnsberg. Germany.
02.04.2021




அச்சுப்பதிப்பு:-
RAJE druck
ராஜீ பதிப்பகம்
Neustraße 53, 58256 Ennepetal. Germany.
Tel.: 02333/602796 Mobil: 01729567646
www.rajedruck.de info@rajedruck.de




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர். திரு. செபமாலை அவர்களின் வம்சாவழி

**செபமாலை மேரி (சின்னத்தங்கம்)**

↓

ஞானப்பிரகாசம்
+
பிலோமினா
↓
நவம்
செல்வராஜா
வில்லியம்
பூபதி
இராஜசுலோசநாயகம் (வவா)
தாசன் (இறந்துவிட்டார்)
தோமஸ்
மேரிக்கறேஸ் லூமினா
லூர்த்துநாயகம்

ஆசீர்வாதம்
+
மரியம்மா (குணம்)
↓
சுவம்பதி (ராசா)
பிரான்சீஸ் சேவியர்
இருதயநேசன்
அருள்நேசம்
ஜெபநேசம்

**செபமாலை மேரி மரியம்மா**

↓

| |
|---|
| பிலோமினா<br>+<br>எட்வேட்<br>↓<br>ஜேசுதாசன்<br>றீற்றம்மா<br>மரியதாஸ் |

| |
|---|
| மரியநாயகம்<br>+<br>ஜெயசீலி<br>↓<br>கிறிஸ்ரீன் விம்ஸி<br>குயின்சி |

| |
|---|
| பூரணம்<br>+<br>நவரட்ணம்<br>↓<br>ஜேன் ஜெமினா<br>ஜெபநேசன்<br>ஜோணஸ் |

| |
|---|
| அருளானந்தம்<br>+<br>மேரி லூசியா<br>↓<br>அலெக்சனா<br>கிளவுடியா<br>மரீனா |

| |
|---|
| ஜெபறஞ்சிதம்மா<br>(சிறுவயதில் இறந்துவிட்டார்) |


மாநகர சபை
16 JUN 2023
தாபனப்பகுதி
பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org